
மஞ்சள் ஆறு
சாண்டில்யன்

...ழுந்து தர்மத்தின்,
...ங்களை வீழ்த்தி விட்டது.

...ழுவதும் பெரும் சாகஸச்
...யில், 80 போர்க்காயங்கள்
...கீர்த்திக்கும் அத்தாட்சி

...தையை இந்த 'மஞ்சள்
...பெருமையடைகிறேன்.
...படி ஒரு மகாவீரன் நமது
...நினைத்துப் பெருமிதம்
...றேன்.

...டமான சரித்திர ஆதாரம்
...க்கும் பெரிதும் பயன்

-சாண்டில்யன்

# மஞ்சள் ஆறு

### அத்தியாயம்-1

## புலிமலைக் கோயில்

**நா**ஹ்ரராமக்ரோ என்ற புலிமலை உச்சியை மாலை நேர மஞ்சள் கதிர்கள் தழுவிக் கிடந்ததால், ஏற்கெனவே செடி கொடிகள் அதிகமின்றி உடைந்த பாறைகளுடனும் அந்தப் பாறைகளிலிருந்து உதிர்ந்து அக்கம் பக்கத்தில் பதிந்து கிடந்த சின்னஞ்சிறு மணல் திட்டுகளுடனுமிருந்த அந்த மலைப்பிரதேசம் சொர்ணச் சாயைக் கொஞ்சம் அதிகமாகவே பெற்றிருந்ததல்லாமல், மலையுச்சியிலிருந்த சாருணீ தேவியின் ஆலயத் தங்கக் கலசங்கள் வெயிலில் ஜாஜ்வல்லியமாக மின்னி, மேவார் நாட்டில் கதிரவனையும் தோற்கடிக்கும் ஒளிப் பிழம்புகள் பல உண்டு என்பதைப் பறைசாற்றிக் கொண்டிருந்தன. அந்தப் பாலைவன நாட்டின் உஷ்ணத்தையும் உக்கிரத்தையும் தப்பி முளைத்துவிட்ட சிற்சில செடிகள், திருடர்களைப் போல் மலைப்பாறை இடுக்குகளிலிருந்து எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தன. அரசனிலிருந்து ஆண்டி வரை சகலரும் சந்தேகம் தவிர்த்துக் கொள்ள வரும் அந்தச் சாருணீ தேவியின் ஆலயத்தின்

பிரசித்தி ராஜ்புதனம் முழுவதும் பரவிக் கிடந்தபோதிலும், அதிலிருந்து உச்சிக்குச் செல்லும் பாதைக்கு படிகள் ஏதும் அமைக்கப்படாமல் பாறைகள் மட்டும் ஆங்காங்கு வெட்டி விடப்பட்டிருந்ததால், எந்த நிமிஷத்திலும் கூழாங்கற்களில் வழுக்கி மலையடிவாரத்துக்கு மனிதனோ மிருகமோ வந்துவிடும் பயங்கர நிலையில் அந்தப் பாதையிருந்தது. ஆகவே மிகவும் அவசியமிருந்தாலொழிய அந்த மலையுச்சியை யாருமே நாடும் வழக்கமில்லாதிருந்ததின் விளைவாக அந்த மலைப்பிராந்தியத்தில் மனிதர் நடமாட்டம் ஏதுமில்லாமல் ஒரு பயங்கரச் சூழ்நிலை சதா சூழ்ந்து கிடந்தது. மலையின் பாதை மட்டுமின்றி மலை உச்சியை அடைந்த பின்பு அங்குள்ள ஆலயத்தில் குடி கொண்டிருந்த மகா துர்க்கையான சாருணீ தேவியின் உக்கிர சொரூபமும் அச்சத்தை அள்ளி வீசும்படியாயிருந்ததால், கூடியவரை ராஜபுதனவாசிகள் அந்த மலை உச்சிக்குப் போவதைத் தவிர்த்தேயிருந்தார்கள். போனவர்கள் வெகு சிலர். வாழ்க்கையின் பெரும் சிக்கலுக்கு மருந்து தேடியவர்களே தேவியின் ஆலயத்துக்குச் சென்றார்கள். சாதாரணமாக அந்த மலை ஜனசஞ்சாரமற்றே கிடந்தது. சிறிது ஆசாரம் தவறினாலும் சாருணீ தேவியின் கண்வீச்சு குடும்பத்தை நாசம் செய்துவிடும் என்ற நம்பிக்கை மனிதர்களை 'நாஹ்ராமக்ரோ' விலிருந்து சற்று எட்டவே வைத்திருந்தது. ஆனால், சாருணீ தேவிக்குப் பூஜை செய்யும் அந்த தபஸ்வினி எப்படி அங்கே வசிக்கிறாள்? அவளுக்கு எப்படி ஆகாரம் கிடைக்கிறது? இந்தக் கேள்விகள் எதற்கும் ஜனங்களுக்கு விடை கிடைக்காமலிருக்கவே, அவர்கள் தபஸ்வினிக்கு உள்ள சக்தியைவிட அதிகச் சக்திகளைக் கற்பித்து அந்த மலைப் பக்கம் நாடுவதை அறவே தவிர்த்திருந்தார்கள்.



இப்படிப் பல வகையிலும் ராஜபுதன மக்களுக்குப் பீதியையும் பக்தியையும் அளித்துவந்த நாஹ்ராமக்ரோவின் கடிய பாதையில், அந்த மஞ்சள் வெயிலில் நான்கு புரவிகள் மெள்ள ஏறிச் சென்றன. புரவிகளிலிருந்த நால்வருமே அரச வம்சத்தைச் சேர்ந்தவர்களென்பதை அவர்கள் புரவிகளுக்கிருந்த சேணங்களின் அலங்காரங் களும் நிரூபித்தனவென்றாலும் ஒவ்வொருவர் தோற்றத்திலும் பெரும் வித்தியாசம் மண்டிக் கிடந்தது. பாதை மிகக் குறுகலாகவும் அபாயமாகவுமிருந்ததால் புரவிகள் அக்கம் பக்கத்தில் மிகவும் கஷ்டப்பட்டுச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தமிருந்தது. அப்படிச் சென்ற அந்த வரிசையைப் பார்ப்பவர்களுக்குப் புரவி வீரர் நால்வருக்குமிருந்த விபரீத வித்தியாசங்கள் சிறிது விந்தையையே அளித்திருக்கும். அத்தகைய விந்தைக் கண்களுடனேயே மலையுச்சியிலிருந்த ஆலயத்தின் முகப்புப் படியில் நின்று சாருணீ தேவியின் பூஜாரிணியான தபஸ்வினியும், கீழிருந்து மலையுச்சியை நாடி வரும் அந்த நான்கு மனிதர்களையும் பார்த்தாள். நடுப்புரவியிலிருந்தவன் நல்ல வயோதிகனென்பதையும், அதற்கு முன் வந்தவன் சற்று உயரம் குறைந்திருந்தாலும் நல்ல தேகக்கட்டுடன் விளங்கிய வாலிபனென்பதையும் புரிந்துகொண்ட தபஸ்வினி, அவனையடுத்து வந்த புரவியிலிருந்த ஆஜானுபாகுவான வாலிபனையும் அவன் சேணத்தைப் பிடித்திருந்த அலட்சியத்தையும் கண்டு, 'எத்தனை துடுக்கான வாலிபன்! எதற்கும் அஞ்சாதவன்; மிகவும் முன்கோபி! ஊஹூம், இவனால் நாட்டுக்கு நன்மை விளையாது!' என்று தனக்குள் முணுமுணுத்துக் கொண்டாளானாலும், மிகவும் உயரமும் கட்டும் வாய்ந்த அவன் சரீரத்தைக் கண்டு வியக்கவே செய்தாள். கடைசிப் புரவியில் வந்த சிறுவனை அலட்சியம் செய்து விலக்கிய அவள் கண்கள், நடுப்புரவியிலிருந்த வயோதிகனையும்

விலக்கிவிட்டு முன்னாலிருந்த இரு சகோதரர்களையும் மாறிமாறிக் கவனித்த பின்பு, உயரமான அந்த வாலிபனிடம் முதலில் இருந்த பிரமையை இழந்து, அதிக உயர மில்லாதவனாய் இருப்பினும் பலத்திலோ வாலிபக் கட்டிலோ சிறிதும் குறையாதவனும், வயோதிகனுக்கு முன்புரவியில் வந்துகொண்டிருந்தவனுமான வாலிபனிடம் மாற்றிக் கொண்டன.

அதிக உயரமில்லாததோடு திண்மையான தேகக் கட்டுமிருந்ததன் காரணமாகச் சற்று குள்ளமாகத் தெரிந்த அந்த வாலிபன், திடமாகக் குதிரையில் அமர்ந்திருந்ததையும், தலையைச் சற்றே உயர்த்தி மலையுச்சியை அவன் நோக்கிய சமயத்திலும் ஒரு நிதானம் அந்த தலையின் அசக்கலில் இருந்ததையும் மேலிருந்தே ஓரளவு கண்ட தபஸ்வினியின் முகத்தில் சற்று சாந்தி நிலவியதால், அவள் இதழ்கள் புன்முறுவலால் சற்றே விகசித்தன. அவனைக் கண்டதால் சாந்தியும் சந்துஷ்டியுமடைந்த தபஸ்வினி, தூரத்தே மற்றொரு மலைவாயிலில் விழுந்து கொண்டிருந்த மாலைக் கதிரவனையும் அந்த வாலிபனையும் மாறி மாறிப் பார்த்துவிட்டுத் திடீரென ஆலயத்துக்குள் சென்று மறைந்துவிட்டாள்.

அவள் ஆலயத்தின் முகப்புப் படியில் சிறிது நேரம் நின்று தங்களை நோக்கியதையும், பிறகு கதிரவனை நோக்கிவிட்டு ஆலயத்துக்குள் சென்றுவிட்டதையும் கண்ட முதல் புரவி வீரன், நடுவில் வந்துகொண்டிருந்த வயோதிகனை அழைத்து, ''மாமா! அதோ அந்தப் படியில் நின்றாளே, அவள் யார்?'' என்று கேட்டான்.

சித்தூர் ராணா ரேமல்லனின் மைத்துனரும், புரவியில் வந்த மூவருக்கும் மாமனுமான சூரஜ்மல், பாதையிலிருந்த



பயங்கரத்தின் காரணமாகத் தலையைத் திருப்பாமலே, ''லங்கா! அவள்தான் தபஸ்வினி, சாரணீ தேவியின் பூஜாரிணி!'' என்று பதில்சொன்னார்.

இதைக் கேட்டதும் பக்கத்துப் புரவியில் மிகவும் ஆஜானுபாகுவாய் இருந்த ராணாவின் மைந்தனான பிருத்விராஜன், ''மாமா! நம்மைக் கண்டதும் அவள் ஏன் ஓடிவிட்டாள்? வீரர்களைக் கண்டால் பூஜாரிணிக்குப் பயமா?'' என்று வினவி, ஒரு முறை கேலியாகவும் சிரித்தான்.

''பிருத்விராஜ்! துடுக்குத்தனத்துக்கு இது இடமில்லை. சாருணீதேவியின் பூஜாரிணி பெரியதபஸ்வினி! மதிப்புக் குரியவள்! உன் சகோதரன் லங்கன் எவ்வளவு மரியாதையுடனும் அடக்கத்துடனும் கேள்வி கேட்டான், பார்த்தாயா? உனக்கு மட்டும் ஏனிந்தத் துர்ப்புத்தி'' என்று கடிந்து கொண்டார் சூர்ஜ்மல்.

''அரச வம்சத்தினர் ஆளும் மன்னனைத் தவிர வேறு யாரிடமும் மரியாதை காட்டவேண்டிய அவசியமில்லையே, மாமா'' என்றான் பிருத்விராஜன், அந்தப் பயங்கரப் பாதையிலும் குதிரையில் சற்று அனாவசிய மாக ஏறி நின்று.

''தவறு, பிருத்வீ! அரசர்கள் குடிகளுக்குத் தெய்வம். ஆனால், அரசர்களுக்கும் மேற்பட்ட சக்தியிருக்கிறது. அது நமது ஆலயங்களிலும் தபஸ்விகளிடமும் மண்டிக் கிடக்கிறது. ஆகவே, அந்த இடங்களில் அரச வம்சத்தினர் சிரங்களும் வணங்கத்தான் வேண்டும்'' என்றான் லங்கன், குதிரையிலிருந்து அனாயாசமாகத் திரும்பித் தம்பியை நோக்கி.

''நம்மிடமுள்ள கத்தியைவிடச் சிறந்த ஆயுதம் தபஸ்வினியிடமிருக்கிறதா?'' என்று இறுமாப்புடன் வினவினான் பிருத்விராஜன்.

ஸங்கனிடமிருந்து பதில் நிதானமாகவே வந்தது. ஸங்கனின் விசாலமான கண்கள் நன்றாக மலர்ந்து விழித்து சகோதரனான பிருத்விராஜனை நோக்கின. ''இருக்கிறது, ஆயிரம் வாள்களைவிடச் சிறந்த ஆயுதம் அவர்களிட மிருக்கிறது'' என்றான் ஸங்கன்.

''என்ன ஆயுதம் அது? எந்தக் கரத்தில் சுழல்கிறது? சொல், ஒரு கை பார்த்துவிடுகிறேன்'' என்று சீறினான் பிருத்விராஜன்.

''தபஸ்தான் அந்த ஆயுதம். அது கரங்களில் சுழல்வ தில்லை; இதயத்தில் சுழல்கிறது. அதற்குக் கேடயமும் உண்டு. அதுதான் சாந்தி. உன்னிடமுள்ள துடுக்கை தபஸ்வி களிடம் காண முடியாது. ஆத்திரமும் அவசரமும் தபஸின் விரோதிகள் என்பது சாஸ்திரம்'' என்றான் ஸங்கன்.

''என் அண்ணா! இத்தனை அறிந்திருக்கும் நீ துறவி யாகி விடலாமே. அரசு யாருக்கு என்பதைப் பற்றிக்குறி கேட்க எதற்காக ஆலயத்திற்கு வருகிறாய்? நீ இல்லையேல் அடுத்தபடி மேவார் மகுடத்தைச் சூடவேண்டியவன் நான்தானே?'' என்று பிருத்விராஜன் கேட்டபோது, அவன் குரலில் பொறாமையும், ஸங்கனிருப்பதால் தனக்கு அரசு கிடைப்பது துர்லாபமாயிற்றே என்ற நினைப்பால் ஆக்ரோஷமும் நிறைந்திருப்பதை சூரஜ்மல் கண்டார். ஆகவே சகோதரர் சம்பாஷணைக்குள் அவர் புகுந்து, ''பிருத்விராஜ், முறைகெட்ட பேச்சு வேண்டாம். நீங்கள் இருவர் மட்டுமின்றிக் கடைசியில் வரும் உங்கள்



ஜெய்மல்லும் சாருணீ தேவியின் வாக்குக்குக் கட்டுப்பட்டு நடப்பதாக உறுதிமொழி கூறியிருக்கிறீர்கள். பேசாமல் வாருங்கள். உங்கள் மூவரில் மேவார் அரியணையில் யார் அமருவார் என்பதை சாருணீதேவியின் அனுக்கிரகத்தால் தபஸ்வினி தெரிவிப்பாள்'' என்று சற்று கண்டித்தே பேசினார்.

பிருத்விராஜன் தொண்டையைச் சற்று ஆத்திரமாகக் கனைத்துக்கொண்டான். அவனைச் சாந்தப்படுத்த, மேவார் ராணாவினால் இளவரசனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டாலும், சாருணீதேவியின் வாக்குக்குக் கட்டுப்பட இசைந்து வந்த ஸங்கனே பேசத்தொடங்கி, ''தம்பி! அரியணையில் அமருவதில் எனக்கு அடியோடு விருப்பமில்லை, ஆனால் அரச சம்பிரதாயமிருக்கிறது. இவற்றை நான் எப்படிக் காற்றில் பறக்கவிட முடியும்? இப்பொழுது என்ன முழுகிப் போய்விட்டது? நீதான் அரியணையில் அமருவாய் என்று தபஸ்வினி குறிசொல்லிவிட்டால் நான் நாளையே தந்தையிடம் சொல்லி உனக்கு இளவரசுப் பட்டம் சூட்டி விடுகிறேன்'' என்றான்.

ஸங்கனுடைய சொற்கள் சூரஜ்மல்லின் காதில் தேனைப் பொழிந்தன. இத்தகைய மேன்மைச் சிந்தனை கள் பொருந்தியவன் மேவார் சிங்காதனத்தில் அமருவதா அல்லது மூர்க்கனும் தன் வாள் பலத்தை மட்டும் நம்பியிருப்பவனுமான பிருத்விராஜன் அமருவதா என்று எண்ணிப்பார்த்து, 'சந்தேகமேயில்லை. அரியணையில் ஸங்கன்தான் அமருவான்' என்று மனத்திற்குள் சொல்லிக் கொண்டு, லேசாகச் சிரிக்கவும் செய்தார்.

இயற்கையாகவே மூர்க்கனான பிருத்விராஜன் அந்தச் சிரிப்பால் ருத்திராகாரமான கோபத்தையடைந்து, ''எதற்குச் சிரிக்கிறீர்கள், மாமா?'' என்று இரைந்தான்.

''உங்கள் சம்பாஷணையை எண்ணிச் சிரித்தேன்'' என்றார் சூரஜ்மல்.

''அதில் சிரிப்பதற்கு என்ன இருக்கிறது?'' மீண்டும் இடியென எழுந்தது பிருத்விராஜன் கேள்வி.

''நிரம்ப இருக்கிறது'' என்று மீண்டும் இகழ்ச்சியுடன் பதில் சொன்னார் சூரஜ்மல்.

''உதாரணமாக...''

''உன் ஆத்திரப் பேச்சுக்கும் ஸங்கனின் அமைதிச் சொற்களுக்கும் உள்ள வித்தியாசம்!''

''என்ன வித்தியாசத்தைக் கண்டீர்?''

''பல வித்தியாசங்களைக் கண்டேன். ஒன்றில் நிதானம்; மற்றொன்றில் மூர்க்கத்தனம். ஒன்றில் பொருள் செறிவு; இன்னொன்றில் மடமைச் செறிவு.''

''மடமையா! யாருக்கு மடமை என்பதைப் பார்ப்போமா?'' என்று வாளை உருவிய பிருத்விராஜனை, ''பிருத்வீ'' என்று அதிகாரம் தோய்ந்த ஸங்கனின் குரல் சற்றுத் தேக்கியது. ஆனால் அடுத்த விநாடி ஸங்கனையும் நோக்கிச் சீறிய பிருத்விராஜன், ''இன்னொருமுறை மாமாவுக்குப் பரிந்து பேசினால் நீ என் சகோதரன் என்பதையும் மறந்துவிடுவேன்'' என்று கூவினான்.

அத்தனை ஆத்திரத்துக்கும் சிறிதும் அசையாத ஸங்கன், ''அனாவசியக் கூச்சல் ஆத்திரத்தின் அறிகுறி. அத்தகைய கூச்சலில் ஈடுபடுவது அரச பரம்பரையினரின் பண்பாட்டுக்கு முரணானது. இதோ ஆலயம் வந்துவிட்டது. நிதானப்படுத்திக்கொள். மன்னன் முடி யாருக்கு என்பதை இன்னும் சில விநாடிகளில் உணர்ந்து கொள்ளப் போகிறோம்.



அதற்குள் எதற்காக ஆத்திரம்?'' என்று சமாதானம் சொல்லவே, அதற்குமேல் உள்ளே குமுறினாலும் மேலுக்கு ஏதும் பேசாத பிருத்விராஜன் மௌனமாகக் குதிரையை நடத்தினான்.

அவர்கள் ஆலயத்தை அடைந்தபோது மாலை நன்றாக ஏறிவிட்டதால், கதிரவன் மஞ்சள் நிறத்தை இழந்து, சிவந்த நிறம் பெற்றுக் குருதிக் கதிர்களைச் சாருணீதேவியின் ஆலயத்தின் மீது வீசியதால், எங்கும் ரத்த வெள்ளம் பாய்வதுபோல் தோன்றியது. அந்த ரத்தச் சிவப்பைப் பார்த்த சூரஜ்மல், தன் சகோதரி மைந்தர்களை நோக்கி, ''இந்த ரத்தச் சிவப்பைவிட தேவியின் நாவும் கண்களும் பன்மடங்கு அதிகச் சிவப்பாயிருக்கும்'' என்று கூறினார். மாமன் சொன்னதை ஆமோதிக்கும் முறையில் ஸங்கன் தலையை அசைத்தான். சிறுவனான ஜெய்மல் வெறித்துப் பார்த்தான். பிருத்விராஜன் மட்டும் ஒருமுறை உறுமினான். ''இயற்கையழகை ரசிக்க நாம் இங்கு வரவில்லை. நடங்கள் உள்ளே'' என்று சற்றுக் கண்டித்தும் கூறினான்.

ஆலயத்துக்குள் புக இருந்த சூரஜ்மல், இதைக் கேட்டதும் சட்டென்று நின்று திரும்பி, அந்த மூன்று ராஜபுத்திரர்களையும் நோக்கி, ''இது தேவியின் ஆலயம்; இங்கு அரசனும், ஆண்டியும் ஒன்று. தேவிக்கு அடுத்தபடி இங்கு வணக்கத்துக்குரியவர் தேவியின் இதயமறிந்து குறி சொல்லும் தபஸ்வினி. தேவியின் சந்நிதியில் பூசலுக்கோ வேறு ஆர்ப்பாட்டங்களுக்கோ இடமில்லை; நினைப்பிருக்கட்டும்'' என்று எச்சரித்துத் திரும்பி ஆலயத்துக்குள் புகுந்தார். மூன்று ராஜகுமாரர்களும் பதிலேதும் சொல்லாமல் அவரைப் பின்தொடர்ந்தார்கள்.

ஆலயம் அப்படியொன்றும் பெரியதல்லவென்றாலும் அதன் அமைப்பு சற்று பயத்தை ஊட்டும் வண்ணம் இருந்தது. மலைக்கற்கள் அதிகமாகச் செதுக்கப்படாமல் குகைமாதிரி குடையப்பட்டிருந்ததாலும், குடையப்பட்ட குடவரைக் கூரையில் சக்தியின் பெரும் நிலைகள் செதுக்கப்பட்டிருந்ததாலும், ஆலயத்தின் உட்பகுதி கிலியைக் கிளப்பும் சூழ்நிலையைப் பெற்றிருந்தது. கோயிலின் உட்புறத்தில் காலை வைத்ததும் எதிரே தெரிந்த சாருணீ தேவியின் துர்க்கா சொரூபமும், சற்றுத் தொங்கிக்கொண்டிருந்த சிவந்த நாக்கும், சிவப்புத்திட்டப் பட்டதால் அக்கினியைக் கக்குவனபோல் தெரிந்த கண்களும் பார்ப்பவர்களுக்குக் குலைநடுக்கமெடுக்கச் செய்தன. எதற்கும் அஞ்சாத பிருத்விராஜன் இதயத்தில் கூட அந்தச் சூழ்நிலை சற்று பயத்தை உண்டாக்கிய தானாலும், அதை ஒரு நொடியில் துடைத்துக்கொண்ட அந்த அரசகுமாரன், எதிரேயிருந்த தேவியின் சந்நிதியைத் தைரியத்துடன் ஏறெடுத்து நோக்கினான். தேவியின் காலடியில் தூய வெள்ளை வஸ்திரத்துடன் ஜபமாலையைக் கையில் பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள் தபஸ்வினி. அவள் முகத்தில் சாந்தி நிலவி நிற்பதையும், தேவியின் கருணை வழிந்து கிடப்பதையும், அவற்றில் ஏதோ ஒரு புத்தொளி சதா விளையாடுவதையும் கண்ட லங்கன், தபஸ்வினிக்குத் தலைதாழ்த்தி வணங்கி சாருணீ தேவியின் பாதகமலங்களிலிருந்த மஞ்சள் பொடிகளை எடுத்து நெற்றியில் இட்டுக் கொண்டான். அண்ணனின் அதிகப்படி பக்தியைக் கண்டு வெறுப்படைந்த பிருத்விராஜன், ராஜ தோரணையில் தேவிக்கும் தபஸ்வினிக்கும் தலை வணங்கி, தேவிக்கு அருகாமையிலிருந்த படியொன்றில் உட்கார்ந்



தான். அவனுக்குப் பின்னாலிருந்த பெரும் பாறையில் சூரஜ்மல்லும் சிறுவனான ஜெய்மல்லும் அமர்ந்தார்கள். தபஸ்வினிக்குச் சற்றுத் தள்ளி ஒரு புலித்தோல் கிடந்தது. தபஸ்வினியை மறுமுறை வணங்கிய லங்கன் அந்தப் புலித்தோல் மீது அமர்ந்தான்.

அவர்கள் அமருமுன்பாகவே தியானத்திலிறங்கி விட்ட தபஸ்வினி, அவர்கள் உட்கார்ந்து சிறிது நேரத்திற்கெல்லாம் தன் கண்களை மெல்லத் திறந்தாள். அவள் தியானத்திற்குப் பிறகு கண் திறந்ததைக் கண்ட சூரஜ்மல், குறி கேட்கும் சமயம் வந்துவிட்டதை உணர்ந்து, ''தபஸ்வினி!'' என்று விளித்த வண்ணம் கைகளைக் கூப்பிக்கொண்டு எழுந்தார்.

எழுந்திருக்க வேண்டாம் என்பதைக் குறிப்பாலுணர்த்திய தபஸ்வினி, சிறிது சிந்தித்துவிட்டுத் தேவியை ஒருமுறை நோக்கினாள். பிறகு எதிரேயிருந்த நால்வரையும் நோக்கி, ''நீங்கள் வந்திருக்கும் காரியம் தெரியும்'' என்று கூறிப் புன்முறுவல் செய்தாள்.

''தெரிந்தால் சொல்வதுதானே!'' என்று முரட்டுத் தனமாகக் கேட்டான் பிருத்விராஜன்.

தபஸ்வினியின் சாந்தி விழிகள் திடீரென்று துர்க்கையின் உக்கிரத்தைப் பெற்றன. ''சொல்வது நானல்ல, அரசகுமாரனே! சொல்வது தேவி! என் வாயால் பேசுகிறாள். நினைப்பிருக்கட்டும்'' என்று கடுஞ்சொற்களை உதிர்த்த தபஸ்வினி, மீண்டும் கண்களை மூடித் தியானத்தில் இறங்கினாள். விநாடிகள் ஏற ஏற அவள் முகம் பெரும் பொலிவு பெற்றது. அத்துடன் ரத்தமும் அந்த முகத்தில் குபீரென்று பாய்ந்ததால் முகமே தேவியின் தீபம்போல்

பிரகாசித்தது. மெள்ள மெள்ள அவள் வாயிலிருந்து வார்த்தைகள் உதிர்ந்தன! மேவாரை ரத்த வெள்ளத்தில் ஆழ்த்த உதிர்ந்த வார்த்தைகள் அவை. மேவார் அரியணையில் அமர அரச குமாரர்களே இல்லாமல் அற்றுப்போகும் படியான பயங்கரச் சொற்கள் அவை. அந்தச் சொற்கள் அந்த விநாடியிலேயே சாருணீதேவியின் முன்னிலையிலேயே பெரும் நரபலிகளைக் கொடுக்கும் உக்கிரத்துடன் எழுந்து மேவார் ராஜவம்சத்தின் மீது விதி வீசிய அஸ்திரங்களென விழுந்தன.

## அத்தியாயம்-2

# உத்தரவு

மகா துர்க்கையான சாருணீ தேவியின் உக்கிரச் சிலையின் திருவடிகளின் பக்கத்திலமர்ந்து கண்களை மூடிய தபஸ்வினியின் முகம் சில விநாடிகளில் சிவந்து ஒளிப் பிழம்பாகிவிட்டதைக் கவனித்த சூரஜ்மல், தேவியின் சக்தி தபஸ்வினியின் உடலில் இறங்க ஆரம்பித்து விட்டதென்பதை ஊகித்துக் கொண்டதால், மிகுந்த பயபக்தியுடன் அவள் முகத்தையே கவனித்துக் கொண்டிருந்தார். சிவந்த அவள் முகத்தையும், லேசாக நடுங்கிய உதடுகளையும் கண்ட ராணாவின் மூன்றாவது குமாரனான ஜெய்மல், பயத்தால் சற்று இப்படியும் அப்படியும் அசைந்தான். பயமின்றிப் பக்தியுடன் உட்கார்ந்திருந்தான் ஸங்கன். பயமோ பக்தியோயின்றி எதையும் லட்சியம் செய்யாமல் உட்கார்ந்திருந்த பிருத்விராஜன், மற்ற மூவர் மீதும் ஒரு முறை தன் கண்களை ஓட்டி, 'சே! என்ன கோழைகள்!'



என்று மனத்துக்குள் கடிந்துகொண்டான். அப்படிக் கடிந்து கொண்ட பிருத்விராஜன் இரும்பு மனத்தையும் உடைக்க வல்ல ஒரு பெருமூச்சும் 'ஹூம்' காரமும் தபஸ்வினியிடமிருந்து எழுந்து அந்த ஆலயத்தை ஊடுருவிச் சென்றது. சாருணீ தேவியின் திருவாயிலிருந்து பிரணவ சப்தம்போல் கிளம்பி, ஆலயத்தின் பாறைகளில் மோதிப் பயங்கரமாக எதிரொலி செய்த அந்த ஹூங்காரம், அவநம்பிக்கையில் இருளடைந்த இதயத்தையுடைய பிருத்விராஜனையும் ஓர் உலுக்கு உலுக்கவே, அவனும் தபஸ்வினியின் முகத்தைக் கூர்ந்து கவனிக்கலானான்.

தபஸ்வினியின் தேகம் ஒருமுறை நடுங்கியது. பிறகு அடங்கி உதடுகள் மட்டும் லேசாக நடுங்கின. நடுங்கிய உதடுகள் மெள்ளத் திறந்து, "மேவார், தார்மிகர்களான அரசர்கள் ஆண்ட பூமி. அதை தர்மவிரோதிகள் ஆள முடியாது. உங்களில் எவன் தர்மவானோ அவன் ஆள்வான்" என்று வார்த்தைகளை உதிர்த்தன.

இதைக் கேட்டதும் தபஸ்வினியை நோக்கிக் கை குவித்த சூரஜ்மல், "ராணாவின் இந்தச் செல்வர்கள் மூவரும் தர்மம் தவறாதவர்கள்; இவர்களில் அரியணையில் அமரத் தகுந்தவர் யார்?" என்று பணிவுடன் வினவினார்.

ஒரு விநாடி தாமதித்த பிறகு தபஸ்வினியின் உதடுகள் மீண்டும் திறந்து, "தர்மம் இருக்கிற இடத்தில் தெய்வ பக்தியிருக்கும், பெரியவர்களிடத்தில் பணிவு இருக்கும்" என்று சொற்களை உதிர்த்தன.

இதைக் கேட்ட பிறகு பிருத்விராஜனின் உள்ளம் மெள்ள மெள்ள எரிமலையாகத் தொடங்கியது. பேசுவது தெய்வமல்லவென்றும், தபஸ்வினியே வேண்டுமென்று

கண்ணை மூடிக்கொண்டு தன்னை இகழ்ந்து பேசுகிறா
ளென்றும் நினைத்ததால், அவன் மனம் பேயென எழுந்த
தன்றிக் கையும் வாளின்மீது மெள்ளச் சென்று அமர்ந்தது.

''ராணாவின் செல்வர் மூவரில் தர்மமும் தெய்வ
பக்தியும் யாரிடமிருக்கிறது?'' என்று மூன்றாவது
கேள்வியை வீசினார் சூரஜ்மல்.

இம்முறை தபஸ்வினி மூலமாக வெளிவந்த சாருணீ
தேவியின் குரல் திடமாகப் பேசியது. ''தர்ம மார்க்கத்தை
இயற்கையின் சக்திகள் சுட்டிக் காட்டுகின்றன; தர்மவான்
களுடைய பிற்காலத்திற்கும் அவை சான்றாக நிற்கின்றன.
மஞ்சள் வெயில் காய்ந்த நேரத்தில் நீங்கள் ஆலயத்தை
நோக்கி வந்தீர்கள். ஆகவே, மஞ்சளுக்கும் எவனுக்கும்
சம்பந்தமுண்டோ அவனே, மேவாரை அரசாளுவான் என
என் தபஸ்வினி உங்களைக் கண்டதும் ஊகித்தாள். ஆனால்,
அவள் ஊகிக்காத சகுனங்களும் நிகழ்ந்திருக்கின்றன. நீங்கள்
ஆலயத்துக்குள் நுழையும்போது சூரியன் ரத்தப் பிழம்பாகி
விட்டான். ஆகவே, மேவாரின் அரியணை யாருக்குக்
கிடைத்தாலும் அதற்கு முன்பு அந்த அரியணை சம்பந்தமாக
ரத்தம் சிந்தத்தான் செய்யும். ஆனால், மஞ்சளின் சம்பந்த
முள்ளவன் இறுதியில் வெற்றியடைவான். அவனே
மேவாரை ஆள்வான். மேவாரும் அவனால் சிறப்புறும்''
என்று தேவி கூறினாள் தபஸ்வினியின் மூலமாக.

''புரியவில்லை தேவி. விளக்கவேண்டும்'' என்று
கேட்டார் சூரஜ்மல்.

''என் தபஸ்வினி விளக்குவாள்'' என்றது அந்த
அமானுஷ்யக் குரல். அத்துடன் தபஸ்வினியின் தலை
தொங்கியது. சூரஜ்மல் மெள்ள எழுந்தார். வழக்கம் போல்



தேவி சந்நிதானத்திலிருந்த மந்திர ஜலத்தை எடுத்துத்
தபஸ்வினியின் முகத்திலடித்தார். தபஸ்வினி கண்களை
அகல விழித்து மூவரையும் நோக்கி, பிருத்விராஜன்
முகத்தில் உக்கிராகாரமான கோபம் தாண்டவமாடு
வதையும், அவன் கையும் வாளின் மீது அமர்ந்திருப்
பதையும், அவன் உட்கார்ந்த நிலையைவிட்டு ஒரு காலைப்
படியில் ஊன்றிய வண்ணம் நின்றிருப்பதையும் கண்டு,
''அரசகுமாரன் கோபத்துக்கு என்ன காரணம்?'' என்று
கேட்கவும் செய்தாள்.

''சிறுபிள்ளை; எதிலும் ஆத்திரமுடையவன்.
தேவியின் வாக்கைத் தவறாகப் பொருள் கொண்டிருப்
பான்'' என்று சமாதானம் சொன்னார் சூரஜ்மல்.

''தவறாகப் பொருள் கொள்ளவில்லை மாமா. நீ
இங்கு எங்களை அழைத்து வந்ததன் சூது எனக்குத்
தெரிகிறது. தேவியின் பெயரால் நீங்களும் இந்த
தபஸ்வினியும் சேர்ந்துகொண்டு நடத்தும் நாடகம் புரிய
வில்லை என்று நினைக்க வேண்டாம்'' என்றான்
பிருத்விராஜன், குரல் இடியென முழங்க.

''ஆம் ஆம், இதில் சூது இருக்கிறது'' என்று கூறினான்
சிறுவனான ஜெய்மல்லும்.

தபஸ்வினி ஏதும் புரியாததால் விழித்தாள். ஆகவே
சூரஜ்மல்லை நோக்கி, ''தேவி என்ன சொன்னாள்?'' என்று
வினவினாள்.

''உனக்குத் தெரியாது என்பது பாசாங்கு!'' என்று
கூவினான் பிருத்விராஜன்.

''இது தேவியின் ஆலயம். உன் ஆத்திரத்தைக்
காட்டாதே'' என்று கோபத்துடன் தபஸ்வினி பேசிவிட்டு

மீண்டும் சூரஜ்மல்லை நோக்கி, "தேவி என்ன சொன்னாள்?" என்று கேட்டான்.

சூரஜ்மல் ஏதோ மனப்பாடம் செய்து வைத்தவர் போல் அப்படியே வார்த்தைகளைக் கொட்டவே தபஸ்வினியின் விழிகள், எதற்கும் அசையாமலும் புலித் தோலை விட்டு நகராமலும் நிதானத்தை இம்மியளவும் இழக்காமலும் உட்கார்ந்திருந்த ஸங்கனை நோக்கின. அடுத்த விநாடி நிர்ப்பயத்துடன் திட்டமாகத் தனது கையை அவனை நோக்கி நீட்டி, "அதோ அவன்தான் மேவார் அரியணையில் அமருவான். கோயிலில் இத்தனை இடமிருக்க, புலித்தோலில் உட்கார்ந்தவன் அவன்தான். புலித்தோல், மான்தோல், ஆட்டுத்தோல் இவை மூன்றில் அரசர்கள் உட்காருவது சம்பிரதாயம். இது முதல்சகுனம், இரண்டாவது, புலித்தோலின் கறுப்புப் புள்ளிகளுக்கிடை மஞ்சள் திட்டுக்கள் இருக்கின்றன. தவிர அவன் நெற்றியி லும் தேவியின் பாதகமலத்தின் மஞ்சள் திலகமிருக்கிறது. தேவி சொன்ன மஞ்சள் சம்பந்தம் இதுதான். இது இரண்டாவது சகுனம்..." என்று தபஸ்வினி சொல்லிக் கொண்டு போகையிலேயே, இடி இடியென்று எழுந்த பிருத்விராஜனின் கோப நகை, தேவியின் ஆலயத்தை கிடுகிடுக்கச் செய்தது. "மூன்றாவது சகுனத்தை விளக்க நீ தேவையில்லை, பூஜாரிணி! நான் விளக்குகிறேன். மேவார் அரியணையில் அந்தத் தர்மத்தின் சொரூபம் அமருமுன்பு ரத்தம் சிந்தப்படும் என்று தேவி சொன்னாள். சூது நிறைந்த உங்கள் நாடகத்தின் மூன்றாம் பகுதியை நான் நிறைவேற்றி வைக்கிறேன்" என்று சொல்லிக் கட்டடம் அதிரும்படியாக இரைந்த பிருத்விராஜன், கண்ணிமைக்கும் நேரத்தில் கத்தியை உருவி, உட்கார்ந்திருந்த ஸங்கன் தோளில் ஒரு



வெட்டு வெட்டினான். அந்த வெட்டைத் தொடர்ந்து அடுத்த மூன்று வெட்டுகளும் ஸங்கனின் மற்ற தோளிலும் முதுகிலும் விழுந்தனவென்றாலும் ஸங்கன் வாளை மட்டும் உருவவில்லை. குருதி, தேவியின் சந்நிதானத்தில் பாய எழுந்து நின்றான்.

"நீ என்ன பேடியா! க்ஷத்திரியனில்லையா! எடு வாளை! தேவி தேவையில்லை. நமது வாள்கள் தீர்மானிக்கட்டும், யார் அரசர் என்பதை?" என்று கூவிய பிருத்விராஜன் மீண்டும் வாளை ஓங்கினான். அப்பொழு தும் ஸங்கன் வாளை உருவவில்லை. பிருத்விராஜ் வாளை சூரஜ்மல்லின் வாள் தடுத்தது. அடுத்த விநாடி இருவாள் களும் பலமுறை மோதி ஆலயமெங்கும் பயங்கர ஒலிகளைக் கிளப்பின. அந்த ஒலிகளோடு ஒலியாக, "வேண்டாம், இது தேவியின் ஆலயம். இங்கு போருக்கும் பூசலுக்கும் இடமில்லை, இடமில்லை" என்று தபஸ்வினி இட்ட கூச்சல் ஆலயத்தின் பாறைகளில் எதிரொலி செய்ததே யொழிய சண்டை மும்முரமாக நடந்து கொண்டு தானிருந்தது. வாட்போரில் சிறந்த பிருத்விராஜனும், அவனுக்கு வாளைச் சுழற்றச் சொல்லி வைத்த சூரஜ்மல்லும் யாருக்கு வன்மை அதிகம் என்று நிர்ணயிக்க முடியா வண்ணம் சண்டையிட்டார்கள். பிருத்விராஜனுக்கு எத்தத் தீமையும் விளைவிக்க இஷ்டப்படாத சூரஜ்மல் எத்தனை ஜாக்கிரதையாக வாளைச் சுழற்றியும், பிருத்விராஜனின் மூர்க்கத்தனத்தால் இருவர் உடல்களிலும் காயங்கள் பல பட்டுக் குருதி ஆறாகப் பெருகத் தொடங்கியது. ஆழமான காயங்கள் மாமன் உடலிலும் மருமகன் உடலிலும் பட்டதாலும், போரின் உக்கிரத்தை இருவரும் சகிக்க முடியாததாலும், ரத்த சேதம் அளவுக்கு மீறி ஏற்பட்டதாலும்

அப்படி விழுந்த இருவரையும் அணுகிய ஸங்கன் தபஸ்வினியின் உதவி கொண்டு தன் ஆடைகளைக் கிழித்து அவர்கள் ரத்தத்தைத் துடைத்து, கட்டும் போட்டுவிட்டு ஜெய்மல்லைத் தேடினான். கோழையான ஜெய்மல் ஆலயத்தின் எந்தப் பகுதியிலும் காணாது போகவே, "தபஸ்வினி! நான் போய் ஜெய்மல்லை அனுப்புகிறேன். நீங்கள் இவர்களைப் பார்த்துக் கொள்ளுங்கள்" என்று கூறி, வெளியேற முயன்ற ஸங்கனை, "நில் ஸங்கா!" என்று தடுத்தாள் தபஸ்வினி. அப்பொழுதுதான் முதன் முதலாக அவன் பெயரைச் சொன்னாள் அவள்.

"ஏன், தாயே? நான் போய் இவர்களை எடுத்துச் செல்ல வீரர்களை அனுப்புகிறேன். அதுவரை என் தம்பி ஜெய்மல் இவர்களுடனிருக்கட்டும்" என்றான் ஸங்கன்.

"இவர்களை அனுப்ப நான் ஏற்பாடு செய்கிறேன். ஆனால், ஜெய்மல்லைத் தேடாதே" என்றாள் தபஸ்வினி.

"ஏன்?" விவரம் எதும் புரியாமல் குழப்பத்துடன் கேட்டான் ஸங்கன்.

"உன்னைத் தீர்த்துக்கட்ட ஆளை அழைத்துவர ஜெய்மல் போயிருக்கிறான். நீ பெரிய வீரன்தான்; இருப்பினும் பலருக்கு முன்பு ஒருவன் என்ன செய்ய முடியும்? சில நாட்களுக்கு மேவாரை விட்டுப் போய்விடு. இல்லாவிடில் ரத்தத்தால் சிம்மாதனத்தைச் சம்பாதிக்க விரும்பும் இந்தப் பிருத்விராஜன் உன்னைக் கொன்று விடுவான்" என்றாள் தபஸ்வினி.

"சாவுக்கு நான் அஞ்சுகிறேனென்று நினைக்கிறீர்களா?" என்று ஸங்கன் கேட்டான்.

"இல்லை."



"பின் எதற்கு நான் பயப்பட வேண்டும்?"

"விதிக்கு. தேவியின் ஆணைக்கு."

"விதிக்கு நான் அஞ்சவில்லை. ஆனால், தேவியின் ஆணைக்கு அஞ்சுகிறேன்."

"நீ மேவார் அரியணையில் அமர்ந்து மேவாருக்கு மங்களத்தைச் செய்யவேண்டும் என்பது தேவியின் ஆணை. உன் நெற்றியிலிருக்கும் அவள் மஞ்சள் காப்பு அதற்கு அத்தாட்சி. எப்பொழுதும் மஞ்சள்தான் உன் கவசம். எந்தக் காரணத்தை முன்னிட்டும் மஞ்சள் நிறத்தைப் புறக்கணிக்காதே. அது உன் பாதுகாப்பு என்பதை மறவாதே. உன்னால் மேவார் பெரும் புகழடையும். ஆனால், இது நீ மறைந்துறைய வேண்டிய காலம். மறைந்திரு."

"மறைவது வீரருக்கு அழகா?"

"அதைவிடப் பதுங்குவது புலிக்கு அழகா என்று கேள். அடங்க வேண்டிய சமயத்தில் அடங்கி, எழ வேண்டிய சமயத்தில் எழுபவனே வீரன். ஏகசக்கரபுரத்தில் பிராம்மண வேடத்திலும், விராடத்தில் பல வேடங்களிலும் உறைந்து வாழ்ந்த பாண்டவர்கள் கோழைகளா? போ மகனே, போ; மேவார் எல்லையை விட்டுப் போய்விடு. அது தற்சமயம் குறுகலான எல்லைதான். பின்னால் விஸ்தாரப்படும்."

இதைக் கேட்ட ஸங்கன் சொன்னான்: "தபஸ்வினி! போகிறேன். ஆனால் பயந்தல்ல. எனக்குப் பதில், அரசு மீது ஆசை வைத்திருக்கும் என் சகோதரன் அரசை ஆளட்டும் என்ற எண்ணத்தால் போகிறேன்" என்று கூறி விட்டுத் திரும்பிய ஸங்கன் இடக்கண்ணில் பெரும் அம்பொன்று பாய்ந்தது. தபஸ்வினி வாயிலை நோக்கினாள். அம்பை

எய்த ஜெய்மல் குதிரைமீதேறி மலைச்சரிவில் ஓடிக் கொண்டிருந்தான்.

தபஸ்வினி ஸங்களை நோக்கினாள். அம்பு கண்ணில் பாய்ந்த அந்த நேரத்திலும் ஸங்கன் நிதானத்தை இழக்காததைக் கண்ட தபஸ்வினி, சரித்திரத்தின் மகா புருஷர்களில் ஒருவன் முன்பு தான் நிற்பதைக் கண்டு கொண்டாள். அதனால் ஏற்பட்ட மரியாதையின் காரணமாக ஸங்களை உட்காரச் சொல்லி, அவன் தலையைத் தன் மடியில் சாய்த்துக்கொண்டு, அம்பை மெள்ளப் பிடுங்கி விட்டு, தலையைப் படியில் சாய்த்துவிட்டு, தேவியின் மாலையிலிருந்த மூலிகை இலைகள் சிலவற்றை தேவியின் ஆலய விளக்கு எண்ணெயில் தோய்த்துத் தேவியின் விளக்கொளியிலேயே வாட்டி, ஸங்கன் கண்ணில் வைத்துக் கட்டி, சில விநாடிகள ஏதோ ஜபித்தாள்.

பிறகு சொன்னாள், "இனிக் காத்திருக்க நேரமில்லை மகனே; புறப்படு. உன் தம்பி மற்றும் சில வீரர்களை அழைத்து வருமுன் புறப்படு" என்று.

"எங்கு போவதற்குப் புறப்பட வேண்டும், தாயே? கேவலம், அரசுக்காகச் சகோதரரை எதிர்க்க இஷ்டமில்லை எனக்கு" என்றான் ஸங்கன், வருத்தம் தோய்ந்த குரலில்.

"நமது இஷ்டப்படி உலகத்தில் எதுவும் நடப்ப தில்லை குழந்தாய். தவிர அரச குடும்பத்தில் பிறந்த உனக்குச் சாதாரண மக்களுக்கில்லாத கடமைகள் உண்டு. ஆகவே, போ, தப்பிவிடு" என்றாள் தபஸ்வினி.

"எங்கு போகட்டும்?" என்று கேட்டான் ஸங்கன்.

தபஸ்வினி சற்று நேரம் கண்களை மூடி ஏதோ யோசித்தாள். பிறகு, கண்களைத் திறந்து, தேவியை நீண்ட



நேரம் நோக்கினாள். "தேவி, மஞ்சளை நாடிச் செல்ல உத்தரவிடுகிறாள்" என்றாள் இறுதியாக.

"புரியவில்லையே, தாயே" என்றான் ஸங்கன்.

தபஸ்வினியின் சொற்கள் ஆவேசத்துடன் வெளி வந்தன. தேவியே மீண்டும் பேசுவது போல் தோன்றியது ஸங்கனுக்கு. தபஸ்வினி அவனைத் திரும்பிப் பாராமல், தேவியின் விழிகளில் தன் விழிகளை நாட்டிக் கொண்டு, "ஸங்கா! போ! மஞ்சள் ஆற்றங்கரைக்குப் போ" என்று மந்திரம் சொல்வது போல் சொற்களை உதிர்த்தாள்.

## அத்தியாயம்-3

# ஆண்டவன் தீர்த்தம்

"மஞ்சள் ஆற்றங்கரைக்குப் போ!" என்று மகா துர்க்கையான சாருணீ தேவியே வாய் திறந்து பேசியது போல், உணர்ச்சி வேகத்துடன் தபஸ்வினியின் வாயிலிருந்து உதிர்ந்த சொற்களைக் கேட்டுங்கூட, ஸங்கன் அந்த ஆலயத்தை விட்டு நகர மனமில்லாமல், வெட்டுக் காயங்களுடன் கிடந்த தம்பி பிருத்விராஜனையும் மாமன் சூரஜ்மல்லனையும் கட்டுப் போடாத தன் ஒற்றைக் கண்ணால் பார்த்துக் கொண்டு நின்றான், தேவியின் கண்களோடு தன் கண்களை இணைத்திருந்த தபஸ்வினி சில விநாடிகள் ஸங்களைத் திரும்பிப் பார்க்கவில்லை யென்றாலும், திரும்பிப் பார்த்ததும் எல்லையற்ற வியப்பை அடைந்து, "ஸங்கா! நீ இன்னும் புறப்படவில்லை?" என்று கேட்டாள்.

''இல்லை, தாயே'' என்றான் ஸங்கன், தபஸ்வினியை நோக்கி.

''ஒற்றைக் கண்ணில் அம்பு பாய்ந்து கட்டப் பட்டிருந்த அந்தச் சமயத்திலும் நிதானத்தை இழக்காமல் தம்பியையும் மாமனையும் அனுதாபத்துடன் பார்த்துக் கொண்டு வெளியே செல்லாமல் நின்ற அந்த அரச குமாரனை நோக்கிய தபஸ்வினி, ''ஏன் ஸங்கா? ஏன் தயங்குகிறாய்'' என்று வினவினாள்.

''தம்பிக்கும் மாமனுக்கும் காயங்கள் பலமாகப் பட்டிருக்கின்றன, தாயே. அவர்களை நிராதரவாய் எப்படி விட்டுச் செல்வேன்?'' என்று கேட்டான் ஸங்கன்.

''ஸங்கா! தேவியின் ஸந்நிதியில் நிராதரவு என்பதில்லை. உலகத்தில் தேவியைவிட வேறு ஆதரவு ஏது?'' என்று கேட்டாள் தபஸ்வினி.

''தாயே! தவறாக நினைக்க வேண்டாம், மகா சக்தியிடத்திலோ தங்களிடத்திலோ அபசாரப்படும் நோக்கம் எனக்கில்லை. தேவியின் கருணையினால்தான் அவள் சந்நிதானத்தில் ரத்தக்களரி ஏற்பட்ட பின்புங்கூட இவ்விருவரும் உயிருடனிருக்கிறார்கள் என்பது என் கருத்து. ஆனால், இங்கிருந்து மேவார் தலைநகரம் நீண்ட தூரம் இருக்கிறதே. இந்தக் கோயிலைச் சாதாரணமாக மனிதர் அணுகுவதும் துர்லபமாயிற்றே. நீங்கள் எப்படி அரண்மனைக்குச் செய்தியனுப்ப முடியும் என்று தான் யோசிக்கிறேன்'' என்று பதில் சொன்னான் ஸங்கன்.

''மலையடிவாரத்திலிருந்து அரைக் காதத்தில் கிராமம் இருக்கிறது ஸங்கா. அங்கு சதுர்ப்புஜன் கோயிலுமிருக்கிறது. உனக்குத் தெரியாதா?''



''ஆம் தாயே! கோயிலிருக்கிறது. அங்கு நீங்கள் எப்படிச் செல்ல முடியும்?''

''ஏன் செல்ல முடியாது?''

''இந்த மலைச்சரிவில் குதிரைகளில் வருவதே எங்களுக்குக் கஷ்டமாயிருந்தது...''

''நீங்கள் ராஜவம்சத்துச் செல்வர்கள். வழவழத்த அரண்மனைத் தரையில் நடக்கும்போது பணிமக்கள் உங்கள் பாதங்களுக்குப் பட்டாடை விரிப்பார்கள். எனக்கு அந்தப் பழக்கமில்லையே. காயக் கிலேசமும், கல்லிலும் முள்ளிலும் நடப்பதும் என்னைப் போன்றவர்களுக்குச் சகஜந்தானே. எத்தனையோ முறை நான் சதுர்ப்புஜன் கோயிலிருக்கும் கிராமத்துக்குப் போயிருக்கிறேன்'' என்றாள் தபஸ்வினி.

தபஸ்வினி இத்தனை விளக்கமாகக் கூறியும் தம்பியையும் மாமனையும் அந்த நிலையில் விட்டுப்போக இஷ்டமில்லாத ஸங்கன் சிறிது நேரம் தயங்கினான். அவன் தயக்கத்தைத் தபஸ்வினியும் கவனித்தாளாகையால் மெள்ளப் புன்முறுவல் கொண்டு வினவினாள், ''இன்னும் சந்தேகம் தீரவில்லையா, ஸங்கன்?'' என்று.

''சந்தேகமேதுமில்லை, தாயே!'' என்று மென்று விழுங்கினான் ஸங்கன்.

''சந்தேகம் இருக்கிறது ஸங்கா! சகோதர பாசமும் உன்னை இழுக்கிறது. அந்தப்பாசம், இதோ கிடக்கும் இந்தப் பிருத்விராஜனுக்குமிருந்தால் மேவார், மேவாரை மட்டுமல்ல. இந்தப் பாரத நாட்டையே ஆளும். ஆனால் இந்த நாட்டில் சகோதரர் சண்டை புராண காலத்திலிருந்து

தொடர்ந்து வரும் ஒரு பெரிய சாபம். அதற்கு நாம் என்ன செய்வது?'' என்றாள் தபஸ்வினி, சற்று வாய் விட்டுச் சிரித்து.

ஸங்கன் ஒரு முறை தன் ஒரு கண்ணால் அவள் இதயத்தையே ஊடுருவி விடுபவன்போல் பார்த்துவிட்டுப் பிறகு தலையைக் குனிந்துகொண்டு, திடமற்ற குரலில், ''தாயே! நீங்கள் ஒரு வரம் தரவேண்டும்'' என்றான்.

வியப்பு சிறிதுமில்லாத முகத்துடன் ஸங்கனைப் பார்த்தாள் தபஸ்வினி. அவன் உள்ளத்தில் ஓடிக் கொண்டிருந்த எண்ணங்களை மிகத் தெளிவாகப் புரிந்து கொண்டதால் அனுதபாபமும் அந்த முகத்தில் உதயமாயிற்று. ''என்ன வரம், ஸங்கா?'' என்று வினவினாள் தபஸ்வினி அனுதாபத்தைக் குரலிலும் காட்டி.

''சதுர்ப்புஜன் கோயிலுக்குச் செல்ல அனுமதி வேண்டும்'' என்றான் ஸங்கன்.

''அங்கு உனக்கு ஆபத்து காத்திருக்கிறதே!'' என்று வருத்தத்துடன் தெரிவித்தாள் தபஸ்வினி.

''ஆபத்தா! எனக்கா!'' என்று வியப்புடன் வினவினான் ஸங்கன்.

''ஆம், ஸங்கா!''

''இன்னும் என்ன ஆபத்து எனக்கு ஏற்படக்கூடும்?''

''ஆபத்தின் அஸ்திவாரத்தை நினைத்துப் பார்.''

''ஆபத்தின் அஸ்திவாரமா?''

''ஆம், ஸங்கா! மண்ணும் பொன்னுந்தான் ஆபத்தின் அஸ்திவாரங்கள். மண்ணும் பொன்னும் பலர் ஆசையைத் தூண்டுகின்றன. அந்த மண்ணும் பொன்னும் ஒருவனுக்கு



உரியதாயிருக்கும்போது மற்றவர்கள் அவன் மீது குரோதம் கொள்ளுகிறார்கள். குரோதம் பஞ்சமா பாதகங்களை விளைவிக்கிறது. ஆகையால், உன்னிடம் குரோதம் அனைவருக்கும் ஏற்படுவது சகஜமல்லவா? உன் சகோதரர்களின் ரத்தப் பாசமே, ஆசையால் அறுந்திருப்பதை நீ பார்க்கவில்லையா?''

தபஸ்வினியின் சொற்கள் நூற்றுக்கு நூறு உண்மையென்பதை ஸங்கன் உணர்ந்திருந்தாலும் மீண்டும் கேட்டான், ''சகோதரர்களால் ஆபத்து நேரலாம். ஆனால் ஒருவன் இதோ காயமடைந்து கிடக்கிறான், இன்னொருவன் அம்பெய்து ஓடிவிட்டான். இனி சதுர்ப்புஜன் கோயிலுள்ள கிராமத்தில் என்னை எதிர்ப்பவர் யாரிருக்கிறார்கள்?'' என்று.

தபஸ்வினி மீண்டும் புன்னகை புரிந்து, மூர்ச்சையாக இருந்த பிருத்விராஜனை நோக்கினாள். ''ஸங்கா, இந்த ராஜகுமாரன் கோபிஷ்டன், ஆனால் வீரன்'' என்று, புதிதாக ஓர் உண்மையைக் கண்டுபிடித்தது போல் சொன்னாள்.

இதை எதற்காகச் சொல்கிறாள் தபஸ்வினி என்பதை அறியாத ஸங்கன், ''ஆம், தாயே! பிருத்விராஜன் மகா வீரன்'' என்று ஆமோதித்தான்.

''இவன் நேருக்கு நேர் போர் செய்ய வல்லவன்'' என்றாள் தபஸ்வினி.

''ஆம், தாயே!'' என்று அதையும் ஆமோதித்தான் ஸங்கன்.

''ஆனால், சற்று முன்பு மறைந்திருந்து திருட்டுத்தனமாக உன் கண்ணில் அம்பெய்துவிட்டு ஓடினானே உன் தம்பி, அவன் வீரனல்ல ஸங்கா'' என்று உணர்த்தினாள் தபஸ்வினி.

''சிறுவன்'' என்று தாங்கிப் பேசினான் ஸங்கன்,

''ஆண்மையில் மட்டுமல்ல, புத்தியிலும் சிறுவன், மறைந்து அண்ணனைக் கொல்ல முயலும் வஞ்சகன், அவனை நம்புவதற்கில்லை. அவன் உன்னை ஆட்களைக் கொண்டு வளைக்கத் தவறமாட்டான். ஆகையால், எங்கும் தாமதிக்காதே, ஸங்கா! நேராக மஞ்சளாற்றங்கரைக்குப் போ, தேவியின் கட்டளைப்படி நட. வெகு சீக்கிரம் நீ மேவார் அரியணையில் அமருவாய். இவர்களைப்பற்றிக் கவலைப்படாதே. இவர்களை நான் அரண்மனையில் சேர்த்து விடுகிறேன்'' என்று வற்புறுத்திக் கூறினாள் தபஸ்வினி.

சதுர்ப்புஜன் கோயில் பகுதிக்குப் போவதற்கே தனக்கு உத்தரவு இல்லையென்பதை தபஸ்வினியின் வார்த்தைகளால் சந்தேகமறப் புரிந்து கொண்ட ஸங்கன் துக்கம் புரண்டோடிய உள்ளத்துடன் தபஸ்வினியிடம் விடைபெற்றுக் கொண்டு, சாருணீதேவியின் ஆலயத்தை விட்டு வெளியே வந்து, புரவிமீதேறிக்கொண்டு மலைச்சரிவின் பாதையில் இறங்கினான். பாதையில் இறங்கிய சமயத்திலும் ஸங்கனின் எண்ணங்கள் காயமுற்று ஆலயத்தில் கிடந்த தன் தம்பியையும் மாமனையும் வளைய வந்து கொண்டிருந்ததால் மலையடிவாரத்துக்கு வந்த பின்புகூட அவன் எண்ணங்களில் சிறிதும் மாறுதல் ஏற்படவில்லையாகை யால், 'ஏன், சதுர்ப்புஜன் கோயிலுக்குப் போனால்தான் என்ன?' என்று நினைத்தான் ஸங்கன். அவன் ஒற்றைக்கண் மஞ்சளாற்றுக்குச் செல்ல வேண்டிய பாதையிலிருந்து சற்று விலகி, தூரத்திலிருந்த தோப்பு ஒன்றைக் கவனித்தது. 'அந்தத் தோப்பு கால் காதத்துக்கு மேலிருக்கும். அதைத்தாண்டித் தானே இருக்கிறது சதுர்ப்புஜன் கோயில்!



அங்கு போய்க் கோயிலதிகாரிகளிடம் சொன்னாலே ஆளனுப்புவார்கள். நான் கிராமத்துக்குக்கூடப் போக வேண்டிய அவசியமில்லையே' என்று மீண்டும் மீண்டும் நினைத்த ஸங்கன், சாருணீ தேவியை ஒரு முறை மனத்தில் தியானித்து, ''மன்னிக்கவேண்டும், தாயே, மரணகாயத்தி லிருக்கும் இருவருக்கும் உடனடியாக உதவியனுப்பாமல் என்னால் மஞ்சள் ஆற்றுக்குச் செல்ல முடியவில்லை'' என்று கூறிக்கொண்டு, புரவியைத் தோப்பின் பாதையை நோக்கித் திருப்பினான்.

நிர்மானுஷ்யமான பாலைவனப் பாதையில் சிறிது நேரமும் தோப்புப்பகுதியில் சிறிது நேரமும் பயணம் செய்த ஸங்கன், இருட்டு நன்றாக ஏறி மையென வையகத்தைக் கவிந்துகொண்ட சமயத்தில் சதுர்ப்புஜன் கோயிலை அடைந்தான். தோப்பின் தென்புற முகப்பிலிருந்த சதுர்ப்புஜன் கோயிலில் அப்பொழுது முதல் ஜாம பூஜை நடந்து கொண்டிருந்தது. ஊரைவிட்டுத் தள்ளிய தோப்பிலிருந்த காரணத்தால் கூட்டம் ஏதுமில்லாத அந்தக் கோயிலுக்குள் சென்ற ஸங்கன், அர்ச்சகர்களில் ஒருவர் சதுர்ப்புஜனுக்குப் பூஜை செய்து கொண்டிருப்பதையும் மற்றொருவர் கோயிலின் பெரு மணியைக் கையிலெடுத்து அடிக்கத் தொடங்கி விட்டதையும் கண்டு கர்ப்பக்கிரகத்தின் முகப்பிலேயே நின்று தலை வணங்கினான்.

ஏதும் பேசாமல் பின்புறத்தில் நின்று தலை வணங்கியதால் ஸங்கன் வந்திருப்பதை அறியாத அர்ச்சகர்கள் தங்கள் கடமையிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்தனர். ஸங்கனும் சதுர்ப்புஜனின் கடலினும் பெரிய கண்களின் கருணை வெள்ளத்தில் அழுந்தி, அந்த அழகிய மூர்த்தியையே பார்த்துக்கொண்டு நின்றான். விஷ்ணுவின் ஆயிர நாமங்

களையும் பக்தியுடன் சொல்லி அர்ச்சனை செய்து கொண்டிருந்த அர்ச்சகர் "பயகிருத் பயநாசன்:" என்ற இடத்திற்கு வந்ததும் சிறிது புன்முறுவல் செய்த ஸங்கன், சதுர்ப்புஜனை மனத்தால் வணங்கி, "பிரபு, 'பயகிருத், அதாவது பயத்தைத் தருபவனும் நீ பயநாசன்: பயத்தை நாசம் செய்பவனும் நீ' என்று மந்திரம் சொல்லுகிறதே. என் விஷயத்தில் உன் கிருபை எப்படி? பயத்தைக் கொடுக்கிறாயா, பயத்தை நிவர்த்திக்கப் போகிறாயா? உன் ஆலயப்புறம் வந்தால் எனக்கு ஆபத்து உண்டு. பயம் உண்டு என்று தபஸ்வினி சொன்னாளே, அதை உண்மையாக்கப் போகிறாயா?" என்று கேட்டான்.

நிரந்தரமாகச் செதுக்கப்பட்டிருந்த போதிலும் சதுர்ப்புஜன் விக்ரகம் புதிதாகத் தன்னை நோக்கி மந்தகாசம் செய்வது போல தோன்றியது ஸங்கனுக்கு. அந்த மந்தகாசத்துக் காரணம் என்னவென்று தெரியாமற் போனாலும் அர்ச்சனையில் மனத்தைப் பதிய வைத்தான் ஸங்கன். அவன் மனம் பயத்தை உதறியது, ஆபத்தை நினைப்பதை அறவே தவிர்த்தது. தாயான ஜாலிவம்சத்து ராணியால் குழந்தைமுதல் பக்தி மார்க்கத்தில் பழக்கப் பட்டிருந்த ஸங்கன், மௌனமாய் ஆண்டவனெதிரே நின்று ஸஹஸ்ர நாமங்களையும் காதால் பருகிக் கொண்டிருந்தான். அர்ச்சனை முடிந்ததும் திரும்பிய அர்ச்சகர், எதிரே ஸங்கன் நின்றதைக் கண்டு பிரமித்தார். மணியடித்துக் கொண்டிருந்த அர்ச்சகர் திடீரென மணியை நிறுத்தி, "இளவரசனைக் கவனிக்கவில்லை...." என்று சமாதானம் சொல்ல முயன்றார்.

"அரசர்க்கரசனுக்குப் பூஜை செய்து கொண்டிருந்தீர்கள். அப்போது மாநில மன்னர் குலத்தாரைக் கவனிப்பதும்



தவறு. ஆண்டவன் பூஜையில் திளைப்பது தான் நியாயம். தீர்த்தம் கொடுங்கள்; துளசி கொடுங்கள்" என்று ஸங்கன் கையை நீட்டினான். தீர்த்தக் கிண்ணத்தை அர்ச்சகர் கையிலேந்தினார். அதிலிருந்து ஓர் உத்திரணியில் தீர்த்தத்தை மொண்டு எடுத்தார். ஆனால், அந்தத் தீர்த்தம் நீட்டிக்கிடந்த ஸங்கன் கைகளில் விழவில்லை. ஏந்திய உத்திரணி ஏந்தியபடியே நின்றது. அர்ச்சகரின் கண்கள் வாயிற்படியை வெறித்து நோக்கின. அதில் மிதமிஞ்சிய பயம் தாண்டவமாடியது.

### அத்தியாயம்-4

## வாளும் கோலும்

சதுர்ப்புஜனின் ஆராதனைத் தீர்த்தத்தைக் கொடுக்க எழுந்த அர்ச்சகரின் கை அப்படியே நிலைத்து நின்று விட்டதையும் அவருடைய கண்களும் வாயிற்படியை வெறித்து நோக்கிப் பீதிகொண்டு விட்டதையும் கண்ட ஸங்கன், அதன் காரணத்தை அறிய விரும்பித் திடீரெனத் திரும்பினான். கர்ப்பக்கிரகத்துக்குச் சற்றுத் தள்ளிப் பத்துப்பன்னிரண்டு வீரர்கள் உருவிய வாளும் கையுமாய் நிற்பதைப் பார்த்த ஸங்கன், அவர்கள் தன்னை தீர்த்துக் கட்டவே வந்திருக்கிறார்கள் என்பதை உணர்ந்து கொண்டதன்றி, அவர்களை ஏவியவன் தன் தம்பியைத் தவிர வேறு யாருமிருக்க முடியாதென்றும் ஊகித்துக் கொண்டானாகையால், அவர்களை நோக்கி, "தெய்வ சந்நிதானத்தில் வாளை உருவுவது ராஜபுத்திரர்கள் வழக்கமல்ல. வெளியே

பதுங்கியிருக்கும் ஜெயமல்லுடன் நில்லுங்கள். இதோ வந்து உங்களைத் திருப்திப்படுத்துகிறேன்'' என்று கூறிவிட்டு மீண்டும் அர்ச்சகரைப் பார்த்துத் திரும்பி, ''தெய்வகாரியம் நிற்க வேண்டாம். தீர்த்தமும் துளசியும் கொடுங்கள்'' என்று பழையபடி கை நீட்டினான்.

அர்ச்சகர் அவன் துணிவைக் கண்டு அசந்து போனார். எப்பேர்ப்பட்ட வீரனாயிருந்தாலும் பத்துப் பன்னிரண்டு பேர் முன்பு என்ன செய்ய முடியும் என்று எண்ணினார். அத்துடன், யோசனைகளுக்கோ விவாதத்துக்கோ அப்பொழுதிருந்த நிலைமை இடங்கொடாதென்ற காரணத்தால், உத்திரணியை மற்றுமொரு முறை தீர்த்த பாத்திரத்தில் மொண்டு எடுத்து தீர்த்தத்தை லங்கன் கையில் கொடுத்தார். தீர்த்தத்தை மிகுந்த பயபக்தியுடன் உறிஞ்சி, துளசியும் உண்டு, தனது இடக்கையில் தங்கத்தால் செய்து பூட்டப்பட்டிருந்த ராஜமுத்திரைக் கங்கணத்தைக் கழற்றி சதுர்ப்புஜன் திருவடிகளில் வைத்து, அர்ச்சகரை அழைத்து ''ஸ்வாமி! இந்தக் கங்கணம் இங்கேயே இருக்கட்டும். அவசியம் வரும்போது உங்களிடம் தூதனை அனுப்புகிறேன். நீங்களே எடுத்து வாருங்கள்'' என்று கூறிவிட்டு, மறுபடி வாசற்படியை நோக்கித் திரும்பினான்.

பழைய இடத்தில் நின்ற வீரர்களில் ஒருவன்கூட இல்லாததைக் கவனித்த லங்கன் திருப்தியுடன் புன்முறுவல் செய்துகொண்டு, ''வருகிறேன், ஸ்வாமி'' என்று அர்ச்சகரிடம் கூறிவிட்டுக் கிளம்ப முயன்றவனை அர்ச்சகர் தடுத்து, ''அரசகுமாரா! வீரர்கள் வாயிற் பக்கந்தான் போயிருக்கிறார்கள்'' என்றார்.

''அங்குதான் அவர்களைப் போகச் சொன்னேன்'' என்ற லங்கன், வாயிலுக்காகக் காலை மறுபடியும் எடுத்து வைத்தான்.



மறுபடியும் அவனை அர்ச்சகர் தடுத்தார். ''அரசகுமாரா! நீ அடுத்தபடி முடிசூட வேண்டியவனாயிற்றே!'' என்றார்.

''இருந்தால் முடிசூட வேண்டியவன்தான்'' என்றான் லங்கன், சர்வ சாதாரணமாக.

''இருக்கும் பொறுப்பும் முடிசூட வேண்டியவர்களுக்கு உண்டு. அவர்கள் உயிர், குடிகள் சொத்து. இஷ்டப்படி அதைப் போக்கிக் கொள்ள அவர்களுக்கு உரிமை இல்லை'' என்று மீண்டும் மன்றாடினார் அர்ச்சகர்.

''இப்பொழுது என்னை என்ன செய்யச் சொல்லுகிறீர்கள்?'' என்று லங்கன் கேட்டான் வியப்புடன்.

''இந்தக் கர்ப்பக்கிரகத்தின் பின்புறத்தில் ரகசிய வழி இருக்கிறது'' என்று சுட்டிக் காட்டினார் அர்ச்சகர்.

''அதில் போவது தர்மமல்ல.''

''ஏன்?''

''வாயிலில் வந்து போராடுவதாக வீரர்களுக்கு வாக்குக் கொடுத்திருக்கிறேன். அந்த வார்த்தையை நம்பி இங்கு ரத்தம் சிந்தாமல் அவர்கள் வெளியில் போயிருக்கிறார்கள். லங்கன் வார்த்தை தவறமாட்டான் என்பது மேவாரில் அனைவருக்கும் தெரியும். அந்த நற்பெயரைக் கெடுத்துக் கொள்ள முடியாது. வீரன் சண்டைக்குப் பயந்து கோழையாகக் கோயிலின் பின்புறத்தில் ஓடவும் முடியாது. தவிர, எனக்குப் பாதுகாப்பும் இருக்கிறது. என்னை யாரும் அழிக்கவும் முடியாது.''

''என்ன பாதுகாப்பு, அரசகுமாரா?''

"சாருணீதேவியின் மஞ்சள் காப்பு என் நெற்றியிலிருக்கிறது. மஞ்சளின் சம்பந்தம் எனக்கிருக்கும் வரை எனக்கு அழிவில்லை என்று தபஸ்வினி கூறியிருக்கிறாள்."

ஸங்கனின் உறுதியான இந்தச் சொற்களைக் கேட்ட அர்ச்சகர் ஆச்சரியப்பட்டுப் போனார். 'தெய்வத்திடமும் கோயில் பூஜை செய்பவர்களிடமும் இத்தனை திட நம்பிக்கையுள்ளவர்களும் உலகத்திலிருக்கிறார்களே!' என்று வியப்பெய்தினாலும், "அரசகுமாரா! தெய்வ நம்பிக்கையால் சித்திக்காதது எதுவுமில்லை. ஆனால், மனித எச்சரிக்கையும் அவசியமல்லவா?" என்று வினவினார்.

ஸங்கன் அவரை நோக்கிச் சிரித்தான். "தெய்வத் தனம் குறுக்கிடும்போது மனித எச்சரிக்கை அர்த்தமற்றதாகிறது" என்று கூறிவிட்டு, மேற்கொண்டு எதுவும் பேசாமல், இடையிலிருந்த வாளை உருவி, தெய்வத்தின் காலடியில் தாழ்த்தித் தன் தலையையும் நன்றாகத் தாழ்த்தி வணங்கிவிட்டு வாயிலை நோக்கிச் சென்றான். அவன் சென்றதைப் பார்த்துக் கொண்டிருந்த இரு அர்ச்சகர்களும் பயத்தால் ஒரு விநாடி நடுங்கினார்கள். அடுத்த விநாடி சதுர்ப்புஜன் சந்நிதிக் கதவை நன்றாகச் சாத்திக் கொண்டார்கள். அடுத்த சில விநாடிகளில் வெளியே வாள்கள் உராயும் சத்தம் கேட்டது. இளவரசனை எப்படியாவது பாதுகாக்க வேண்டுமென இரு அர்ச்சகர்களும், சதுர்ப்புஜனைத் துதிக்க ஆரம்பித்தார்கள்.

உருவிய வாளுடன் கோவில் வாயிலை ஸங்கன் அடைந்ததுமே இரண்டு பக்கங்களிலிருந்து இரு வீரர்கள் அவன் மீது பாய்ந்தார்கள். எதிரேயிருந்தும் இருவர் வாள்களைப் பாய்ச்சினர். சற்று முன்னே நகர்ந்தால் பின்



புறமும் மற்றவர்கள் தன்னை வளைத்துக் கொள்ளக் கூடும் என்று நினைத்த ஸங்கன், கோயிலின் முன்புறச் சுவரோரமாகச் சாய்ந்துகொண்டு வெகு துரிதமாக முன் புறத்திலும் பக்கவாட்டிலும் வாளைச் சுழற்றினான். இலக்கு பார்த்து மந்திரத்தில் சுழல்வதுபோல் சுழன்ற ஸங்கனின் நீண்ட வாள் தாக்கியதால் பக்கப் பகுதிகளிலிருந்து இருவர் அலறி வீழ்ந்தனர். எதிரே வந்தவர்களில் ஒருவனின் வாள் ஆகாயத்தில் பறந்தது. இந்த நிகழ்ச்சிகளால் முதன் முதலாகப் பாய்ந்த வீரர்களின் தாக்குதல் சற்று தேக்கமடையவே மரங்களின் பின்னாலிருந்த ஜெய்மல்லின் குரல் எழுந்தது. "விடாதீர்கள்! உம், போங்கள், வளைத்துக் கொள்ளுங்கள் அவனை" என்று உற்சாகப்படுத்தியது. ஆரம்ப நிகழ்ச்சிகளால் தங்கள் பலத்தில் சந்தேகமடைந்த வீரர்கள் சற்று தாமதிக்கவே; ஒற்றைக் கண்ணுடன் நிலைமையை ஆராய்ந்து பலமாக நகைத்த ஸங்கன், "வெளியே வா, தம்பி! சூரிய வம்சத்திலுதித்தவர்கள் பின்னால் தங்கி வீரர்களை முன்னால் ஏவுவது கிடையாது" என்று அழைத்தான்.

அந்த அழைப்பை ஏற்றுக்கொள்ளாத ஜெய்மல், "உம்! விடாதீர்கள் அவனை. ஒருவன் சாருணீ தேவியின் ஆலயத்தில் இறந்துவிட்டான். இன்னொருவன் சதுர்ப்புஜனுக்குப் பலியாகிவிட்டால் நான்தான் அரசன். உங்களுக்குப் பதவிகள் தருவேன், பொற்காசுகளை அள்ளிக் கொட்டுவேன். இல்லையேல், நீங்கள் தலைநகர் திரும்பியதும் இவனுக்குப் பதில் உங்களை அழித்து விடுவேன்" என்று கூவினான்.

பதவி, பொன் ஆசைகளைக் காட்டியதாலும், சொன்னபடி செய்யாவிட்டாலும் தலைநகரில் காத்திருக்கும் தண்டனையைக் காட்டி ஜெய்மல் பயமுறுத்தியதாலும்

தூண்டப்பட்ட வீரர்கள் மீண்டும் ஸங்கனை நோக்கி வந்தார்கள். விளைவைப் பற்றி எப்பொழுதுமே சிந்திக்காத ஸங்கன் நன்றாகக் கோயில்சுவரில் சாய்ந்து கொண்டு, தனது வாளால் முப்புறத்திலும் சூழ்ந்த வாள்களைத் தேக்கினான். மீண்டும் பின் சென்று, முன் வந்து தாக்கிய வாள்களை மிகச் சாமர்த்தியமாகத் தடுத்தும், இடைவெளி கிடைத்த சமயங்களில் எதிரிகளின் உடல்மீது வாளைப் பாய்ச்சியும் போரிட்டான். ஒரு கண் கட்டுப்போட்டிருந்ததாலும், உடலில் ஏற்கெனவே பிருத்விராஜன் வெட்டிய காயங்களாலும் கோயில்வாயிற் சிறு விளக்கில் ருத்திரன் போல பயங்கரமாகத் துலங்கிய அவன் உருவத்தைக் கண்டும், வாள் தங்களை அணுகும் வேகத்தைக்கண்டும், தாக்கிய சமயங்களில் அந்த வாளுக்கிருந்த அமானுஷ்ய பலத்தைக் கண்டும் அஞ்சிய வீரர்கள், மெள்ள மெள்ள இடைவெளி கொடுக்கத் தொடங்கினார்கள். ஆள்பலம் அதிகமிருந்தாலும் மனோபலம் குறைபவர்கள் காரிசித்தியடைய முடியாதென்ற தீர்மானத்தால் உந்தப்பட்ட ஸங்கன் சட்டென்று சுவரை விட்டு விலகி, எதிரே திடீரெனப் பாய்ந்து, எதிரேயிருந்த இருவர்மீது வாளைப் பாய்ச்சி இழுத்தான். அடுத்த சில விநாடிகளுக்குள் நாலைந்து வீரர்கள் ஸங்கன் வாளுக்குப் பலியாகிவிட்டதை மறைவிலிருந்து பார்த்த ஜெய்மல் பெரும் பீதியடைந்தான். அவன் மட்டும் அன்று அச்சத்துக்கு இடங்கொடாதிருந்தால், மேவாரின் அரியணை அவனுக்கு நிச்சயமாய்க் கிடைத்திருக்கும். ஆனால், உரமில்லாத அவன் இதயத்தில் அச்சம் புகுந்து கொண்டதால், தனது முயற்சி தோல்வியடைந்துவிடுமென எண்ணித் திடீரெனத் தன் புரவியில் ஏறிப் புரவியைத் தட்டினான். எதிர்பாராத விதமாகப் புரவியின் காலடிச் சத்தம் கேட்டதும் மருண்டு ஒரு கணம்



விழித்த அவன் வீரர்கள், தலைவன் ஓடிவிட்டானென்பதை அறிந்ததும் விடுவிடென்று பின்வாங்கினார்கள். அவர்கள் பின்வாங்கியதும் அவர்களைத் துரத்த முற்பட்ட ஸங்கன் மற்றுமிருவர்களை வெட்டிச் சாய்த்தான். அந்த இரு வீரர்கள் சாய்ந்த சில விநாடிகளுக்குள்ளாக வாள்களின் சத்தம் மறைந்து, புரவிகள் ஓடும் காலடிச் சத்தம் தோப்பை ஆட்கொண்டது. அந்தச் சத்தமும் மெள்ள மெள்ள அடங்கவே, எதிரே மாண்டு கிடந்தவர்களை நோக்கினான் ஸங்கன்.

ஆறு பேர் இறந்து கிடந்தார்கள். மற்றும் சிலர் குற்றுயிருடனிருந்தார்கள். அவர்கள் குருதியையும் மண் உறிஞ்சிக்கொண்டிருந்தது. தபஸ்வினி தன்னை இங்கு செல்ல வேண்டாமென்று கூறியது எத்தனை சரியாகி விட்டதென்பதை உணர்ந்த ஸங்கன், அவள் தீர்க்க திருஷ்டியைப் பெரிதும் வியந்தான். அந்தத் தீர்க்க திருஷ்டியால் முளைத்த நம்பிக்கை அவன் ஆயுட்காலம் பூராவும் இருந்தது. அந்த நம்பிக்கை முளைத்த அந்தச் சமயத்தில்கூட பிருத்விராஜனையும் மாமனையும் எண்ணிய ஸங்கன் மீண்டும் ஆலயத்துள் சென்று அர்ச்சகர்களை அழைத்து, சாருணீ தேவி ஆலயத்துக்கு ஆட்களை அனுப்புமாறு கூறினான்.

ஸங்கன் வந்து அழைத்ததும் மிகுந்த பயத்துடன் கர்ப்பக்கிரகத்தின் கதவைத் திறந்த அர்ச்சகர்கள் உருவிய வாளுடன் அவன் நிற்பதைப் பார்த்து, அவன் வெற்றியடைந்துவிட்டான் என்பதைப் புரிந்துகொண்டாலும் அவன் இடத்தோளிலும் மார்பிலும் புதிதாகக் கத்திக் காயங்கள் ஏற்பட்டிருப்பதைக் கண்டு, ''அரச குமாரா! காயங்கள் பலமாயிருக்கின்றனவே'' என்றார்கள்.

''அதற்கு என்ன செய்யவேண்டும்!'' என்று கேட்டான் ஸங்கன்.

''கிராமத்துக்குள் சென்றால் மருத்துவர்கள் இருக்கிறார்கள்'' என்றார் அர்ச்சகர்களில் ஒருவர்.

''மருத்துவத்துக்கு இது சமயமல்ல. நான் சீக்கிரம் செல்ல வேண்டும். சாருணீ ஆலயத்தில் காயமடைந்த இருவர் இருக்கிறார்கள். அவர்களுக்கு உதவ மனிதர்களை அனுப்புங்கள்'' என்று கூறிவிட்டுப் பதிலுக்குக் காத்திராமல் கோயிலைவிட்டு வெளியே வந்து, தன் புரவியில் ஏறிக் கொண்டான். ஏறியதும் சில அடிகளே செலுத்தியிருப்பான். பிறகு யோசனை வந்ததால் சேணத்தை இழுத்து அதை நிறுத்தினான். மீண்டும் சித்தூர் சென்று நடந்ததைத் தந்தையிடம் தெரிவித்தாலென்ன என்று நினைத்தான். தந்தையிடம் தெரிவித்தால் நீதி செயலாற்றும், தர்மந்தவறாத மேவார் ராணா மல்லர், பட்டத்து இளவரசனைக் கொல்ல முயன்ற குற்றத்துக்காகத் தம்பிகளிருவரையும் தேசப் பிரஷ்டம் செய்வார் அல்லது கொன்று விடுவார் என்று எண்ணிய ஸங்கன், 'கேவலம், மண்ணாசைக்காகத் தம்பிகளை இழப்பதா? பிருத்விதான் அரியணையில் அமரட்டுமே. நான் ஓடி விட்டதாகவே இருக்கட்டும்'' என்று கூறிக் கொண்டதன்றி, ''தேவியின் ஆணைப்படி நான் நடக்க, மஞ்சளாற்றங்கரைக்குத்தானே போக வேண்டும்'' என்று தீர்மானித்துக் கொண்டான். ஆகவே, மேவாரின் வடக்கெல்லையை நோக்கிப் புரவியை நடக்கவிட்டான்.

அடுத்த இரண்டு நாள்கள் இடைவிடாது பயணம் செய்தபின் மஞ்சளாற்றங்கரைக்குச் சற்று முன்னாலிருந்த பிராமரர்களின் அரசன் கரம்சந்தின் ஆடுகள் மேயும் சமவெளியை அடைந்தான். அவன் அந்தப் புல் வெளியை



அடைந்தபோது கதிரவன் உதயமாகிவிட்டதால் மஞ்சள் வெயில் நன்றாகக் காய்ந்து கொண்டிருந்தது. ஏராளமான செம்மறியாடுகள் எங்கும் மேய்ந்துகொண்டிருந்தன. அங்கிருந்த யாதவன், யாரோ ஒரு வீரன் புரவிமீது வருவதைக் கவனித்ததும், மந்தைக்குள் புகுந்து வந்து, தன் கழியைத் தரையிலூன்றி, ''யார் நீ?'' என்று விசாரித்தான்.

''நீண்ட தூரத்திலிருந்து வேலை தேடி வந்திருக்கிறேன்'' என்றான் ஸங்கன்.

''என்ன வேலை தெரியும் உனக்கு?'' என்று கேட்டான் யாதவன்.

''போரிடத் தெரியும்?'' என்றான் ஸங்கன்.

அதைக் கேட்ட யாதவன் பெரிதாக நகைத்தான். ''போருக்கு நீ லாயக்கில்லையப்பா!'' என்றும் கூறினான்.

ஸங்கன் இதழ்கள் புன்முறுவலால் விரிந்தன. ''போருக்கு நான் லாயக்கில்லையா!'' என்று ஆச்சரியத்துடன் கேட்கவும் செய்தான்.

''ரத்தமும் காயமுமாக நீ வந்திருப்பதிலிருந்தே எங்கிருந்தோ தோற்று ஓடி வந்திருக்கிறாய் என்பது தெரிகிறது'' என்று கூறிய யாதவன், ஸங்கன் முகம் சோர்ந்திருப்பதைப் பார்த்து, ''என் குடிசைக்கு வா, குளித்து உண்டு சற்று இளைப்பாறு'' என்று அழைத்துக் கொண்டு போனான்.

யாதவன் உதவியால் நீராடிக் காயங்களைக் கழுவி, அவன் போட்ட பச்சிலை மருந்தையே ஏற்று தன் ஆடைகளுக்குப் பதில் அவனளித்த இடையர்கள் ஆடையை அணிந்த ஸங்கன், தன்னை விதி அழைத்துச் செல்லும்

பாதையை நினைத்துப் பெரிதும் வியந்தான். யாதவன் குடிசையிலிருந்து புல்வளர்ந்த சமவெளியின் மனோகரத் தோற்றத்திலும் அந்த வாழ்க்கையின் மன அமைதியிலும் மனத்தைப் பறி கொடுத்து, அந்த இடையனுடன் தங்கிய நாலைந்து நாட்களில் பல இடையர்கள் அவனுக்கு நண்பர்களாயினர். இடையர்களில் ஒரு இடையனாக, தன்னை ஆதரித்த இடையனுக்குக் கையாளாக ஊழியம் புரியத் தொடங்கினான், மேவாரை ஆளவேண்டிய இளவல்.

அரச உடை உடுத்திய மேனி ஆட்டிடையன் கம்பளியைப் போர்த்திக் கொண்டது. வாள் பிடித்த கை, ஆடு ஓட்டும் கோலைப் பிடித்தது. ஆனால், வாளைச் சுழற்றத் தெரிந்த வன்மை கோலைச் சுழற்றுவதில் தனக்கு இல்லாததை லங்கன் வெகு சீக்கிரம் உணர்ந்தான். அவன் கோலுக்கு அடங்கா ஆடுகள் மந்தையிலிருந்து பிரிந்து ஓடின. யாதவன் பலமுறை அவனைக் கடிந்து கொண்டான். "கோலைப் பிடித்து ஆட்டை வளைக்கத் தெரியாத நீ எதைத்தான் சரியாகச் செய்ய முடியும்?" என்று பல பேர் முன்னிலையில் கண்டிக்கவும் தொடங்கினான்.

அந்த கண்டனம் மற்றொருவர் வாயாலும் வந்தது. அந்த இடத்தை அடைந்த பத்தாம் நாள் மஞ்சள் வெயில் காய்ந்து கொண்டிருந்த சமயத்தில் ஆடுகள் சில மந்தையிலிருந்து விலகி ஓடவே, கோல் கொண்டு கண் மண் தெரியாமல் ஓடி, எதன்மீதோ மோதிக்கொண்டு திடீரென நிலத்தில் விழுந்தான். விழுந்தவன் தன் தலையைத் தூக்கி எதிரே பார்த்ததும், விழுந்தது தான் மட்டுமல்ல வென்பதைக் கண்டு கொண்டான். எதிரே சற்றுத் தூரத்திற் சப்பால் ஸ்வர்ணபிம்பம் போன்ற ஒரு கட்டழகியும் நிலத்தில் விழுந்து கிடந்தாள்.



## அத்தியாயம் - 5

# சொர்ணாதேவி

கண்மண் தெரியாமல் ஆடுகளை விரட்டிப்போய் எதன் மீதோ மோதித் தரையில் விழுந்த லங்கன் தலையை நிமிர்ந்து நோக்கியதும், தான் மோதியது ஒரு புரவி என்பதையும், தன் மோதலின் விளைவாகவே புரவி, எதிரே விழுந்து கிடந்த பெண்ணை முதுகிலிருந்து உதறியிருக்க வேண்டுமென்பதையும் புரிந்துகொண்டான். அப்படிப் புரிந்துகொண்ட அந்த நேரத்திலும் சட்டென எழுந்திருந்து அந்தப் பெண்ணிடம் மன்னிப்புக் கேட்கவோ புரவியை மீண்டும் கடிவாளத்தைப் பிடித்து அவள் கையில் ஒப்படைக்கவோ அவன் மனம் இடம் தரவில்லை. அவள் அழகைக் கண்டு மனம் செயலற்றுக் கிடந்தது.

புரவியிலிருந்து தரையில் விழுந்துவிட்ட அந்தச் சமயத்திலும் அந்த மங்கை, மிக ஒய்யாரமாக இயற்கையின் கலைக்கரம் வீசிய சிற்பக் கொடி போல் கிடந்ததை லங்கன் கவனித்தான்.

சற்றே ஒருக்களித்து ஒருபுறமாக விழுந்துவிட்ட அந்தப் பாவை, தன் இடக்கையை ஊன்றி லேசாகத் தலையைத் தூக்கியபோது, அவள் அழகிய கண்கள் லங்கன் நோக்கி நெருப்பைக் கக்கின வென்றாலும் லங்கன் கண்களில் அந்தக் கனல் படவில்லை. அந்தக் கூர்வேல்கள் இரண்டின் கடுமையையே லங்கன் விழிகள் ஆச்சரியத்துடன் ஆராய்ந்தன. கோபத்திலும் அழகு உண்டானால் அதற்கு உவமை தன் எதிரிலேயே இருப்பதை உணர்ந்த

அந்த அரசகுமாரன், புரவியிலிருந்து விழுந்த அதிர்ச்சியில் அவள் ஆடைகள் கலைந்திருந்ததன் காரண மாகப் பத்தரை மாற்றுப் பசும் பொன்னையும் பழிக்கும் அவள் மஞ்சள்நிற மேனியின் பார்க்கவொண்ணாப் பகுதிகள் சிலவும் லேசாக வெளிப்பட்டுக் கிடந்ததையும் கவனித்தான். அப்படி கண்ணுக்குப் புலனான அவள் மார்பக விளிம்பின் திண்மையும், ஒரு காலின் முழந்தாளுக்கு மேலே மிகச் சிறிய அளவிலே தெரிந்த உருண்டதும் பட்டைவிட மென்மையானதுமான தொடையின் முன்புறமும் மாலையின் மஞ்சள் நிற வெயிலில் அதிக ஒளி பெற்றுத் திகழ்வதைக் கண்ட ஸங்கன், 'எது எதற்கு அழகு தருகிறது; இவள் மேனிக்கு மாலை வெயில் மெருகு கூட்டுகிறதா? அல்லது இவள் மேனி வெயிலுக்கில்லாத புது மெருகை அளிக்கிறதா?' என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டான்.

அந்தச் சொர்ணப் பாவையின் அங்கங்களிலெல்லாம் அந்த வாலிபன் கண்கள் விழுந்து புரண்டன. விசாலமான நெற்றியைத் திடீரெனச் சந்திரனைச் சூழ வரும் மேகம் போல் கவித்து, ஆனால் தடைப்பட்டுவிட்ட நிலையிலிருந்த அவள் கருங்குழல், வளைந்த கருத்த புவருங்கள், சற்று எடுப்பான நாசி, கோபத்தால் துடிதுடித்த சமயத்திலும் சற்றே மடிந்ததோடு தேன் துளிர்க்கும் செம்பருத்தி மலர் இதழ்கள் போல் கவர்ச்சியுடன் காட்சியளித்த உதடுகள், புரவியிலிருந்து விழுந்த மேலாடை சற்று விலகிக் கச்சை மட்டுமே இருந்ததால் அந்தக் கச்சையை மீறித் தெரிந்த மார்பக விளிம்புகள், அந்த விளிம்புகளைத் தொடர்ந்து



அவன் தன்னை அணு அணுவாக ஆராய்வதைக் கண்ட அந்த அழகி திடீரென எழுந்தாள். கோபத்துடன் இரண்டடி எடுத்தும் வைத்தாள். ஆனால், நடப்பது அவ்வளவு எளிதாயில்லை. அவள் கால், சுளுக்கிக் கிடந்தது. சற்றுச் சிரமப்பட்டே நடந்தாள் அவள். அவள் நொண்டி நடந்த சமயத்தில் அவள் இடை எத்தனை சிறியதாக, எத்தனை அழகாக அசைந்தது என்பதைக் கவனித்தான் ஸங்கன். இடைக்குக் கீழே தொகுக்கப்பட்டு நின்ற கால்களின் ஆரம்பப் பகுதிகள் எத்தனை திண்மை என்பதையும் பார்த்த அவன், அடியோடு நிலைகுலைந்து விழுந்தபடியே கிடந்தான்.

மிகவும் சிரமப்பட்டு நடந்துவந்த அந்த அழகி, ஸங்கனுக்குச் சற்று எட்ட நின்று, ''டேய், எழுந்திரு'' என்று கட்டளையிட்டாள். அந்தக் கட்டளையைத் தாங்கிய சொற்கள் மிகுந்த உஷ்ணத்துடன் உதிர்ந்ததைக் கண்ட ஸங்கன் மெள்ள புன்முறுவல் செய்தான்.

அவன் புன்முறுவலைக் கண்ட அவள் கோபம் முன்னைவிட அதிகமாயிற்று. ''எதற்குச் சிரிக்கிறாய்?'' என்று எரிந்து விழுந்தாள்.

''விழுந்ததில் லேசாகக் காயம் பட்டிருக்கிறது.'' ஸங்கன் பதில் சாதாரணமாக வெளிவந்தது.

''காயம் பட்டால் சிரிப்பார்களா?''

''வேறென்ன செய்வார்கள்?''

''அழுவார்கள்.''

இதைச் சொல்லிக்கொண்டே மெள்ள எழுந்த லங்கன் சற்று தூரத்தில் விழுந்து கிடந்த தன் கோலைக் கையில் எடுத்துக்கொண்டான். அவன் மிகச் சாவதானமாக எழுந்ததையும், நிதானமாகக் கோலை எடுத்துக் கொண்டதையும், தன்னைப் புரவியிலிருந்து தள்ளியதற்கு ஒரு வார்த்தைகூட மன்னிப்புக் கேட்காததையும் கண்ட அந்த அழகி, அவனைத் தன் கண்களால் சில விநாடிகள் எரித்து விடுபவள்போல் பார்த்தாள். ஆனால் சில விநாடிகளில் அந்தக் கோபக் கனல் அவள் அழகிய விழிகளிலிருந்து மறைந்தது. அவன் முகத்தைக் கூர்ந்து அவள் வேல் விழிகள் ஆராய்ந்தன. எதையோ நினைவு படுத்திக் கொள்ள முயல்வதுபோல் அவள் நெற்றி சுளித்தது. புருவங்கள் மெள்ள நெருங்கின. எதையோ யோசித்து முடிவு காணாதவள் தலையை ஒருமுறை ஆட்டிக் கொண்டாள். பிறகு, கடைசியாக லங்கன் சொன்ன பதிலை நினைத்துத் தன் செவ்விய இதழ்களில் லேசான புன்முறுவலொன்றைப் படரவிட்டுக் கேட்டாள், ''நீ என்ன வேதாந்தியா?'' என்று.

''எதற்குக் கேட்கிறீர்கள்?'' என்று வினவினான் லங்கன், அவள் அழகிய பிரதேசங்களில் கண்களை உலாவ விட்டு.

''காயம் பட்டால் சிரித்தாயே?''

''ஆம், சிரித்தேன்.''

''அழுகையும் சிரிப்புக்குச் சமம் என்று சுட்டிக் காட்டினாயே?''

''ஆமாம்.''



''ஆம்''

அதுவரை நிதானமாகப் பேசி வந்தவள் இப்பொழுது பெருங்கோபத்துடன் கேட்டாள், ''பெண்களை வெறித்து வெறித்துப் பார்ப்பதும் வேதாந்தியின் வேலையோ?'' என்று.

லங்கன் தலையைத் தாழ்த்திக்கொண்டான். பிறகு சொன்னான், ''அதுவும் ஒரு வகையில் வேதாந்தியின் அலுவல்தான்'' என்று.

கோபத்திலும் அவள் கண்கள் ஆச்சரியத்தால் மலர்ந்தன. ''அழகையும் ஆராய்வது வேதாந்தியின் வேலையா?'' என்று வினவினாள்.

''ஆம்; அழகு ஆண்டவன் கரங்களிலிருந்து மலர்வது. அதைக் காண்பதில் ஆண்டவனைக் காண்கிறோம்.''

''அப்படியானால் என்னிடத்தில் ஆண்டவனிருக்கிறானா?''

''இல்லாவிட்டால் இத்தனை அழகு இருக்காது.''

''என்னிடத்தில் ஆண்டவனைக் கண்டாயா, அழகைக் கண்டாயா?''

''இரண்டையுந்தான்.''

''புரியவில்லை எனக்கு!''

''அழகு வேறு, ஆண்டவன் வேறல்ல.''

''நல்ல வேதாந்தம் இது. இந்த வேதாந்தத்தை எல்லோரும் கடைப்பிடித்தால் என்ன ஆகும்?''

''வேதாந்தத்தை எல்லோரும் கடைப்பிடிக்க முடியாது.''

''ஏன்?''

''அப்படியா?''

''ஆம்; ராவண கிருகத்தில், நிலையும் ஆடையும் குலைந்த பல ஸ்திரீகளை அனுமார் பார்த்தார். அவர் மனம் சலிக்கவில்லை. அது வேதாந்தியின் பார்வை. அழகை ரசிக்கும் ஆனால், பொருளில் மனத்தைச் செலுத்தாது.''

ஸங்கன் வேதாந்தம் பேசியது அந்தப் பெண்ணுக்குப் பெரும் விசித்திரமாயிருந்தது. அவன் காட்டிய காவிய உவமை இன்னும் ஆச்சரியத்தை அளித்தது. ஒரு கண் இழந்து, அடிபட்ட சிங்கம்போல் நின்ற அவன் திடத்தைப் பார்த்து, 'இவன் எதையோ மறைக்கிறான். இவன் ஆட்டிடையனாயிருக்க முடியாது' என்று தனக்குள் சொல்லிக்கொண்டாள்.

அவள் யோசனை செய்வதைக் கண்ட ஸங்கன் பணிவுடன் வினவினான், ''என்ன யோசிக்கிறீர்கள் தேவி?'' என்று.

''வேதாந்தி உண்மை பேச வேண்டியது அவசியமா?'' என்று கேட்டாள் மெல்லச் சிரித்து.

''வேதாந்தத்தின் அடிப்படையே உண்மை'' என்றான் ஸங்கன்.

அவளுடைய அடுத்த கேள்வியைக் கேட்ட ஸங்கன் அதிர்ச்சியடைந்தான். ''அப்படியானல் நீ யார்? உண்மையைச் சொல்'' என்றாள்.

கேள்வியைக் கேட்டுச் சிறிது நேரம் திகைப்பால் மௌனம் சாதித்தான் மேவார் இளவரசன். பிறகு, திடப் படுத்திக் கொண்டு கூறினான்: ''தற்சமயம் ஆடு மேய்ப்பவன்.''

''இதற்கு முன்பு?'' -மீண்டும் எழுந்தது கேள்வி.

''கிட்டத்தட்ட இப்படி ஒரு வேலைதான்'' என்றான் ஸங்கன்.



நொடிப் பொழுதில் உண்மையைப் புரிந்து கொண்டாள் அவள். உண்மை திடீரெனப் புத்தியில் பளிச்சிட்டதால் சில விநாடிகள் ஏதும் பேசாமல் நின்றாள். பிறகு திடீரெனப் புரவியில் ஏறிச் சென்றுவிட்டாள்.

அவள் போகும் திக்கைப் பார்த்துக்கொண்டே நின்ற ஸங்கன், புரவியில் திடமாக அவள் அமர்ந்து சென்ற முறையிலிருந்தும், அலட்சியமாக அவள் கடிவாளத்தைப் பிடித்துக்கொண்டு தலையைத் திருப்பித் தன்னைப் பார்த்ததையுங் கண்டு, 'இவள் சாதாரணப் பெண்ணாயிருக்க முடியாது, அரசகுமாரிதான்!' என்று தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டு பெருமூச்செறிந்ததன்றி, அந்தப் பெருமூச்சைத் தொடர்ந்து மெள்ளச் சிரிக்கவும் செய்தான். 'என் வாழ்வே ஒரு பெரும் கதை! மன்னன் இடையனா வதும் இளவரசியைச் சந்திப்பதும் காதலிப்பதும் கதைகளில் நடக்கும். வாழ்வில் இது புதுமை! இதென்ன? என் வாழ்வில் சகலமும் புதுமை! அரசை இழக்க நான் சாருணீதேவியின் ஆலயத்துக்குச் சென்றதும் புதுமை! கண்ணையிழந்ததும் புதுமை! இங்கு ஆடு மேய்ப்பதும் புதுமை! இன்னும் எத்தனை எத்தனை புதுமையோ!' என்று நினைத்து வியந்து நின்றான்.

அவன் அப்படிச் சிலைபோல் நின்ற சமயத்தில் யாதவனான மாரு வந்து, ''என்ன இப்படி நிற்கிறாய்? ஆட்டை யார் கவனிப்பது? மந்தையே கலைந்து விட்டதே'' என்று மிரட்டினான்.

யாதவர் தலைவன் வந்ததும், அதுவரை மந்தையின் மறைவில் பதுங்கிக்கிடந்த இடையர்கள் ஓடிவந்து, ''மாரு! மந்தை கலைந்தது மட்டுமல்ல! இவனால் இன்னோர் உபத்திரவமும் வந்திருக்கிறது'' என்று முறையிட்டார்கள்.

''என்ன அது?'' யாதவனான மாருவின் குரலில் பயம் நிரம்பிக் கிடந்தது.

''சற்றுமுன்பு சொர்ணாதேவி இங்கு வந்திருந்தார்கள்.''

''யார்! ஸ்ரீநகர் அரசகுமாரியா! ராம்கரம்சந்த்தின் மகளா!'' என்று வினவினான் மாரு.

''ஆம். இளவரசிதான் வந்திருந்தார்கள். அவர்களை இவன் புரவியிலிருந்து தள்ளிவிட்டான்'' என்று மிதமிஞ்சிய கிலியுடன் சொன்னார்கள் மற்ற யாதவர்கள்.

''சரி, தொலைந்தோம், நாளைக்கு இளவரசி வீரர்களுடன் வருவாள். மன்னர் என்ன செய்வாரோ! என்ன தண்டனை கிடைக்குமோ!'' என்று அலறினான் மாரு.

மாரு நினைத்ததுபோல் மறுதினமும் இளவரசி வந்தாள். ஆனால், வீரர்கள் வரவில்லை, தனிப்பட வந்தாள். அவள் புரவிக்கெதிரே மாரு, கைகட்டி வாய் புதைத்து நின்றான். ''நேற்று இங்கிருந்தாரே, அவர் எங்கே?'' என்று வினவினாள் சொர்ணாதேவி.

அவள் பேச்சைக் கேட்டு ஆச்சரியத்தால் ஸ்தம்பித்தான் யாதவனான மாரு. 'அவர் எங்கே! எத்தனை மரியாதை இந்தப் புதிய அடிமைக்கு!' என்று வியந்தான். பிறகு, பதிலேதும் சொல்லாமல் குடிசையைக் காட்டினான். குடிசையை நோக்கிச் சென்ற இளவரசி, புரவியிலிருந்து இறங்கிக் குடிசைக்குள் நுழைந்தாள்.

நுழைந்தவள், குடிசையின் உட்புறத்திலிருந்த காட்சியைக் கண்டதும் பல விநாடிகள் பேசாமலே மௌனமாக நின்றிருந்தாள். ஸங்கனின் முதுகுப்புறம் வாயிலை நோக்கித் திரும்பியிருந்ததாலும் உள்ளே நுழைந்த இளவரசியும் ஓசைப்படாமல் கதவைத் திறந்து வந்ததாலும்,



அவள் வந்ததை ஸங்கன் கவனிக்கவில்லை. அங்கிருந்த பெரும் மரக்கட்டைகளில் இரண்டு மூன்றினை உயரமாக அடுக்கி அவற்றின்மீது உட்கார்ந்து, முழங்கால்கள் மீது கைகளை ஊன்றியவண்ணம் எதிரே எரிந்துகொண்டிருந்த அடுப்பில் சோள அடைகளைத் தட்டிக் கொண்டிருந்தான்.

அவன் உட்கார்ந்திருந்த தோரணையையும், இறுகிய சதைப்பிடிப்பால் உரம் நிறைந்த விசாலமான அவன் முதுகையும், காளையின் முசுப்புகள் போல் எழுந்த திடமான தோள்களையும் கண்ட சொர்ணாதேவி, பெரிய வீரனொருவனைத் தான் நோக்கிக்கொண்டிருப்பதை உணர்ந்தாள். அத்துடன், முதல் நாள் அவன் தன்னிடம் பேசிய வார்த்தைகளையும் நினைத்து, 'இவர் சாதாரண வீரரல்ல; ஏதோ அரசுக்கும் உரியவர். சந்தேகமில்லை. அதற்கு அந்தத் தோரணையே அத்தாட்சி' என்று, எழும்பிய தோள்களையும் மனத்திற்குள் சுட்டிக் காட்டிக் கொண்டாள். இப்படி ஒருத்தி தன்னை ஆராய்ந்து நிற்பதை அறியாமல் சோள அடைகளை அடுப்பில் சுட்டுக் கொண்டிருந்த ஸங்கன், அடைகளைத் திருப்பத் தெரியாமல் திருப்பவே, இரும்புச்சட்டி அவன் கையில் சுட. இரு முறை கையை உதறி, ''ச்சூ! ச்சூ'' என்று 'சூ'வும் கொட்டினான். அதைக் கேட்ட அவள் இன்பமாக நகைத்தாள்.

இன்னொரு முறை நெருப்புச் சுட்டவன் போல் ஸங்கன் திடீரென எழுந்து திரும்பினான். அவன் திரும்பிய வேகத்தில் சரிந்துவிட்ட அவன் மேலாடையிலிருந்து வெளிப்பட்ட அகன்ற மார்பையும், அதிலிருந்த பல தழும்புகளையும் கண்ட சொர்ணாதேவி, தன் ஊகம் சரிதானென்று முடிவு செய்துகொண்டதால் மீண்டும் ஒரு முறை நகைத்தாள்.

அவளைக் கண்டதும் ஸங்கன் சில விநாடிகள் குழம்பினான்; சற்று சங்கடப்படவும் செய்தான். பிறகு, ஏதோ பேசவேண்டுமென்பதற்காக, ''எதற்குச் சிரிக்கிறீர்கள்?'' என்று கேட்டான்.

''தெரியாத வேலையைச் செய்தால் சங்கடம் ஏற்படுவது இயற்கைதானே!'' என்றாள் சொர்ணா தேவி, பதிலுக்கு.

''அதற்கும் உங்கள் சிரிப்புக்கும் சம்பந்தம் விளங்கவில்லை'' என்றான் ஸங்கன். அவனுக்கு நன்றாக விளங்கித்தானிருந்தது. இருப்பினும், அவள் வாயால்தான் அந்தக் காரணம் வரட்டுமே என்ற யோசனையில் அப்படிப் பேசினான் மேவாரின் இளவரசன். பதிலுக்கு மீண்டும் நகைத்தாள் அவள்.

அத்தியாயம்-6

## சிலாதித்தனின் சித்திரம்

இரும்பத் திரும்ப ஒரு பெண் தன்னைப் பார்த்து ஏளன நகை புரிவதாயிருந்தால் எந்த வீரனுக்கும் கோபம் வரத்தான் செய்யுமென்றாலும் ஸங்கன் மட்டும் சிறிதும் நிதானத்தை இழக்காமலே அவளை நோக்கி, ''அரசகுமாரி நீங்கள் எதற்காக நகைக்கிறீர்கள் என்பதை நான் அறியவில்லை'' என்றான்.

''அறிந்திருந்தால் ஏன் கேட்கிறீர்கள்?'' என்று கேட்டாள் சொர்ணாதேவி, சிரிப்பை நிறுத்திக்கொண்டு.



''சில தகவல்களை அவரவர்கள் வாயிலிருந்து வரவழைப்பது நல்லது'' என்றான் ஸங்கன்.

ஸங்கன் சம்பாஷணையை எந்தத் திக்கில் திருப்புகிறானென்பதை அறியாத சொர்ணாதேவி, ''அப்படியா!'' என்றாள்.

''ஆம், அரசகுமாரி'' என்று மேலும் ஏதோ சொல்லப் போன ஸங்கனைத் தடுத்த சொர்ணாதேவி ''என்ன! என்ன! அரசகுமாரியா?'' என்றாள் வியப்புடன்.

''ஆம், சொர்ணாதேவி! பிரமா குல ராஜபுத்திரர்கள் தலைவரான கரம்சந்தின் மகளை வேறு எப்படி அழைக்கலாம்?'' என்றான் ஸங்கன், தன் இதழ்களில் முறுவல் கூட்டி.

சொர்ணாதேவி இம்முறை முகத்தில் எந்தவித ஆச்சரியத்தையும் காட்டவில்லை. ''மறந்துவிட்டேன். இதில் ஊகத்திற்கு இடமில்லை. நான் யார் என்பதை மாருவும் மற்ற யாதவரும் கூறியிருப்பார்கள். ஆனால், எனக்கு அத்தகைய உதவியில்லை'' என்றாள் கரம் சந்தின் மகள்.

''உதவியா! எதற்கு?'' என்று வினவினான் ஸங்கன்.

''உங்களை யாரென்று அறிவதற்கு. என்னை அறிவதற்கு உங்களுக்கு யாதவர்கள் உதவியாயிருந்தார்கள். உங்களை அறிய அப்படி யாருமில்லை. ஆனால்...'' என்று சற்று பேச்சை நிறுத்திய அரசகுமாரி, அவனை மீண்டுமொருமுறை ஊடுருவி நோக்கினாள்.

''ஆனால்?'' சற்று சந்தேகத்துடன் எழுந்தது ஸங்கனின் கேள்வி.

''உங்கள் செயல்கள் உதவி புரிந்தன...'' என்றாள் அரசகுமாரி.

''இதெல்லாமா?''

''ஆம், நீங்கள் அடையைச் சுடுவதற்குப் பதில் கையைச் சுட்டுக் கொண்டீர்களல்லவா?''

''ஆம்.''

''அந்தச் செயல் சொல்லியது.''

''என்னவென்று?''

''அது அடை சுடும் கையல்லவென்று. தவிர...''

''உம், சொல்லுங்கள் அரசகுமாரி!''

''நீங்கள் என்னை நோக்கித்திரும்பினீர்கள்.''

''ஆம்.''

''திரும்பிய தோரணை சொல்லியது...''

''தவிர?''

''அதோ அவை சாட்சி சொல்லின. யாரும் மறுக்க முடியாத சாட்சி'' என்று, சொர்ணாதேவி தன் அழகிய கையை உயர்த்தி, அவன் மார்பகத்தையும் பின்புறத் தோள்களையும் சுட்டிக் காட்டினாள். பிறகு, அவன் கண்ணையும் சுட்டிக்காட்டினாள். ''அதோ அந்தக் காயங்களை யாதவர்கள் உடல்களில் காண முடியாது. பெரும்வாட்களால் எதிருக்கு எதிர் நின்று போர் புரிந்ததால் ஏற்பட்ட காயங்கள் அவை. அதோ அந்தக் கண்ணிலும் அம்பு பாய்ந்து சில நாட்களே ஆகின்றன. வீரத்தின் சின்னங்கள் இவை. இவை சொல்லும் கதை யாதவனொருவன் கதையல்ல. வீரனொருவன் சரித்திரத்தை, க்ஷத்திரியகுலத் தோன்றலொருவன் வரலாற்றைப் பறைசாற்றுகின்றன, இந்த அடையாளங்கள்.''



இப்படிப் பேசி உணர்ச்சி அதிகமாகப் பொங்கி வழிந்ததால் பேச்சை சற்று நிறுத்தினாள் அவள். பேசப் பேச அவள் முகத்தில் ஏறிய சிவப்பைக் கண்டு, அந்திவானம் அப்படித்தானிருக்கும் என்று நினைத்த ஸங்கன், மெள்ள நடந்து அவளருகே வந்து சில விநாடிகள் அவளைப் பார்த்துக் கொண்டே நின்றான். பிறகு சொன்னான், ''அரசகுமாரி! நீங்கள் சாம்ராஜ்ய பீடத்தில் அமர வேண்டியவர்கள்'' என்று.

''அப்படியொரு பீடம் ஒருநாள் கிடைக்கும் எனக்கு'' என்றாள் அரசகுமாரி.

''பிரமரர்கள் அரசு சிற்றரசு. அது போதாது உங்களுக்கு. உங்கள் அறிவின் திறனும் எழிலின் சிறப்பும் இருக்க வேண்டிய இடம் பேரரசு ஒன்றின் அரியணையில்'' என்று ஸங்கன் கூறினான்.

''நாட்டில் அப்படியிருப்பது?''

''மேவார் ஒன்றுதான். அதில் நீங்கள் ஏன் அமரக் கூடாது?''

''அமரலாம். ஆனால் அதில் அமரப்போகிறவன் மூர்க்கன்; போர் வெறி பிடித்தவன்.''

''யாரவன்?''

''பிருத்விராஜன்.''

''வீரர்களுக்கு வெறியர்கள் என்ற பெயரைச் சூட்டுவது உலக வழக்கம்.''

ஸங்கனின் பேச்சைக் கேட்டு வியப்படைந்தாள் சொர்ணாதேவி. என்ன காரணத்திற்காக மூர்க்கனான பிருத்விராஜனுக்கு இவன் பரிந்து பேசுகிறான் என்பது

அவளுக்குப் புரியவில்லை. பிருத்விராஜனை அவள் பார்த்ததில்லை. மேவார் இளவரசர்கள் யாவரையுமே கண்டதில்லை. அப்படிக் கண்டிருந்தால் அவள் உண்மையை உணர்ந்திருப்பாள். ஆனால், மஞ்சளாற்றங் கரையிலிருக்கும் பிரமரர்கள் ராஜ்யமெங்கே? ஹாராவளியில் புதைந்து கிடக்கும் மேவார் ராஜ்யமெங்கே? தொலை தூரமிருந்த அரசின் இளவல்களைப் பார்க்கும் வாய்ப்புதான் அந்த அழகிக்கு ஏது? ஆகவே லங்கனுக்கும் பிருத்விராஜனுக்கு மிருந்த ஜாடை ஒற்றுமையைப் புரிந்து கொள்ள அவளால் இயலவில்லை. இருப்பினும் கேட்டாள், ''பிருத்விராஜனை உங்களுக்குத் தெரியுமா?'' என்று.

''தெரியும்'' என்றான் லங்கன், குரலில் எந்த உணர்ச்சியையும் காட்டாமல்.

''நானும் மேவார் பிரஜைகளில் ஒருவன்.''

''அவருடைய வீரர்களில் ஒருவரா?''

''ஆம்.''

''போர் நிகழ்ந்தால்?''

''அவன் பக்கத்தில் நின்று போர் புரியக் கடமைப் பட்டவன்.''

இந்தப் பதிலைக் கேட்டதும் அரசகுமாரி திடுக் கிட்டாள். மேவார் பட்டத்து இளவரசனை 'அவன்' என்று லங்கன் அழைத்தது பெருவியப்பாயிருந்தது அவளுக்கு. அதற்கு மேல் அவள் அதைப்பற்றிப் பேசுவதை நிறுத்திக் கொண்டு, பேச்சை வேறு மார்க்கத்தில் திருப்பினாள். ''இன்று நான் ஏன் வந்தேன், தெரியுமா?'' என்று வின வினாள்.



''எனக்கு எப்படித் தெரியும்?'' என்றான் லங்கன்.

''உங்களை அரண்மனைக்கு அழைக்க வந்தேன்'' என்றாள் அரசகுமாரி.

''எதற்கு?''

''நீங்கள் க்ஷத்திரிய வீரர் என்பதை நேற்றே புரிந்து கொண்டேன். என் தந்தைக்குத் துணை நிற்க நல்ல வீரர்கள் தேவையாயிருக்கிறது.''

லங்கன் சிறிது நேரம் யோசித்தான். ஆடு மேய்க்கும் வேலையைவிடப் பழக்கமான போர்த்தொழிலில் பிறந்திருந்ததால், ''சரி, நாளை வருகிறேன்'' என்று ஒப்புக் கொண்டான். அவள் புறப்படத் தயாரானாள். லங்கன் வாயில் வரை வந்து, அவளைப் புரவி மேல் ஏற்றி வழியனுப்பினான்.

மாருவும் மற்ற யாதவர்களும் குடிசைக்குச் சற்று தூரத்தில் பிரமித்து நின்றிருந்தார்கள். சொர்ணாதேவியால் தங்களுக்கும் லங்கனுக்கும் ஆபத்து வருமென்று நினைத்துக் கொண்டிருந்த யாதவர்களுக்கு சொர்ணா தேவி நீண்ட நேரம் குடிசைக்குள் தாமதித்ததே வியப்பாயிருந்தது. தவிர, அவள் வெளியில் லங்கனுடன் சிரித்துப் பேசிக் கொண்டு வந்தது அதைவிடப் பெரும்வியப்பாயிருந்தது. எல்லாவற்றையும்விட அபரிமிதமான ஆச்சரியமும் மறுநாள் காத்திருந்தது. கரம்சந்திடமிருந்து வந்த வீரர் இருவர் லங்கனுக்குத் தலைதாழ்த்தி வணங்கி, மிகுந்த மரியாதையுடன் அவனை அரண்மனைக்கு அழைத்துச் சென்றார்கள். மாருவும் மற்ற யாதவர்களும் பிரமிப்பின்

அதே நேரத்தில் சொர்ணாதேவியும் தனது அந்தப் புறத்தில் ஓர் ஆண்மகனின் சித்திரத்தைப் பார்த்துத் திகைத்து நின்று கொண்டிருந்தாள். அவள் பிரமிப்புக்குக் காரணம் புரியாத தோழியொருத்தி, "என்னம்மா! அப்படி ஆச்சரியப்படுகிறீர்கள்? இவர்தான் பிருத்விராஜ். மேவாரின் அரியணை ஏறவிருக்கும் இளவரசன்!" என்று விளக்கினாள்.

சொர்ணாதேவியின் அழகிய உதடுகள் மெள்ள அசங்கின. "இந்தச் சித்திரத்தை யார் வரைந்தது?" என்றாள்.

"துவார் குலத்தலைவன் சிலாதித்தன்-பிருத்விராஜனின் உயிர்த்தோழன்."

"இதை அனுப்பியதும் சிலாதித்தன்-பிருத்விராஜனின் உயிர்த்தோழன்."

"இதை அனுப்பியதும் சிலாதித்தனா?"

"ஆம்."

"எதற்காக?"

"உங்களைப் பிருத்விராஜனுக்கு மணமுடிக்க."

மேற்கொண்டு சொர்ணாதேவி பதிலேதும் சொல்லாமல் மௌனமாக, "அதே கண்கள்! அதே புருவம்! ஆனால், பார்வையில் மட்டும் சிறிது வித்தியாசம். இந்தக் கர்வம் அந்தப் பார்வையில் இல்லை. அந்தப் பார்வையில் ஆழம் இருக்கிறது. வீரத்துடன் சாந்தமும் கலந்தது அது" என்று அவள் உதடுகள் முணுமுணுத்தன. கொஞ்ச நஞ்சமிருந்த சந்தேகத்தையும் விளக்க உள்ளே நுழைந்தார் தந்தை. பெண் பிருத்விராஜனை உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பதைப் பார்த்து, "...



"வேறு யாரோ பட்டத்துக்கு வருவதாயிருந்ததே" என்றாள் சொர்ணாதேவி.

"பட்ட மகிஷியின் புதல்வன் ஸங்கன். ஆனால், அவன் எங்கோ மறைந்துவிட்டான்" என்றார் கரம்சந்த்.

"ஏன்?" என்று கேட்ட அரசகுமாரி, படத்திலிருந்து கண்களை நீக்கிச் சரேலென்று தந்தையை நோக்கித் திரும்பினாள். திரும்பினவள் வாயிற்படியை நோக்கியதும் சிலையென நின்றாள். கரம்சந்தும் திரும்பினார். திரும்பினவர் திடுக்கிட்டார். அவர் உதடுகள் மட்டும் மிதமிஞ்சிய ஆச்சரியத்தின் வசப்பட்டு, "ஸங்கன்! மேவார் இளவரசன்!" என்ற சொற்களை உதிர்த்தன.

## அத்தியாயம்-7

# கைப்பிடித்தவன்

மேவார் இளவலான ஸங்கன் அப்படித் திடீரெனத் தமது அரண்மனையில் தோன்றியது பிரமரகுல ராஜ புத்ரனான கரம்சந்த்துக்குப் பேராச்சரியமாயிருந்ததேயொழிய, அவர் புத்திரி சொர்ணாதேவிக்கு அது எத்தகைய வியப்பையும் அளிக்கவில்லை. யாதவர்கள் குடிசையில் அவனைப் பார்த்ததும், அவன் யாதவனல்ல வென்பதையும், க்ஷத்திரிய வீரன் என்பதையும், அரசுரிமைக்குப் பிறந்தவன் என்பதையும் புரிந்து கொண்டிருந்த சொர்ணாதேவி, சிலாதித்தன் அனுப்பியிருந்த சித்திரத்தைக் கண்டதும் ஸங்கன் ...

ருந்த முகஜாடை ஒற்றுமையையும், மேவார் இளவரசன் திடீரென மறைந்து விட்டானென்று ராஜபுதனத்தில் உலவிய வதந்தியையும் இணைத்துப் பார்த்த சொர்ணாதேவிக்கு உண்மை வெட்ட வெளிச்சமாகிவிட்டது. ஆனால், ஸங்கன் யாதவர்களிடம் மறைந்திருந்த விவரங்களை அறியாத கரம்சந்த் மட்டும், திடீரென ஸங்கன் தம் அரண்மனையில் வந்து முளைத்ததைப்பற்றிப் பிரமிப்பையே அடைந்தார். ஸங்கனைப் பலமுறை மேவார் தலைநகரில் பார்த்திருந்த கரம்சந்த்துக்கு ஸங்கனை அடையாளங் கண்டுபிடிப்பது அப்படியொரு பெருங்கஷ்டமாயில்லை.

ஸங்கனை அடையாளம் கண்டுபிடித்துக்கொண்ட தால் சில விநாடிகள் வாயடைத்து நின்ற கரம்சந்த், ''இந்த எளியவன் இருப்பிடத்திற்கு மேவாரின் பட்டத்து இளவரசன் வந்தது பிரமரர்கள் செய்த பாக்கியம்'' என்று முகமன் கூறி அவனை வரவேற்றார்.

இதைக் கேட்டதும் முகத்தில் முறுவல் சற்றே படர, கம்பீர நடை நடந்து, வாயிற்படியைத் தாண்டி, அரண்மனையின் அந்தப் பெருங்கூடத்துக்குள் நுழைந்த ஸங்கன், எதிரேயிருந்த பிருத்விராஜன் படத்தையும் நோக்கி விட்டுக் கடைசியாகத் தன் கண்களை கரம்சந்த்தின்மீது திருப்பி, ''தாங்கள் தவறாக மதிப்பிட்டுவிட்டீர்கள். மேவாரின் பட்டத்துக்குரியவன் அதோ இருக்கிறான்'' என்று பிருத்விராஜன் படத்தைச் சுட்டிக் காட்டினான்.

கரம்சந்த் ஸங்கனை ஆச்சரியத்துடன் நோக்கி விட்டுச் சொன்னார், ''பட்டத்துக்குரியவர் உரிமையையும் கடமையையும் காற்றில் பறக்கவிட்டு மறைந்ததால் இவர் பட்டத்துக்குரியவரானார்'' என்று.



''இப்போது இளவரசுப் பட்டம் பிருத்விக்குக் கிடைத்துவிட்டதல்லவா?'' என்று வினவினான் ஸங்கன்.

''ஆம், கிடைத்துவிட்டது. தாங்கள் இருக்குமிடமோ, இருப்பதாகத் தகவலோ கிடைக்காததால் மேவார் மன்னர் பிருத்விராஜனைப் பட்டத்து இளவரசராக நியமித்திருக் கிறார்'' என்று சற்று கண்டிப்புடன் சொன்னார் கரம்சந்த்.

''என் மனம் ஆனந்தப்படுகிறது'' என்றான் ஸங்கன்.

''தங்கள் தந்தை மனமும் மக்கள் மனமும் ஆனந்தப் படவில்லை'' என்றார் கரம்சந்த் பதிலுக்கு.

''ஏன்? பிருத்வி பெரிய வீரன். என்னைவிட வாளை நன்றாகச் சுழற்றக்கூடியவன்'' என்று ஸங்கன், பிருத்வி ராஜனுக்குப் பரிந்து பேசினான்.

கரம்சந்த்தின் ஆச்சரியம் எல்லை கடந்தது. சாருணீ தேவியின் ஆலயத்தில் நடந்த சம்பவங்கள் அந்தக் குறுகிய காலத்திற்குள் ராஜபுதனம் முழுவதும் பரவாவிட்டாலும் பல இடங்களில் பரவிவிட்டது. மாமனான சூரஜ்மல், தேவி ஆலயத்தில் நடந்ததை அப்படியே மன்னன் ரேமல்லனுக்கு ஒப்புவித்திருந்தான். அதனால் சினங்கொண்ட ரேமல்லன், சிலதினங்கள் பிருத்விராஜன் மீது சீற்றங்கொண்டாலும், ஸங்கன் இருப்பிடம் தெரியாததாலும், மேவாரைப்போன்ற பேரரசு இளவரசனின்றி இருக்க முடியாதாகையாலும் பிருத்விராஜனுக்கு இளவரசுப் பட்டத்தைச் சூட்டினான். ஸங்கன் மறைந்த காரணம், பிருத்விராஜன் கொடுமை ஆகிய அனைத்தையும் உணர்ந்திருந்ததால், ஸங்கனுடைய தாராள மனப்பான்மையைக் கண்டு வியப்பின் எல்லையை அடைந்த கரம்சந்த், அரசுபீடத்தில் உட்கார ஸங்கன் எத்தனை தகுதியுள்ளவன் என்பதை நினைத்துப் பார்த்தார்.

அதன் விளைவாகச் சற்று உக்கிரத்துடனேயே லங்கனுக்குப் பதில் சொன்னார், "அரசை ஏற்பவன் வாள் வீரனாக மட்டும் இருந்தால் போதாது" என்று.

"வேறெப்படி இருக்க வேண்டும்?" என்று லங்கன் வினவினான்.

கரம்சந்த் உடனே பதில் சொல்லவில்லை. சொரிதித்தன் வரைந்து அனுப்பியிருந்த பிருத்விராஜன் சித்திரத்தின்மீது சில விநாடிகள் தமது கண்களை ஓட்டினார். பிறகு அந்தச் சித்திரத்தைச் சுட்டிக்காட்டி, "இளவரசே! இதோ பாருங்கள். இந்தக் கண்களில் போர்வெறி தெரிகிறது. உதடுகளில் நிதானமற்ற தன்மை தெரிகிறது. இவர் அரசரானால் பெரும் போர்கள் நாட்டில் நிகழும். யாருடனாவது சண்டை பிடிக்கும் மனப்பான்மையிருக்கிறது தங்கள் சகோதரருக்கு. நாட்டைக் காக்கப் போர் வன்மை அவசியந்தான். ஆனால் தானாகப் போரை இழுக்கும் தன்மை அரசனுக்குக் கூடாது. அரசனின் முதல் வேலை மக்களைப் பரிபாலிப்பது; மக்களுக்கு நன்மை பயக்கும் காரியங்களைச் செய்வது. போர் அத்தகைய பணியல்ல. போரினால் மக்கள் அவதியடைகிறார்கள். அதுவும் அவசியமற்ற வீண் போர்கள் நாசத்தையே விளைவிக்கும். அத்தகைய ஆட்சியைத்தான் இவரிடம் எதிர்பார்க்கலாம்" என்றார்.

"வேறு யாராவது பட்டத்துக்கு வந்தால் போர் நேரிடாது என்பது என்ன நிச்சயம்?" என்று வினவினான் லங்கன்.

"நிச்சயமில்லை. போர் நேரிடலாம். உதாரணமாக தில்லியிலுள்ள இஸ்லாமியர் நம்மீது படையெடுக்கலாம்;



அப்பொழுது போர் நேரிடும். அது நாட்டைக் காக்கும் அவசியமான போர். அந்தப்போரை உங்கள் சகோதரரிடம் நான் எதிர்பார்க்கவில்லை. உள்நாட்டுப் போரை, ராஜபுத்ரன் ராஜபுத்ரனை அழிக்கும் போரை-நான் எதிர்பார்க்கிறேன். சகோதரனைப் பட்டத்துக்காகக் கொல்லத் துணியும் சுபாவம் வேறு வழியில் கொண்டு விடாது" என்று பதில் சொன்னார் கரம்சந்த்.

"பிருத்விராஜ் சிறுபிள்ளை. இதுவரை பொறுப்பில்லை. பொறுப்பு ஏற்பட்டால் சரியாகிவிடுவான்" என்று பதில் சொன்னான் லங்கன்.

இருப்பினும் கரம்சந்த் அதை ஒப்புக்கொள்ளவில்லை. ஒப்புக்கொள்ளவில்லையென்பதை அவர் புன்முறுவல் நிரூபித்தது. அது மட்டுமல்ல, அவர் லங்கனிடம் நடந்து கொண்ட எல்லையற்ற மதிப்பையும் நிரூபித்தது. மேவார் அரியணையில் உட்கார இத்தகைய பரந்த மனப்பான்மையும் வீரத்துடன் நிதானமும் உள்ளவனே தகுந்தவன் என்று தனக்குள் லேசாகச் சொல்லிக்கொண்டார். தவிர, லங்கனை நீண்ட நேரம் நிற்க வைத்துவிட்டதை அறிந்த கரம்சந்த், "மன்னிக்க வேண்டும். தங்களை நிற்க வைத்தே பேசுகிறேன். உள்ளே வாருங்கள்" என்றழைத்த கரம்சந்த், அதுவரை எதுவுமே பேசாமல் மௌனியாகிவிட்ட சொர்ணாதேவியை நோக்கி, "சொர்ணா! நீ வரச்சொல்லியிருக்கும் அந்த வீரனை மற்றொரு நாள் பார்க்கிறேன் என்று சொல்லியனுப்பிவிடு. இன்னும் சில நாட்கள் அவன் யாதவருடன் இருக்கட்டும். முதலில் நாம் மேவார் இளவரசரைக் கவனிக்க வேண்டும்" என்றார்.

இதைக் கேட்ட சொர்ணாதேவி மெள்ள நகைத்தாள். அவள் சிரிப்பின் காரணத்தை அறியாத கரம்சந்த்தின் விழிகளில் கோபம் மண்டியது. "சொர்ணா, நீ குறுநில மன்னனின் மகள். ஆகவே, பேரரசின் இளவல்கள் வரும் போது நடந்து கொள்ளும் முறையைக் கற்றுக்கொள்ள வேண்டும். மேவார் இளவரசரின் முன்பு இப்படி நகைப்பது சரியல்ல" என்று கண்டிக்கவும் செய்தார்.

ஸங்கன் தன் ஒற்றை விழியை அவளை நோக்கித் திருப்பினன். அந்தப் பார்வையைச் சந்திக்கத் திறனற்ற சொர்ணாதேவி, தன் கண்களை நிலத்தில் ஓட்டினாள். அதைக் கண்ட ஸங்கன் மெள்ள நகைத்து, "பிரமரகுல மன்னர் இளவரசியைக் கண்டித்துப் பயனில்லை" என்றான்.

"ஏன்?"

"என்னைப் பார்த்துப் பலமுறை இளவரசி ஏளனச் சிரிப்புச் சிரித்திருக்கிறார்!"

"உண்மையாகவா!" கரம்சந்த் சினத்தின் வசப் பட்டார்.

"வேண்டுமானால் இளவரசியையே கேளுங்கள்" என்றான் ஸங்கன்.

கரம்சந்த் தமது கோப விழிகளைச் சொர்ணா தேவியின்மீது திருப்பி, "இது உண்மையா, சொர்ணா?" என்று வினவினார்.

"ஆம்" சொர்ணாதேவி நிலத்திலிருந்து கண்களை எழுப்பாமலே பதில் சொன்னாள்.

"என்ன துணிவு உனக்கு?" என்று சீறினார் கரம்சந்த்.

"துணிவுக்குக் காரணம் அறிவீனம்" என்றாள் சொர்ணாதேவி.



"அது புரிகிறது!" சீற்றத்தில் ஏளனமும் கலந்திருந்தது கரம்சந்த்தின் குரலில்.

"நீங்கள் நினைக்கும் அறிவீனமல்ல..." என்று மீண்டும் தொடங்கினாள் சொர்ணாதேவி.

"அறிவீனத்தில் பலவகை இருக்கிறதா?"

"இருக்கிறது. அதில் இவரை யாரென்று நான் உணராதது ஒன்று."

"தெரியாமற் செய்த குற்றமா?"

"ஆம்."

"மேவார் இளவரசரைத் தெரியாதவர்கள் உண்டா?"

இதைக் கேட்ட கரம்சந்த், அப்பொழுதுதான் முதன் முதலாக ஸங்கன் உடையைக் கவனித்தார். பாதி சொந்த உடையும், பாதி யாதவர் உடையும் அணிந்திருந்த ஸங்கனைப் பார்த்ததும் அவருக்கு மெள்ள உண்மை விளங்கலாயிற்று. "அப்படியானால் நீ கூறிய வீரர்...?" என்று தட்டுத் தடுமாறிக் கேட்டார் கரம்சந்த்.

"இவர்தான்" என்று கூறிய சொர்ணாதேவி, அதற்கு மேல் அங்கு நிற்காமல் ஸங்கன்மீது தன் கண்களை ஒருமுறை திருப்பிவிட்டு, உள்ளே சென்று விட்டாள்.

கரம்சந்த்தின் மனத்தில் ஆனந்த வெள்ளம் புரண் டோடியது. ஸங்கனைச் சந்தித்த விவரங்களைச் சொர்ணா முதல் நாள் கூறியபோது, அவளுக்கிருந்த உற்சாகத்தை அவர் கவனிக்கத் தவறாததால், அவள் மனப்போக்கை ஓரளவு புரிந்துகொண்ட கரம்சந்த், தமது மகளின் மனத்தை அத்தனை துரிதத்தில் கவர்ந்தவன் யாராயிருக்க முடியும் என்று எண்ணியதாலேயே, அவனை நேரில் அரண்மனைக்கு

வரவழைத்துப் பார்க்கத் தீர்மானித்தார். அப்பொழுது அவன் மேவார் இளவரசனாயிருக்க முடியுமென்பதை அவர் சொப்பனத்தில்கூட நினைக்காததால், குழம்பிக் கிடந்த அவர் மனத்தில், அந்த வீரன் லங்கனேயென்பதை அறிந்ததும், பெரு மகிழ்ச்சி குடிகொண்டதில் என்ன வியப்பிருக்க முடியும்?

ஆகவே, லங்கன் என்ன மறுத்துச் சொல்லியும் கேளாமல், அவனைத் தம்முடனேயே அரண்மனையில் நிறுத்திக் கொண்டார் கரம்சந்த். மேவாரின் இளவரசனுக் குரிய சகல மரியாதைகளும் அவனுக்குக் காட்டப்பட்டன. லங்கன் எங்கு சென்றாலும் அவனைத் தொடர்ந்து செல்லப் பதினைந்து ராஜபுத்ரர்களும் மெய்க்காவலாக நியமிக்கப் பட்டார்கள். சிலாதித்தன் அனுப்பிய சித்திரத்தை அவர் அன்றே எடுத்துத் திருப்பியனுப்பி விட்டார். பிருத்விராஜனுக்குப் பெண்ணைக் கொடுக்க முடியாததற்கு மன்னிப்புக்கோரி ஓர் ஓலையையும் சிலாதித்தனுக்கு அனுப்பினார். ஓலையில் மரியாதை நிரம்பிக் கிடந்தது. ஆனால், கேவலம், ஒரு சிற்றரசன் தனது பெண்ணை மேவார் பட்டத்து இளவரசனுக்குக் கொடுக்க மறுத்ததால் பெரும் சினங் கொண்டான் சிலாதித்தன். எப்படியும் பிரமரர்கள் சிற்றரசை ஒழித்து விடுவதென அன்று முதல் கங்கணமும் கட்டிக் கொண்டான். 'எவன் சொர்ணா தேவிக்கு மாலை சூடினாலும் அவன் என் எதிரி' என்று பலர் முன்னிலையில் சபதமும் செய்தான். சபதத்தைக் கேட்டுப் பல ராஜ புத்திரர்கள் நகைத்தார்கள். ஆனால் சரித்திரம் நகைக்கவில்லை. மிகவும் விபரீதமான விளைவை மேவாருக்கு விளைவித்தது அந்தச் சபதம். சபதத்தின் பலன் உடனே கிட்டவில்லையென்பது உண்மை. ஆனால்



சிலாதித்தன் இதயத்தில் அது எரிமலையெனப் புகைந்து கொண்டிருந்தது. சில எரிமலைகள் வெடிக்க நாளாகிற தல்லவா? அப்படித்தானிருந்தது சிலாதித்தன் விரோதமும். வெடிக்க வருஷங்கள் பல ஆயின. வெடித்தபோது அது ராஜபுதனத்துக்கே பெரும் நாசத்தை விளைவித்தது.

இப்படி உருவாகும் விரோதத்தை அறியாமலே லங்கன் பல மாதங்களைப் பிரமரர்கள் சிற்றரசில் கழித்தான். அவன் அங்கிருந்ததால், பிரமரர்கள் சிற்றரசு நாளுக்குநாள் வலுப்பட்டது. மஞ்சளாற்றங்கரையிலிருந்த யாதவகுலத்தோரைத் தாக்கி வந்த திருடர் கூட்டத்தை லங்கன் அடியோடு அழித்துவிட்டதால் யாதவர்கள் பயமில்லாமல் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தார்கள். அதற்கு முன்பெல்லாம் தனியாக மஞ்சளாற்றங்கரைக்குப் போகாத சொர்ணாதேவி தனது அரசில் ஏற்பட்ட பய நிவர்த்தியால் தனியாகவே மஞ்சளாற்றுக்கு அடிக்கடி போய் வந்தாள். அவள் உள்ளம் ஆனந்தத்தில் ஆழ்ந்து கிடந்தது. காரணம், லங்கன் அருகிலிருந்தது மட்டுமல்ல. பிருத்விராஜன் வேறு ஒருத்தியைத் திருமணம் செய்து கொண்டு விட்டானென்பதையும், பிருத்விராஜனுக்கு ரேமல்லன் இளவரசுப் பட்டத்தைக் கட்டி விட்டார் என்பதையும் கேட்டதும் அதற்கு ஒரு காரணம். இனி லங்கன் தன்னை மணம் செய்யத் தடை சொல்ல முடியா தென்று அவள் எண்ணினாள். அது மட்டுமல்ல; இனி அவன் மேவாருக்குச் செல்வதில் அர்த்தமில்லையாகையால் பிரமரர் நாட்டிலேயே இருப்பான்; அதாவது, தன் அருகில் இருப்பானென்பது இன்னொரு காரணம்.

இத்தகைய எண்ணங்களில் பூரிப்படைந்த சொர்ணா தேவி, மகிழ்ச்சிக்கடலில் மூழ்கிக் கிடந்தாளேயொழிய

… பல மாதங்களில் ஸங்கனை ஒரு முறைகூடச் …க்கும் வாய்ப்பு அவளுக்குக் கிட்டவில்லை. அவன் …ரவியில் அமர்ந்து, இடுப்புக் கச்சையால் கட்டப்பட்டவாள் புரவியின் நடையில் அசைய, பிரமர சிற்றரசின் மாற்றாரை அடக்கச் செல்லும் காட்சியை உப்பரிகையிலிருந்து பலமுறை பார்த்திருக்கிறாளானாலும், அவனை அணுகிப் பேசும் சந்தர்ப்பம் மட்டும் கிடைக்கவில்லை. அவளுக்கு அது எதிர்பாராமல் கிடைத்தபோது அடுத்த பலனும் மிக வேகமாகவே கிட்டியது.

மஞ்சளாற்றில் தோழிகளுடன் அவள் நீராடிக் கொண்டிருக்கையில் அந்தப் பக்கம் வந்த ஸங்கன் தனது புரவிக்கு நீர்காட்ட அவளிருந்த துறையை அடைந்தான். ஆனால், அங்கிருந்த பெண்கள் கூட்டத்தைக் கண்டதும் திடீரெனப் புரவியின் கடிவாளத்தைப் பிடித்து இழுத்துக் கொண்டு வேறு துறைக்குச் செல்லத் திரும்பினான். அவன் வருவதைக் கண்டதும் சொர்ணாதேவியின் தோழிகள் கரையேறிப் பக்கத்துத் தோப்பில் மறைந்துவிட்டார்களானாலும், சொர்ணாதேவி மட்டும் வேண்டுமென்றே தாமதித்தாள். அவன் நதிக்கரையை அடைந்து புரவிக்கு நீர் காட்டாமல் திரும்ப முற்பட்டதும், சொர்ணாதேவி சட்டென்று நீரிலிருந்து எழுந்து, கரையை அடைந்து "புரவிக்கு நீர் காட்டுங்கள்; அதை தாகத்துடன் அழைத்துச் செல்ல வேண்டாம்" என்றாள் தைரியத்துடன்.

ஸங்கன் மெள்ள புரவியை இழுத்துக்கொண்டு மீண்டும் திரும்பி வந்தவன், சொர்ணாதேவியைக் கண்டு ஒரு கணம் தயங்கினான். அவள் ஈர உடை வெளிப்படுத்திய அவள் இணையற்ற அழகைப் பார்த்து ஒரு முறை அவன் உடல் நடுங்கியது. அவளைப் பார்த்த கண் திடீரென



நிலத்தை நோக்கியது. மஞ்சளாற்றையும் ஒருமுறை பார்த்து அவளையும் பார்த்த ஸங்கன், 'அவள் மஞ்சள் நிற மேனியழகுக்கு மஞ்சளாற்றின் நிறம் தூசி பெறாது'' என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டான். பிறகு, பேசாமல் புரவியை இழுத்துக்கொண்டு துறையில் இறங்கினான்.

சொர்ணாதேவியின் கண்கள், ஸங்கன் உடல் நடுங்கியதையோ, அவன் குழப்பத்தையோ கவனிக்கத் தவறாததால் அவள் உள்ளத்தில் இன்ப வெள்ளம் ஓடியது. ஒரு கண்ணில்லாத நிலையிலும் அவன் முகம் எத்தனை கம்பீரமாயிருக்கிறது என்பதை நினைத்துப் பெருமூச்சு விட்டு, மெள்ள நடந்து தன் தோழிகளிருந்த தோப்புக்குள் சென்றாள்.

புரவிக்கு நீர்காட்ட மஞ்சளாற்றுத்துறையில் இறங்கிய ஸங்கன், நீண்டநேரம் கரையிலேயே உட்கார்ந்து விட்டான். அவன் மனம், சாருணீதேவியின் ஆலயத்திலிருந்து அன்று வரை நடந்த சம்பவங்களை எண்ணிக் கொண்டிருந்தது. தன் மனம் சொர்ணாதேவியிடம் அடிபட்டுச் சிக்கிவிட்டதை எண்ணிப் பெருமூச்செறிந்தான். 'ஒரு கண்ணற்றவன், அரசைத் துறந்து மறைந்துறைபவன், என்னால் அவளுக்கு என்ன பயன்? அழகுக்குக் கண் தேவை. சுகபோகங்களுக்கு அரசு தேவை. இரண்டுமில்லாத நான் அவளை எண்ணுவதும் பிசகு' என்று தன்னையே நிந்தித்துக்கொண்டே நீண்ட நேரம் சிந்தனையில் ஆழ்ந்தான்.

அந்தச் சிந்தனையைச் சொர்ணாதேவியே கலைத்தாள். "எத்தனை நேரம் இப்படி உட்கார்ந்திருப்பதாக உத்தேசம்?" என்று பக்கத்திலிருந்து வந்த சொற்களால் அதிர்ச்சியடைந்து திரும்பிய ஸங்கன், தனது பக்கத்தில் அரசகுமாரி அமர்ந்திருப்பதையும், அவள் புது ஆடை

ணிந்து, தலையைக்கோதி முடித்து, அதில் ஒரு மலரையும் செருகிக் கொண்டிருப்பதையும் கண்டு, என்ன சொல்வதென்றறியாமல் ஒருகணம் திகைத்தான். பிறகு, ''நீங்களா!'' என்று கேட்டு எழுந்திருக்கவும் முயன்றான்.

''எழுந்திருக்க வேண்டாம். உட்காருங்கள்'' என்றாள்.

''ஏன்? இங்கென்ன வேலையிருக்கிறது?'' என்று வினவினான் ஸங்கன், சொர்ணாதேவியின் அருகில் சங்கடத்துடன் மகிழ்ச்சியும் கலந்த குரலில்.

''வேலையில்லாததால் உட்கார்ந்திருக்க ஆசைப் படுகிறேன்'' என்றாள் சொர்ணாதேவி, மஞ்சளாற்று நீரை விட்டுக் கண்களைத் திருப்பாமலே.

''தோழிகள்?''.

''போய்விட்டார்கள்.''

''உங்களுக்குத் துணை?''

''மேவார் இளவரசர் இருக்கிறார்.''

''மேவார் இளவரசர் பிருத்விராஜன்.''

''அதுமற்றவர்களுக்கு.''

''உங்களுக்கு மட்டும் சட்டம் வேறா?''

''ஆமாம். நீதியின் சட்டம். நேர்மையின் சட்டம். அந்தச் சட்டப்படி எங்களுக்கு மேவார் இளவரசர் ஒருவர் தான்.''

''நீங்கள் சொல்வது தவறு, அரசகுமாரி...'' என்று ஆரம்பித்த ஸங்கனை இடைமறித்த சொர்ணாதேவி, ''நீங்கள் என்றழைத்தால் இனிப் பதில் சொல்லமாட்டேன்'' என்றாள்.



''பின் எப்படி அழைப்பது?'' என்று கேட்டான் ஸங்கன்.

''நீ என்றழைப்பது.''

''அரசகுமாரியையா?''

''ஆமாம். சிற்றரசன் பெண்ணைப் பேரரசின் இளவல் அப்படித்தானே அழைக்க வேண்டும்?''

''தவறு, அரசகுமாரி. அந்தஸ்துக்கும் கண்ணியமான நடைமுறைக்கும் சம்பந்தமில்லை. மணமாகாத ஒரு பெண்ணிடம் யாராயிருந்தாலும் மரியாதையுடன் நடந்து கொள்வதுதான் நியாயம்.''

''மணமாகிவிட்டால்?''

''அப்பொழுதும் உரியவன்தான் நீ என்றழைக்கலாம்.''

சொர்ணாதேவி மஞ்சளாற்றை விட்டுத் தன் கண்களை ஸங்கன்மீது திருப்பி, ''உரியவர் அழைக்கலாமல்லவா?'' என்றாள்.

''அழைக்கலாம்'' என்றான் ஸங்கன்.

சொர்ணாதேவி மேற்கொண்டு பேசவில்லை. தன் கையிலொன்றைக் காட்டி ''இதைப்பாருங்கள்'' என்றாள்.

''என்ன பார்க்க வேண்டும்?'' ஸங்கன் தயக்கத்துடன் கேட்டான்.

''நீங்கள் குதிரையிலிருந்து என்னை யாதவர்கள் முன்பு தள்ளியபோது ஏற்பட்ட காயத்தின் தழும்பு இது'' என்றாள் சொர்ணாதேவி.

அவள் புறங்கையைத் தன் கையால் பிடித்து இருமுறை திருப்பிப் பார்த்தான் ஸங்கன். சொர்ணாதேவி

கலவென நகைத்தாள். "என்ன நகைக்கிறீர்கள் தேவி?" என்று கேட்டான் ஸங்கன்.

"மணமாகாத ஒரு பெண்ணின் கையைப் பற்றும் உரிமை யாருக்கு உண்டு?" என்று கேட்டாள் சொர்ணா தேவி.

ஸங்கன் அதிர்ச்சியடைந்தான். காரணம், அவள் கேள்வி அல்ல. இன்னும் பலரின் நகைப்பு அவன் காதில் விழுந்தது. சரேலென்று கரையிலிருந்து எழுந்த ஸங்கன், வேட்டைக்குப் போய் வந்த கரம்சந்த்தும் மற்றும் சில வீரர்களும் சிறிதும் தூரத்தில் புரவிகளில் அமர்ந்தவண்ணம் தங்களைப் பார்த்து நகைப்பதைக் கண்டான்.

## அத்தியாயம்-8

# இன்னொரு கண்

மஞ்சளாற்றங்கரையில் அமர்ந்த தன் மகளின் கையை இன்னொருவன் பிடித்ததைக் கண்கொண்டு பார்த்த பின்புங்கூட, பிரமரகுல ராஜபுத்திரன் சிறிதும் சீற்ற மடையாமல் கேலிச் சிரிப்புச் சிரித்ததையும் அவனுடன் வந்திருந்த மற்ற வீரர்களும் அந்தக் கேலியில் கலந்து கொண்டதையும் கண்ட ஸங்கன், திகைப்பை மட்டுமின்றி ஓரளவு வியப்பையும் அடைந்து சில நிமிடங்கள் ஸ்தம் பித்து நின்றான். அவன் திகைப்பையோ வியப்பையோ சிறிதும் லட்சியம் செய்யாத பிரமரகுல ராஜபுத்திரன், அடுத்த விநாடி அங்கு நிற்காமலும், தன் பெண்ணை வாவென்று கூட அழைக்காமலும், திடீரெனக் குதிரையைத்



திருப்பிக்கொண்டு வேகமாக சென்று விட்டதும், அவன் திக்பிரமையை ஓரளவு உயர்த்தவே செய்ததென்றாலும், சொர்ணாதேவி மட்டும் அவன் காட்டிய எந்த உணர்ச்சிகளிலும் ஈடுபடாமல் வெட்கத்துக்கு மட்டும் இடங்கொடுத்து, அந்த வெட்கத்தால் முகம் சிவக்கப் பக்கத்தே நின்ற ஸங்கனைப் பார்க்கவும் திராணி யற்றவளாய்க் கண்களை நிலத்தில் நாட்டினாள். கரம்சந்த்தின் புரவியும் அவனுடன் வந்த வீரர்களின் புரவிகளும் கண்ணுக்கு மறையும் வரையில் அவற்றையே பார்த்துக் கொண்டு நின்ற ஸங்கன், தனது முகத்தை மெள்ளச் சொர்ணாதேவியை நோக்கித் திருப்பினான்.

சொர்ணாதேவி அப்பொழுதும் நிலத்தை நோக்கியே நின்றிருந்ததைக் கண்டு தவறாக அர்த்தம் செய்து சொண்ட ஸங்கன், "சொர்ணாதேவி! இதில் நீங்கள் அச்சம் கொள்வதற்கு ஏதுமில்லை. உங்கள் தந்தையிடம் நான் விளக்கிச் சொல்கிறேன். அவர் புரிந்துகொள்வார்" என்று தேறுதல் சொன்னான்.

அந்தத் தேறுதல் மொழிகளைக் கேட்ட சொர்ணா தேவி, நிலத்தை நோக்கி புன்முறுவல் செய்துகொண்டே சொன்னாள், "எனக்கு அச்சம் ஏதுமில்லை. என் தந்தைக்கும் விளக்கம் தேவையில்லை. அவர் புரிந்து கொண்டும் நாளாகிறது" என்று.

அவள் சொற்களின் அர்த்தத்தைப் புரிந்துகொள்ள முடியாமல் ஸங்கன் சில விநாடிகள் விழித்துவிட்டு, "எதைப் புரிந்துகொண்டுவிட்டார், சொர்ணாதேவி?" என்று வினவினான்.

"எதைப் புரிந்துகொள்ள வேண்டுமோ அதை" என்ற சொர்ணாதேவி, களுக்கென நகைத்தாள். கலகலவென

வைர ஜாலங்களைப் போல் உதிர்ந்த அந்த சிரிப் பொலியால் உணர்ச்சியில் சிக்கத் தொடங்கிய ஸங்கன் தன்னைத் திடப்படுத்திக்கொள்ளச் சுற்றும் முற்றும் நோக்கினான்.

மனோகரமான அந்த மாலை நேரத்தில் வீசிய கதிரவனின் மஞ்சள் வெயில், ஏற்கெனவே மஞ்சளாயிருந்த மஞ்சளாற்று நீரைத் தங்கமயமாக அடித்துக்கொண்டிருந்தது. ராஜபுதன பாலைவனத்தின் மணலுங்கூட அந்த மஞ்சள் வெயிலால் நிறம் மாறியிருந்ததால், எங்கும் பொன் பொடிகள் சிதறிக் கிடப்பனபோன்ற பிரமையைச் சிருஷ்டித்தன. இந்தச் சூழ்நிலையில் நின்ற சொர்ணா தேவியின் தங்க நிறக் கன்னங்கள் வெட்கத்தால் சிவந்து கிடப்பதைக் கண்ட ஸங்கன், கரம்சந்த்தை மறந்தான். அதுவரையில் தனக்கும் சொர்ணாதேவிக்கும் நடந்த உரையாடலையும் மறந்தான். 'இன்னும் சிறிது நேரம் போனால் கதிரவனும் இவள் கன்னத்தைப்போல்தானே சிவப்பான்?' என்று மட்டும் எண்ணினான். தனக்கெதிரே தலைகுனிந்து நின்ற அந்த தருணியின் அங்கலாவண்யங்கள் ஒவ்வொன்றையும் ஒற்றைக் கண்ணாலேயே பருகினான்.

நிலத்திலே தன் மீன் விழிகளைச் செலுத்தி நின்ற அந்த நேரத்திலும், மேவார் இளவலின் மனநிலையைச் சந்தேகமறப் புரிந்து கொண்டிருந்தாள் சொர்ணா தேவி. ஆண்களின் பலவீனத்தை அவர்களைப் பாராமலே புரிந்துகொள்ளும் அந்தச் சக்தியை மட்டும் ஆண்டவன் பெண்களுக்கு அளித்திராவிட்டால், பெண் சாகசம் என்ற சொற்கள் உலகத்திலேயே உதித்திருக்க மாட்டா. ஆண்களின் எண்ணங்களை உணருவதிலும், உணர்ந்தும் உணராதது போல் நடிப்பதிலும் பெண்களுக்கு ஏற்படும் உவகை



எல்லையற்றது. அந்த உவகையில் அன்று மூழ்கி நின்ற சொர்ணாதேவி எதும் அறியாதவள்போல், "ஏன் திடீரெனப் பேச்சை நிறுத்தி விட்டீர்கள்?" என்று நிலத்திலிருந்து தலையை உயர்த்தாமலேயே கேட்டாள்.

"தவறு செய்தவன் எப்படிப் பேச முடியும், தேவி?" என்று கேட்டான் சிறிது சங்கடத்துடன்.

"இது சரியாயிருக்கிறது?" என்றாள் சொர்ணாதேவி.

"எது சரியாயிருக்கிறது?" எதும் புரியாமல் வினவினான் ஸங்கன்.

"தாங்கள் என்னைத் தேவி என்றழைத்தது" என்று சொல்லி நகைத்தாள் கரம்சந்த்தின் மகள்.

"வேறெப்படி அழைப்பது?" என்று ஸங்கன் கேட்டான்.

"வேறெப்படியும் அழைக்க வேண்டாம்; இதுவே சரியாயிருக்கிறது" என்ற சொர்ணாதேவி, முகத்தில் முறுவல் கூட்டினாள்.

"அரசன் மகளை ஊழியன் அழைக்க வேண்டிய முறை அது" என்று விளக்க முற்பட்டான் ஸங்கன்.

"அந்த முறையும் உண்டு..."

"வேறு முறை இருக்கிறதா?"

"அரசகுமாரர்கள் வாழ்க்கைத் துணைவிகளை அழைக்கும் முறையும் அதுதான்! காவிய புருஷர்கள் அப்படித்தானே அழைக்கிறார்கள்?" என்று மெள்ளக் கேட்டாள் சொர்ணாதேவி.

இதற்குப் பதிலேதும் சொல்லாத ஸங்கன், பக்கத்தி லிருந்த தன் குதிரையின் கடிவாளத்தைப் பிடித்திழுத்துக்

கொண்டு வந்த, "அரசகுமாரி! உங்கள் புரவி எங்கே?" என்று வினவினான்.

"எதற்குக் கேட்கிறீர்கள்?" என்று பதிலுக்குக் கேட்டாள் சொர்ணாதேவி.

"கதிரவன் மலைவாயிலில் விழும் சமயம் நெருங்கி விட்டது" என்று மேல்திசையைச் சுட்டிக்காட்டினான் ஸங்கன்.

கதிரவன் தன் கிரணங்களின் உக்கிரத்தைப் பூரணமாக அடக்கிக்கொண்டு, பெரும் பழம்போல் நன்றாகச் சிவந்து மெள்ள மறைய முற்பட்டான். அந்தக் காட்சியில் மனத்தைப் பறிகொடுத்துச் சிறிது நேரம் நின்ற சொர்ணா தேவி, "என்ன அழகு, பார்த்தீர்களா!" என்று வினவினாள்.

"அழகைப் பார்ப்பதற்காக நான் அதைச் சுட்டிக் காட்டவில்லை, அரசகுமாரி. இன்னும் சற்று நேரத்தில் இருள் கவியத் தொடங்கிவிடும் என்பதற்காகவே காட்டினேன்" என்று கண்டிப்பான குரலில் கூறினான் ஸங்கன். அவன் குரலிலிருந்த அந்தக் கண்டிப்பின் காரணத்தைச் சொர்ணாதேவி நன்றாக உணர்ந்து கொண்டிருந்தாள். உள்ளத்தில் ஏற்பட்ட பலவீனத்தை மறைக்கவே ஸங்கன் அந்தக் கண்டிப்பைக் குரலில் காட்டுகிறானென்பதையும், எக்காரணத்தைக் கொண்டும் தன்னைப் போன்ற ஒரு பெண்ணுக்கு உலக நிந்தை ஏற்படக்கூடாதென்ற உத்தம எண்ணமே அவன் குரலின் உக்கிரத்துக்குக் காரணமென்பதையும் புரிந்துகொண்ட சொர்ணாதேவி, காதல் ததும்பும் கண்களுடன் அவனைப் பார்த்து, "உண்மைதான், சீக்கிரம் இருட்டித்தான்விடும்" என்றாள்.



"ஆகவே சீக்கிரம் நாம் புறப்பட வேண்டும்."

"புறப்பட வேண்டியதுதான்."

"அதற்குத்தான் புரவியெங்கே என்று கேட்கிறேன்."

"ஓகோ! அதற்குத்தான் கேட்டீர்களா?"

"ஆம்."

"புரவி தோப்பில் கட்டியிருக்கிறது."

"போய் அவிழ்த்து வா."

கோபத்தின் வசப்பட்டதால் திடீரென ஸங்கன் தன்னிடம் மரியாதையைக் கைவிட்டு, 'புரவியை அவிழ்த்து வா' என்று கூறியதைக் கேட்டதும், விஷமமாகப் புன் முறுவல் செய்த சொர்ணாதேவி, "நன்றாகச் சொன்னீர்கள்! தோப்பில் அதோ இருள் சூழத்தொடங்கி விட்டது. நான் தனித்துப் போகமாட்டேன்" என்றாள்.

"சரி, நானும் வருகிறேன்" என்ற ஸங்கன், தன் புரவியை இழுத்துக்கொண்டு அவள் பின்னே சென்றான். இருள் கவியத் தொடங்கிவிட்ட அந்த நேரத்தில் சொர்ணாதேவியின் அழகு முன்னைவிடப் பன்மடங்கு அதிகமாகத் தெரிந்தது ஸங்கனின் கண்ணுக்கு. அவள் முன்னே நடந்து சென்றதால் இடை நெளிந்த அழகையும், வெட்கத்தால் பின்னிய நடையின் விளைவாக அசைந்த மேனியின் பின்புற லாவண்யத்தையும் ஒற்றைக் கண்ணால் பருகிக் கொண்டு சென்ற ஸங்கனின் மனோநிலை, மீண்டும் பெரும் உணர்ச்சிகளுக்கு இடங்கொடுக்கலாயிற்று. தோப்புக்குள் புகுந்ததும் இருட்டின் விளைவாகப் பயப் பட்டவள் போல் சற்றுப் பின்னடைந்த சொர்ணாதேவியின் மலர் உடல் திடீரெனத் தாக்கியதாலும், அவள் பயத்தைப் போக்கக் குதிரைச் சேணத்தை எறிந்த ஸங்கன் திடீரென இரு

கைகளாலும் அவளைப் பிடித்ததாலும், அப்படி உடல் பூராவும் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட ஸ்பரிசத்தால் உணர்ச்சிகள் கட்டுகளை அடியோடு அறுத்துக்கொண்டு விட்டதாலும் ஸங்கன் மெய்ம்மறந்து நின்றான்.

வேண்டுமென்றே ஸங்கனை அந்தத் தோப்புக்குள் இழுத்துவந்த சொர்ணாதேவியின் உடல் பூராவும் இன்ப உணர்ச்சிகள் மின்னல் வேகத்தில் பாய்ந்துகொண்டிருந்தன. சுற்றிலும் தோப்பு மரங்கள் திரையிட்டு நின்றதால், அவள் சற்று தைரியத்துடன் அவன் மீது சாயவே செய்தாள். அப்படி அவள் இஷ்டத்துடன் சாய்ந்ததைக் கண்டதும், கொஞ்சநஞ்ச மிருந்த உறுதியைக் காற்றில் பறக்கவிட்ட ஸங்கன் கைகள், அவள் அழகிய தோள்களிலிருந்து கீழிறங்கி அவளை வளைத்தன. அந்தக் கரங்களின் இன்பச் சிறையில் வேண்டுமென்றே சுழன்றாள் சொர்ணாதேவி. அவள் தலை, பின்புறமாக அவன் மார்பில் சாய்ந்தது. தலையில் பக்கவாட்டில் செருகியிருந்த செண்பக மலர் தன் சுகந்தத்தை அவன் நாசிக்கு ஊட்டியது. அதனால் இன்பபோதை யடைந்து அவள் கழுத்தை நோக்கிக் குனிந்த ஸங்கன், வாசனைப் பொடிகளால் தேய்க்கப்பட்ட அவள் தேகத்தின் நறுமணத்தை நுகர்ந்து, 'இந்தப்பெண் மலரிடம் அந்தச் செண்பக மலர் என்ன செய்ய முடியும்?' என்று மனத்தே எண்ணினான். அடுத்த விநாடி அவன் சலனம் அகன்றது. பயம் விலகியது. லேசாக அவளைத் தழுவி நின்ற அவன் கரங்கள் திடீரென இறுகி, அவளை நசுக்கிவிடுவனபோல் நெரித்தன. வலிமையான அவன் உதடுகள் மிகுந்த துணிவுடன் அவள் கபோலத்தில் ஆழப் புதைந்தது. காலம் போவது தெரியாமல் நீண்ட நேரம் அந்த நிலையிலே நின்ற ஸங்கன், திடீரென அவளை விடுத்து, அவள் புரவியிருந்த



இடத்தை வெகு வேகத்தில் நாடி, புரவியை அவிழ்த்து இழுத்துக்கொண்டு வந்தான். வந்தவன் அவளை ஏறக்கூட அனுமதிக்காமல், ஒரு சிறு குழந்தையைத் தூக்குவதுபோல் அவளைத் தூக்கிப் புரவிமேல் வைத்துத் தன் புரவியில் தானும் ஏறிக்கொண்டான். ''வா சொர்ணா! மாளிகைக்குப் போவோம். இனி மறைத்துப் பயனில்லை'' என்றான் ஸங்கன், திடமான குரலில்.

அவன் கரங்களில் வலிமையைச் சற்றுமுன்பாக அனுபவித்த சொர்ணாதேவி, அவன் திடீரென ஒரு முடிவுக்கு வந்துவிட்டதைக் கண்டு, 'பெரும் முடிவுகளை நினைத்த மாத்திரத்தில் செய்யக் கூடிய இவரல்லவா மேவாரின் அரியணையில் இருக்க வேண்டும்' என்று எண்ணிப் பெருமூச்செறிந்தாள். அவள் பெருமூச்சின் காரணத்தைச் சரியாக உணராத ஸங்கன் சொன்னான், ''கவலைப்படாதே, தேவி! நானே உன் தந்தையிடம் இதைப் பற்றிப் பேசுகிறேன்'' என்று.

''பேசவேண்டிய அவசியமில்லை'' என்றாள் சொர்ணாதேவி.

''அவசியமில்லை!'' ஸங்கன் குரலில் ஆச்சரியம் மண்டிக் கிடந்தது.

''இல்லை.''

''ஏன்?''

''தந்தை முன்னமே புரிந்துகொண்டுவிட்டார் என்று நான் ஆரம்பத்திலேயே சொல்லவில்லையா?''

''அப்படியானால் உன் தந்தைக்கு...?''

''என் மனோ நிலை முன்னமே தெரியும்.''

''அப்படியா!''

''இன்னும் உங்களுக்குப் புரியவில்லை! என் மனநிலை மட்டும் என் தந்தைக்குப் புரிந்திராவிட்டால், நீங்கள் ஆற்றங்கரையில் என் கையைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்ததைப் பார்த்துவிட்டு நகைத்து விட்டா செல்வார்?''

இதைக் கேட்ட ஸங்கன் ஆச்சரியத்தில் ஆழ்ந்தான். இந்தச் சிறு உண்மை தனக்கு எப்படி தெரியாமற் போய்விட்டது என்பதை நினைத்து, விவரிக்க இயலாத வியப்பை எய்தினான். 'எத்தனை குருட்டுத்தனமாக இருந்து விட்டேன்...' என்று எண்ண முற்பட்ட ஸங்கனுக்கு அப்பொழுதுதான் தனக்குக் கண் ஒன்று இல்லையென்ற நினைப்பும் ஏற்பட்டது. 'என்ன தவறு செய்துவிட்டேன்! ஒரு கண்ணற்ற என்னைச் சொர்ணாதேவி எதற்காக திருமணம் செய்துகொள்ள வேண்டும்?' என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்ட ஸங்கன் இதயத்தில், பிரமாகுல ராஜபுத்திரிக்குத் தான் பெருந்தீங்கை விளைவித்த சோகம் ஏற்படவே, அந்தச் சோகத்தின் விளைவாகப் பெருமூச்செறிந்தான். அத்துடன், ''சொர்ணா! பெண்கள் அதிர்ஷ்டப்படி மணவாளன் வாய்க்கிறான்'' என்று சொன்னான்.

''ஆம், நான் அதிர்ஷ்டம் செய்திருக்கிறேன்'' என்றாள் சொர்ணாதேவி.

''இல்லை, சொர்ணாதேவி. நீ அதிர்ஷ்டம் செய்ய வில்லை. உன்னைக் கைப்பிடிக்க முயலுபவன்...''

''மேவார் அரியணையில் அமரத் தகுதி வாய்ந்தவர்...''



''ஆனால்...''

''அதைச் சகோதரனுக்காகத் தியாகம் செய்த பெருந்தகை.''

''அதுமட்டுமல்ல, சொர்ணா!''

''வேறென்ன?''

''ஒற்றைக் கண்ணன்.''

''இல்லை, இல்லை, தவறு.''

''தவறா?''

''ஆம். இன்னொரு கண் நானிருக்கிறேன்'' என்ற சொர்ணாதேவி, தன் புரவியை அவன் புரவியுடன் நெருக்கி அவன் கைமீது தன் கையை வைத்து, ''இதோ பாருங்கள், திரும்பத் திரும்ப உங்கள் குறைகளைச் சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்'' என்று, குரலில் காதல் பொங்கி வழியக் கூறினாள்.

அதற்குமேல் ஏதும் பேசாமல் ஸங்கன் புரவியை வேகமாக நடத்தவே, அவளும் தன் புரவியைத் தூண்டி மௌனமாகச் சென்றாள். இப்படிப் பேசாமலே சென்ற இருவரும், பிரமரர் தலைநகரின் முதல் மூன்று பெருவாயில்களையும் கடந்து அரண்மனையை அணுகிய போது, வாயிலில் புரவிகள் பல நின்று கொண்டிருப் பதையும், மேவாரின் சின்னங்களை அணிந்த வீரர்கள் பலர் அவற்றின் பக்கங்களில் ஆயுதபாணிகளாய் நிற்பதையும் கண்டனர். அதன் காரணத்தைப் புரியாது குதிரையிலிருந்து குதித்த ஸங்கனும் சொர்ணாதேவியும் ஒருவரையொருவர் விநாடி நேரம் பார்த்துக்கொண்டு, விடு விடு என்று

அரண்மனைக்குள் நடந்து சென்றனர். அரண்மனையின் முன்கூடத்திலிருந்த காவலனொருவன், ஸங்கனுக்காக மேவார் தளபதி காத்திருப்பதாகச் சொல்லி, அவனை கரம்சந்த்தின் அறைக்கு அழைத்துச் சென்றான். சொர்ணா தேவியை அந்தப்புரத்துக்குச் செல்லும்படி கூறிவிட்டு, கரம்சந்த்தின் அறைக்குச் சென்றான் ஸங்கன். அந்த அறையில் இருந்த தளபதி, ஸங்கனைக் கண்டதும் எழுந்து தலை தாழ்த்தி நின்றதைக் கண்டு, ''சிலாதித்தனா! நீ எப்பொழுது மேவாரின் தளபதியனாய்?'' என்று வினவவும் செய்தான்.

சிலாதித்தன், தாழ்த்திய தலையை நிமிர்த்தி, ''தங்கள் சகோதரர்கள் அந்தப் பதவிக்கு உயர்த்தினார்கள்'' என்றான்.

''யார், பிருத்விராஜனா?'' என்று கேட்டான் ஸங்கன்.

''ஆம்'' என்ற சிலாதித்தன், ஸங்கன் ஒரு கண்ணை இழந்திருப்பதைக் கண்டு திகைத்து, ''மேவார் இளவரசரின் கண்ணுக்குத் தீங்கு விளைவிப்பவனும் ராஜபுதனத்தில் இருக்கிறானா? யாரவன்?'' என்று கோபத்துடன் வினவினான்.

''அந்தக் கண் போனால் பாதகமில்லை, சிலாதித்தா'' என்றான் ஸங்கன்.

''ஏன்?'' என்று அர்த்தம் புரியாமல் வினவினான் சிலாதித்தன்.

''அதற்கு பதில் இன்னொரு கண் கிடைத்திருக்கிறது.''

''எங்கே அது?''

''இப்பொழுதான் உள்ளே சென்றது'' என்று கூறி நகைத்தான் ஸங்கன். சிலாதித்தன் நகைக்கவில்லை. ஏதோ



விரும்பத்தகாத சம்பவம் நடந்திருக்கிறதென்பதை அவன் முகபாவத்திலிருந்தே ஊகித்துக்கொண்ட ஸங்கன், ''என்ன சிலாதித்தா, என்ன விசேஷம்?'' என்று விசாரித்தான், கவலை தோய்ந்த குரலில்.

சிலாதித்தன் பதில் சொன்னான். சொன்ன பதிலைக் கேட்ட ஸங்கன், அடியோடு நிலைகுலைந்து ஸ்தம்பித்து நீண்ட நேரம் நின்றுவிட்டான். அவன் வாழ்வுக்கும் பிறந்த பொன்னாட்டுக்கும் பெரும் திருப்பத்தை அளித்த பதில் அது.

## அத்தியாயம்-9

# மகுடம் காத்திருக்கிறது!

மலைபோல் எதற்கும் அசையாமல் நிற்கக்கூடிய நெஞ்சுரம் வாய்ந்த மகாவீரனான ஸங்கன், சிலாதித்தன் சொன்ன பதிலைக் கேட்டதும், அடியோடு நிலைகுலைந்து ஸ்தம்பித்து நின்றுவிட்டானென்றால் அதற்குக் காரணம் இருக்கத்தான் செய்தது. உயிருக்கு ஆபத்து நேரிடுவதானாலும் எந்தவித உணர்ச்சியையும் காட்டும் பழக்கமில்லாத ஸங்கனுடைய முகங்கூடத் துக்கத்தின் சாயையை அதிகமாகப் பிரதிபலிக்க முற்பட்டதென்றால், சிலாதித்தன் கொண்டுவந்த செய்தி எத்தனை பயங்கரமானதாயிருக்க வேண்டுமென்பதைச் சொல்லத் தேவையில்லையல்லவா? சிலாதித்தன் வாயிலிருந்து முதலில் உதிர்ந்தவை நான்கே சொற்கள்தான். அந்த நான்கு சொற்களும் நான்கு கூரிய அம்புகளாக ஸங்கன் இதயத்தில் தைக்கவே, ஸங்கன்

முகத்தில் துக்கத்தின் ரேகை பரிபூரணமாகப் படர்ந்த தன்றி வருத்தங்கலந்த பெருமூச்சொன்றும் அவன் நாசியிலிருந்து வெளிப்பட்டது. "மேவார் மன்னர் மரணப் படுக்கையிலிருக்கிறார்" என்ற அந்த நான்கே சொற்களைக் கேட்டதால் மனமுடைந்த ஸங்கன், சிறிது நேரம் ஸ்தம்பித்து நின்று விட்டதையும், துயரம் தோய்ந்த பெருமூச்சு விட்டதையும் கவனித்த பிரமரகுல ராஜபுத்ரனான கரம்சந்த் வியப்பின் எல்லையை அடைந்தார். மேவார் சேனாதிபதி சிலாதித்தன் முதலில் பேச முற்பட்டு, "மேவார் ராஜவம்சப் புத்திரர்கள் மரணம் கண்டு அஞ்சுவதில்லை. அப்படியிருக்க மரணம் நேரிடப் போகும் செய்தியைக் கேட்டு அஞ்சுவது விரும்பத்தக்கதல்ல" என்றான். அவன் பேச்சில் ஏளனம் பெரிதும் கலந்திருந்ததைக் கண்ட கரம்சந்த் சற்றே கோபவசப்பட்டு நெருப்புப் பொறி பறக்கும் கண்களை சிலாதித்தன் மீது திருப்பினார். சிலாதித்தன் இரண்டாம் முறையாக வெளியிட்ட அறிவுரையால் சரேலெனச் சுயநிலையை அடைந்து விட்ட ஸங்கன், கோபம் வேண்டாமென்று தன் கையை உயர்த்தி கரம்சந்த்தை அடக்கிவிட்டு சிலாதித்தனை மிக நிதானத்துடன் நோக்கி, "மேவார் தளபதிகள் மரணத்தைக் கண்டு அஞ்சுவதுண்டா சிலாதித்தா?" என்று ஏதோ சாதாரணமாக விசாரிப்பதுபோல் விசாரித்தான்.

"இல்லை. அஞ்சுவதில்லை" என்று சிலாதித்தன் பதில்கூறினான்.

"மன்னர்கள் அஞ்சுவதுண்டா" என்று மீண்டும் ஸங்கன் வினவினான்.

"இல்லை, அஞ்சுவதில்லை" என்று சற்று குழப்பத்துடன் சொன்னான் சிலாதித்தான், இந்தக் கேள்விகளின் கருத்தைப் புரிந்துகொள்ளாமல்.



ஸங்கனின் இதழ்களில் இகழ்ச்சிப் புன்முறுவலொன்று படர்ந்தது. அந்த இகழ்ச்சி, முகத்திலும் பிரதிபலிக்க சிலாதித்தனை நோக்கிக் கேட்டான், "மன்னர் மரணப் படுக்கையிலிருக்கிறார். அவருக்கு அதைப்பற்றி அச்சமில்லை. அவர் மரணமடைவதைப்பற்றி அச்சமில்லை. அப்படியிருக்க அந்தச் செய்தியை எதற்காக இங்கு கொண்டு வந்தாய்?"

"மன்னர் என்னை அனுப்பியதற்கு அச்சமல்ல காரணம், வேறு காரணங்கள் இருக்கின்றன" என்றான் சிலாதித்தன்.

"மற்றவர்களுக்கும் வேறு காரணங்கள் இருக்கலாமல்லவா?"

"இருக்கலாம்"

"அப்படியிருக்க மேவார் குலத்தான் ஒருவனுக்கு, அச்சம் கற்பித்துப் பேசும் துணிவை உனக்கு யார் அளித்தது?" என்று கேட்டு, தன் நீண்ட வாளையும் நோக்கி, சிலாதித்தனையும் ஒருமுறை நோக்கினான் ஸங்கன்.

ஸங்கனின் ஒற்றைக்கண் பார்வை சென்ற இடங்களையும், அவன் நிதானமாகப் பேசினாலும் அவன் குரலில் லேசாகத் தொனித்த உஷ்ணத்தையும் கவனித்த சிலாதித்தன் உள்ளத்தில் சற்றே திகில் ஊறினாலும் அதை வெளிக்குக் காட்டிடாமல், "ஏழை தவறு செய்துவிட்டேன். மன்னிக்க வேண்டும்" என்று, குரலில் எந்த உணர்ச்சியையும் காட்டாமல் கூறி, தலையை மட்டும் தாழ்த்தி ஸங்கனை வணங்கினான். அத்துடன் மேற்கொண்டும் சொன்னான், "பிரபு! மேவார் நிலையை உள்ளபடியே உணர்ந்தால் என்

பதற்றப் பேச்சுக்கும் குழப்பத்துக்கும் உங்களுக்குக் காரணம் தெரியும்'' என்று.

ஸங்கனுடைய ஒற்றைக்கண் மீண்டும் சிலாதித்தனை நோக்கி எழுந்தது. ''மேவார் நிலையில் என்ன மாறுதல் ஏற்பட்டிருக்கிறது?'' என்று வினவினான் ஸங்கன்.

''ராணா ரேமல்லர் இறந்தால், மேவாரை ஆள அரா குமாரர் யாருமில்லை'' என்ற மற்றொரு வெடியை எடுத்து வீசினான் சிலாதித்தன்.

முந்திய செய்தியைவிடப் பல மடங்கு அதிக அதிர்ச்சியைக் கொடுத்த இந்தச் செய்தியால், ஸங்கன் மட்டுமின்றி கரம்சந்த்தும் ஸ்தம்பித்துச் சில விநாடிகள் நின்றதுமல்லாமல், முதலில் சுயநிலையடைந்த கரம்சந்த்தே கேள்வி கேட்க முற்பட்டு, ''ஜெய்மல் என்ன ஆனார்? பிருத்வி ராஜர் என்ன ஆனார்?'' என்று சற்றே நடுக்கந் தெரிந்த குரலிலும் வினவினார்.

''ஜெய்மல் இறந்து மாதம் இரண்டாகிறது,'' என்று பதில் சொன்னான் சிலாதித்தன்.

''எப்படி இறந்தார்?'' என்று மீண்டும் ஒரு கேள்வியை வீசினார் கரம்சந்த்.

''தோடாராவ், சூரதானனைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறீர்களா?''

''அவரைப்பற்றி யார் கேள்விப்படாமலிருக்க முடியும்? ராஜஸ்தானின் மாபெரும் வீரர். இருப்பினும் பட்டாணியரால் நாட்டிலிருந்து விரட்டப்பட்டவர்.''

''அவருக்கு ஒரு மகளிருக்கிறாள்.''



''தெரியுமே! தாராபாய். சதா வில்லும் கையுமாகப் போருக்குச் செல்பவள்.''

''அவளைப் பலவந்தப்படுத்த முயன்றார் இளவரசர் ஜெய்மல்.''

''நல்ல ஜெய்மல்! மறைவிடத்திலிருந்து அண்ணன் மீது அம்பு தொடுத்து அவர் கண்ணை அழிக்கிறான். அடுத்தப்படி ராஜபுத்ர கன்னிகையைக் கற்பழிக்க முயலுகிறான்! சே சே! இவனும் ஒரு ராஜபுத்ரனா!'' என்று கரம்சந்த் அலுத்துக்கொண்டார்.

இப்படி அவர் அலுத்துக்கொண்டதிலிருந்து ஸங்கன் ஒற்றைக் கண்ணை இழந்துவிட்டதன் காரணத்தை அறிந்து கொண்ட சிலாதித்தன், ''மறைவிடத்திலிருந்து அம்பெய்து அண்ணன் விழியை அழித்ததும் அவர்தானா? அப்படியா னால் அவருக்குக் கிடைத்த தண்டனை நியாயந்தான்'' என்று கூறினான்.

''அப்படி என்ன தண்டனை கிடைத்தது அவருக்கு?'' என்று வினவினார் கரம்சந்த், வெறுப்பு மண்டிய குரலில்.

''தாராபாயின் தந்தை, ஜெய்மல்லைக் கொன்று விட்டார்.''

''என்ன, நாடிழந்து பரதேசியாயிருக்கும் சூரதானன் மேவார் இளவரசரைக் கொன்றுவிட்டாரா? அதற்கு ராணா ரேமல்லர் அவரை என்ன செய்தார்?''

இதற்கு சிலாதித்தன் அளித்த பதில் கரம்சந்த், ஸங்கன் இருவரையுமே தூக்கிவாரிப் போட்டது. ''அந்தச் செய்கைக்கு மன்னர் தோடாராவைப் பாராட்டினார்'' என்றான் மிகவும் அமைதியான குரலில் சிலாதித்தன்

இந்தப் பதிலைக் கேட்டதும் முதலில் அதிர்ச்சியடைந்த ஸங்கன் சீக்கிரமே, உண்மையை உணர்ந்து ஆமோதிப்பது போல் தலையை ஆட்டினாலும் கரம்சந்த் மட்டும் ஏதும் புரியாமல், ''விந்தையாயிருக்கிறது. சிலாதித்தரே! சொந்த மைந்தனைக் கொன்றவனை மன்னர் பாராட்டினாரா?'' என்று வினவினார், குரலில் வியப்பு ஒலிக்க.

''ஆம், பாராட்டினார். ராணா ரேமல்லர் தம் மக்களுக்கு மட்டுமல்ல, தம் ஆட்சிக்குள்ளடங்கிய பிறர் மக்களுக்கும் தந்தை என்பதை நீங்கள் மறக்கக்கூடாது. ஜெய்மல் கொல்லப்பட்ட செய்தியைக் கேட்டதும் காரணத்தை மிகவும் நிதானமாக விசாரித்த மன்னர், 'பெண்ணைக் கற்பழிக்க முயன்று தந்தையின் இதயத்தில் ஆறாப் புண்ணை விளைவிக்க முயலுபவன் அடைய வேண்டிய தண்டனை இதுதான். அங்கு அவனுக்கு அந்தத் தண்டனை கிடைத்திராவிட்டால் இங்கு நான் அளித்திருப்பேன்' என்று கூறி, குடும்பத்தில் ஏதுமே நடக்காததுபோல் ராஜரீகத்தைக் கவனித்தார்!'' என்று விவரித்த சிலாதித்தன், ''கரம்சந்த், மேவார் அரசவம்சத்தின் சரித்திரம் எழுதப்படும் போது, நமது கவிஞர்கள் கவிதைகளைப் புனையும்போது, ராணா ரேமல்லரின் பெயரைப் பற்றி அமுதமழை பொழியட்டும். ரேமல்லர் வாழ்க்கை மன்னர் குல நேர்மைக்கு அழியாச் சான்றாக விளங்கும்'' என்றுகூறி, மேவார் மன்னர் குலத்தையே வணங்குபவன் போல், மேவார் இருந்த திக்கை நோக்கித் தலை தாழ்த்தினான்.

இந்தச் செய்தியின் விளைவாகச் சிறிது நேரம் அந்த அறையில் மவுனமே சூழ்ந்தது. உணர்ச்சிகள் எல்லை மீறியதால் கரம்சந்த், சிலாதித்தன், ஸங்கன் மூவருமே ஏதும் பேச சக்தியை இழந்து நின்றனர். கடைசியாக ஸங்கனே



பேச்சைத் தொடங்கி, ''என் சகோதரன் பிருத்விராஜ் அந்தச் சந்தர்ப்பத்தில் எங்கிருந்தான்?'' என்று கேட்டான்.

இந்தக் கேள்வி காதில் விழுந்ததுமே சிலாதித்தன் கண்கள் திடீரெனப் பெருமைக்கறிகுறியாகப் பளிச்சிட்டன. ''ஒரு மகாவீரனின் சரித்திரத்தைப் பற்றிக் கேட்கிறீர்கள் இளவரசே! ஆனால், அது அத்தனை எளிதில் விவரிக்கக் கூடியதல்ல'' என்று சிலாதித்தன் குரலிலும் பெருமிதம் மண்டிக் கிடந்தது.

''சுருக்கமாகச் சொல்'' என்றான் ஸங்கன்.

சிலாதித்தன் கண்கள் கனவுலகத்தில் சஞ்சரித்தன. சுருக்கமாகத்தான் அவன் பிருத்விராஜன் வரலாற்றைச் சொன்னான். அந்தச் சுருக்கத்திலும் மண்டிக்கிடந்தது ஒரு வீர ராஜபுத்ரன் சாகஸ சரித்திரம். அதைச் சொல்ல முற்பட்ட சிலாதித்தன் குரலில் இனிமை தவழ்ந்தது. ''பிருத்விராஜா வரலாறு சொல்ல ஏற்பட்டவன் நானல்ல. சரித்திர எழுத்தோவியர்கள் அதைச் சொல்ல வேண்டும். பாமாலைகளைச் சூடிய பெரிய வீரனின் கதை அது. புலிமலைக்கோயில் சம்பவம் உங்களுக்கு நினைவிருக்கும். அந்தச் சம்பவத்திற்குப் பிறகு ராணா ரேமல்லர் மிகவும் வெகுண்டார். மேவார் அரியணையில் அமரத் தேர்ந்தெடுக்கப்பட்ட தங்களை வெட்டத் துணிந்ததற்காக, நீதியோ நேர்மையோ தவறாத மன்னர் ரேமல்வர், வீரரான பிருத்விராஜரை நாடு கடத்தினார். ஐந்தே புரவி வீரர் தொடர்ந்து வர, தம் வாள் பலத்தை மட்டுமே நம்பி சித்தூரை விட்டுப் புறப்பட்ட பிருத்விராஜர், மேவாரின் விரோதிகளைப் பல இடங்களில் அடியோடு அழித்து வெற்றி வாகை சூடினார். சதா மேவாரின் மேற்கு அரணான நாதோல் கோட்டையைக் குறையாடி வந்த ஹாராவளி மலைவாசிகளுடன் போரிட்டு

அவர்களை ஒடுக்கினார். மீனவம்சத்தைச் சேர்ந்தவர்களை முறியடித்தார். மாத்ரைசா ராஜபுத்ரர்களை அடக்கி, கோத்வாரத்தில் அமைதியை நிலைநாட்டினார். இப்படி எத்தனை எத்தனையோ வீரச் செயல்களை ராஜபுதனம் கண்டது, அதிசயித்தது'' என்று சொல்லிக்கொண்டே போன சிலாதித்தன், உணர்ச்சிப் பெருக்கால் சிறிது நேரம் பேச்சை நிறுத்தினான்.

ஸங்கனும் உணர்ச்சி வசப்பட்டிருந்தாலும் மௌனம் சாதிக்காமல், ''இத்தகைய மகாவீரன்தான் மேவார் அரியணையில் வீற்றிருக்கத் தகுந்தவன்'' என்று குரலிலும் உள்ளத்தின் உணர்ச்சி பூரணமாகப் பிரதிபலிக்கக் கூறினான்.

ஸங்கனின் வார்த்தைகளைக் கேட்ட சிலாதித்தன், உணர்ச்சி கரைபுரண்டு ஓடியதால் துக்கம் தொண்டையை அடைக்கக் கூறினான், ''அந்தப் பாக்கியம் மேவாருக்கு இல்லை'' என்று.

''ஏன்?'' ஸங்கன் கேள்வியில் சந்தேகம் ஒலித்தது.

''கரம் சந்த்தின் பெண்ணை பிருத்விராஜருக்கு மணமுடிக்க நான் அவர் படத்தை அனுப்பினேன்.''

''ஆம்.''

''அது சாத்தியமில்லையென்று பதில் வந்தது.''

''ஆம்.''

''ஆகவே, தோடாராவ் மகள் தாராபாயை பிருத்விராஜர் மணந்தார்.''

''சரியான திருமணந்தான். இருவரும் வீர உணர்ச்சியுள்ளவர்கள்.''

''அதுமட்டுமல்ல, இருவரும் ஆயுதபாணிகளாக வேட்டைக்கும் போர் முனைக்கும் போய்க் கொண்டிருந்தார்கள்.''



''ராஜபுத்ரிகள் வாளும் வில்லும் அம்பும் கொண்டு போரிடுவது புதிதல்ல.''

''உண்மைதான், இளவரசே. இருப்பினும் தாரா பாய்க்கும் பிருத்விராஜருக்கும் சதா சண்டை இருந்து கொண்டிருந்தது. சில வேளைகளில் மனைவியைப் புறக்கணிக்கவும் கொடுமையாக நடத்தவும் முற்பட்டார் பிருத்விராஜர். அதன் விளைவு-'' மேலே பேச முடியாமல் திணறினான் சிலாதித்தன்.

''விளைவு என்ன சிலாதித்தா? சொல்'' என்று கேட்டான் ஸங்கன், கவலை பாய்ந்தோட.

''மரணம்.''

''என்ன! பிருத்விராஜனும் மாண்டுவிட்டானா?''

''ஆம்; தங்கை கொடுமைப்படுவதைக் கண்டு அவர் மைத்துனர் பிருத்விராஜருக்கு விஷம் வைத்தார்.''

இதைக் கேட்ட ஸங்கன் கால்கள் நடுங்கின. மெள்ள இருமுறை தள்ளாடி நடந்து, சற்று தூரத்திலிருந்த மஞ்சத்திற்குச் சென்று அதிலமர்ந்து, முகத்தை இரு கைகளிலும் புதைத்துக்கொண்டான். நீண்ட நேரம் அவன் பேசவில்லை! மற்ற இருவருங்கூட அவனிருந்த நிலையைக் கண்டு பேச்சிழந்து நின்றனர். சில நிமிடங்களுக்குப் பிறகு பேச்சைத் தொடங்கிய ஸங்கன், ''சிலாதித்தா, இது உண்மையா? எங்கள் குலச்செல்வங்கள் இரண்டும் மறைந்து விட்டனவா?'' என்று குரல் தழுதழுக்கக் கேட்டான்.

''ஆம், இளவரசே! மேவார் மகுடம் தங்களுக்காகக் காத்திருக்கிறது'' என்றான் சிலாதித்தன், மகிழ்ச்சி சிறிது மற்ற குரலில்.

"பிருத்விராஜன் ஆளட்டுமென்றுதானே நான் சாருணீதேவியின் ஆலயத்திலிருந்து புறப்பட்டு, மேவார் எல்லையைக் கடந்து இங்கு வந்தேன்! விதி இப்படியா திரும்ப வேண்டும்!'' என்றான், சோகம் பரிபூரணமாகக் குரலில் பிரதிபலிக்க.

"பிருத்விராஜருக்குச் சொர்ணாதேவியைக் கொடுக்க கரம்சந்த் ஒப்புக்கொண்டிருந்தால் அவர் தாராபாயை மணந்திருக்க மாட்டார், மரணமும் அடைந்திருக்க மாட்டார்.''

"உண்மைதான்'' என்று ஸங்கனும் ஒப்புக் கொண்டான்.

இதைக் கேட்டதும் கரம்சந்த்தின் சொற்கள் உக்கிரத்துடன் எழுந்தன. "படம் வருமுன்பு சொர்ணாதேவி தன் இதயத்தை இவருக்குப் பறிகொடுத்துவிட்டாள்'' என்று உக்கிரத்தோடு உணர்த்தினார் கரம்சந்த்.

"இளவரசர் கொடுத்து வைத்தவர். இதயத்துக்குத் தகுந்த ராணி, இணையற்ற மேவாரின் மகுடம்-இரண்டுமே கிடைத்திருக்கின்றன'' என்று சிலாதித்தன் கூறினான். அவன் பேச்சில் மகிழ்ச்சி இல்லை. வெறுப்பு இருந்தது. அதைக் கவனிக்க ஸங்கனோ, கரம்சந்த்தோ தவறவில்லை.

அத்துடன் அந்தச் சம்பாஷணையை முடிக்க இஷ்டப் பட்ட ஸங்கன், மஞ்சத்திலிருந்து திடீரென எழுந்தான். "சிலாதித்தா! மேவாருக்கு உடனே புறப்பட புரவிகளையும் ...ன் வீரர்களையும் தயார்செய். இன்னும் கால் ஜாமத்தில் நாம் புறப்படுகிறோம்'' என்று கூறிய ஸங்கன், மேற்கொண்டு அங்கு நிற்காமல், அந்த அறையை விட்டு வெளிப்பட்டு, ஆடவர்கள் யாரும் கடக்க முடியாத



சொர்ணாதேவியின் அந்தப்புரக் கட்டுக் காவலர்களைச் சிறிதும் லட்சியம் செய்யாமல் கடந்து, அவளிருக்கும் அறைக்குள் திடும் பிரவேசமாக நுழைந்தான். அப்பொழுது தான் சொர்ணாதேவி மாற்றுடை அணிந்து, அறையிலிருந்த நிலைக்கண்ணாடிக்கெதிரில் தன்னை அழகு பார்த்துக் கொண்டிருந்தாள்.

## அத்தியாயம்-10

# மூன்று கடமைகள்

அந்தப்புர அறையின் நிலைக்கண்ணாடி முன்பாக அழகு பார்த்துக் கொண்டு சொர்ண பிம்பம் போல் காட்சியளித்த சொர்ணாதேவியைப் பின்புறமாக அணுகிய ஸங்கன், சற்று எட்டவே நின்று, அவள் இணையற்ற எழிலில் இதயத்தைப் பறிகொடுத்து நீண்ட நேரம் சிந்தனையில் நின்றான். அந்த மங்கையின் சிந்தையை அள்ளும் கவர்ச்சி வளைவுகள் திடீரென வீசப்பட்ட மாய வலைபோல ஸங்கன் புத்தியைக் கனவேகத்தில் கவர்ந்து கொண்டதால், மேவாரிலிருந்த தந்தையின் அபாய நிலையைப் பற்றிய எண்ணமும் ஓரளவு அந்த மாய வலைக்குள் மறையவே செய்தது. கண்ணுக்கும் கருத்துக்கும் தெரிந்ததெல்லாம், எதிரே நின்ற அந்த மோகன உருவந்தான்.

அவள் அணிந்திருந்த மாற்றுடை சாதாரண வெண் பட்டுப் புடவைதான். மஞ்சளாற்றில் நீராடிய சமயத்தில் நனைந்துவிட்ட கூந்தலின் அடிப்புறங்களை உலர்த்தக்

கூந்தலுக்கு நடுவில் மாத்திரம் சிறு பின்னல் போட்டு அடியில் அதை முடிந்திருந்ததால், கூந்தல் ஓரளவு விரிந்து கிடந்தது. விரிந்த பகுதியில் செருகப்பட்ட செண்பகப் புஷ்பங்கள் இரண்டு, கூந்தலின் கருமைக்கிடையே மஞ்சள் இதழ்களை விரித்துக்கொண்டு படுத்திருந்தன. அந்த மஞ்சள் புஷ்பங்களைக் கவனித்த ஸங்கனின் ஒற்றைக் கண் சிறிது சிந்தனையை மலரச் செய்தது. நாஹ்ராமக்ரோவின் மாதாவின் சிலையும், தபஸ்வினியின் உருவமும் சிந்தனையில் வலம் வந்தன. 'ஸங்கா! மஞ்சள்தான் உனக்கு மங்களத்தை விளைவிக்கும், மறவாதே அதை' என்று, அந்தச் சமயத்தில்கூட தபஸ்வினியின் இதழ்கள், சிந்தனையில் எழுந்த கருத்துகளை ஆமோதிப்பன போல், அந்தச் செண்பக மலர்கள் இரண்டும் அறை விளக்குகளில் சற்று அதிகமாகவே பிரதிபலித்தன.

கருத்த கூந்தலுக்கிடையே அந்த மஞ்சள் மலர்கள் விளையாடிய அழகிலும், வெண்பட்டின் மேல் விரிந்த கூந்தலின் கருமைக்குள்ளே புதைந்து கிடந்த கழுத்தின் பக்கப்பகுதியில் வெண்மையை அதிகமாக எடுத்துக் காட்டிய இன்பத்திலும் சற்று நேரம் நின்ற ஸங்கன், சற்று தைரியமாகவே சொர்ணாதேவியை நெருங்கி, அவள் தோள்மேல் தன் கையை வைத்தான்.

அந்த ஸ்பரிசத்தில் சொர்ணாதேவியின் உடல் குலுங்குமென்றோ, அவள் திடீரென அச்சப்பட்டுத் திரும்புவாளென்றோ ஸங்கன் நினைத்திருந்தால் அவன் ஏமாந்தே போனான். சொர்ணாதேவி நின்ற நிலையிலிருந்து சிறிதும் அசையவுமில்லை, பின்புறம் வந்து தன் தோள்மேல் கை வைத்த ஸங்கனைத் திரும்பிப் பார்க்கவுமில்லை. அவன் வாயிற்படியைத் தாண்டி அறைக்குள் காலெடுத்து



வைத்தபோதே அவன் வருகையைக் கண்ணாடியில் பார்த்துவிட்ட சொர்ணாதேவி, அவன் ஒவ்வொர் அசைவையும் கவனித்துக்கொண்டே இருந்தாளாதலால், அவன் தோள்மேல் கையை வைத்தபோது சற்று புன்முறுவல் செய்து கொண்டாளே தவிர, தலையைத் திருப்பவில்லை. அவன் உள்ளே நுழைந்தது, சில விநாடிகள் நின்றது, தன்னை அந்த ஒற்றைக் கண்ணால் ஆராய்ந்தது, அத்தனையும் பார்த்துப் பார்த்து வெட்கத்தையும் இன்பத்தையும் ஒரேயடியாக அடைந்திருந்த சொர்ணாதேவி, தன் மனத்தை நன்றாகக் கட்டுப் படுத்திக்கொண்டு உணர்ச்சிகளைப் பெரிதும் அடக்கி வைத்திருந்தாளாகையால் ஸங்கனை அவள் திரும்பியும் பார்க்கவில்லை.

அவள் உறுதியைக் கண்டுபிரமித்துப் போன ஸங்கன், 'அப்பா! எத்தனை கடின இதயம்' என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டு அவள் தோளைப் பிடித்துத் தனக்காகத் திருப்பி, இடையில் தனது இரு கைகளையும் கொடுத்து அவளை ஒருமுறை உலுக்கினான். சொர்ணாதேவியின் கண்கள் ஒரு விநாடி அவன் கண்ணுடன் உறவாடின. பிறகு, பவள இதழ்கள் திறந்து, ''எதற்காக இப்படி உலுக்குகிறீர்கள்?'' என்று கேட்டாள்.

''சில மரங்களை உலுக்கினால்தான் பழம் கிடைக்கும்'' என்றான் ஸங்கன்.

''நானென்ன நெல்லிமரமா?''

''ஆம்.''

''அப்படியானால் நெல்லிக்காய் மாதிரி புளிக்கிறேனோ உங்களுக்கு?''

''அதல்ல உவமை, சொர்ணா.''

"வேறெது?"

"நெல்லிக்காயில் தங்கமிருக்கிறதென்று ஆயுர்வேதம் சொல்லுகிறது."

"ஒகோ!"

"அதுவும் மஞ்சள் நிறம்."

"ஆம்."

"மஞ்சள் நிறந்தான் எனக்கு அதிர்ஷ்டம் என்று நாஹ்ராமக்ரோ தபஸ்வினி கூறியிருக்கிறாள். வந்ததும் மஞ்சள் நிற செண்பக மலர்கள் உன் கூந்தலில் விளையாடு வதைக் கண்டேன். பிறகு, பழுத்த நெல்லியின் பத்தரை மாற்றுப் பசும்பொன் நிறத்தை உன் மேனியின் திறந்த இடங்களில் கண்டேன்."

"நீங்கள் கவிஞரா?" என்று கேட்டாள் சொர்ணா தேவி, பொய்க்கோபத்தை முகத்தில் காட்டி.

"ஏன் கேட்கிறாய்?" என்று வினவினான் லங்கன்.

"கவிகளைவிட நன்றாக வர்ணிக்கிறீர்களே!" என்று சொல்லிச் சிரித்தாள் சொர்ணா.

"கவிகள் வர்ணிப்பது எதனால் தெரியுமா?"

"சொல்லுங்கள்."

"பரதேவதையின் அருளால்."

"தெரிகிறது, தெரிகிறது."

"பரதேவதை அருகிலிருந்தால் கவியின் சக்தி தானே வருகிறது, என்னைப் போன்ற சாதாரண வீரனுக்கும்" என்று சொல்லிய லங்கன், அவள் இடையின் பக்கங்களை மட்டும் தொட்டு நின்ற தன் கரங்களை நீட்டி, அவள் உடலை வளைத்துத் தன்னை நோக்கி இழுத்தான். தங்கு



தடையில்லாமல் அந்தச் சிறைக்குள் அவன் நுழைந்தான். இருவரும் சில விநாடிகள் இந்த உலகத்தைவிட்டு எங்கோ பறந்து கொண்டிருந்தார்கள்.

நினைவு மறந்து, நிலை மறந்து, சொர்க்கலோகத்தில் சஞ்சரித்துக்கொண்டிருந்த அந்த இருவரில் முதல் முதலாக லேசாகச் சுரணை வரப்பெற்ற லங்கன், அவள் அழகிய சரீரத்திலிருந்து தனது கைகளை எடுத்து, அவளையும் விடுவித்தான். அந்த இன்ப மாயையிலிருந்து விடுபட்டதும், தனக்கு மேவார் தலைநகரத்தில் காத்திருக்கும் துன்பநிலை எண்ணத்துக்கு வரவே, சற்று துக்கங் கலந்த பெருமூச்சு விட்ட லங்கன் சொர்ணாதேவியை நோக்கி, "சொர்ணா! கடமை என்னை அழைக்கிறது. ஆகையால், உன்னிடம் விடைபெற வந்தேன்! வந்த இடத்தில் உன்னைக் கண்டதும் கடமையை மட்டுமல்ல, உலகத்தையே மறந்தேன்" என்று ஏதோ மேலும் சொல்லப் போய், சிறிது நிதானித்தான்.

சொர்ணா உடனே பதில் சொல்லவில்லை. அந்த ஆடவன் வலிய அணைப்பிலிருந்து விலகிய பின்பும் கௌவிக்கொண்டிருந்த வெட்கத்திலிருந்து விடுபடாத வளாய் நிலத்தையே நோக்கிக் கொண்டிருந்தாள். பிறகு சமாளித்துக்கொண்டு, "கடமையா?" என்று ஏதோ கேட்க வேண்டுமென்பதற்காக விசாரித்தாள்.

"ஆம், சொர்ணா! கடமைதான்" என்றான் லங்கன்.

நிலத்திலிருந்து கண்களை உயர்த்தாமலே கேட்டாள் சொர்ணா, "அதற்காகப் பிரிய வேண்டுமா?" என்று.

"ஆம்; பிரியத்தான் வேண்டும்."

"இங்கு உங்களுக்குக் கடமை ஏதுமில்லையா?" என்று கேட்டாள் சொர்ணாதேவி, சிறிது சங்கடம் தொனித்த குரலில்.

ஸங்கன் அவள் கேள்வியின் பொருளைப் புரிந்து கொண்டான். ஆகவே கூறினான்: ''இருக்கிறது, சொர்ணா. ஆனால் ஒரு மனிதனைப் பல கடமைகள் அழைக்கும் போது, எது முதல் கடமை, எது இரண்டாவது கடமை, எது மூன்றாவது கடமை என்பதை நிர்ணயிக்க வேண்டும். நிர்ணயித்து அதற்கேற்ப முறைப்படி நடந்து கொள்ள வேண்டும்.''

சொர்ணா தன் அழகிய விழிகளை அவனை நோக்கி உயர்த்தினாள். ''அப்படி மூன்று கடமைகள் இப்பொழுது முளைத்திருக்கின்றனவா?'' என்று கேட்டாள் கவலை யுடன்.

''பிறக்கும்போதே மனிதன் கடமைகளுடன் பிறக்கிறான். ஆனால், அவை வாழ்க்கையின் பலதரப்பட்ட சமயங்களில் மோதுகின்றன.''

''அந்தச் சமயத்தில் இது ஒன்று உங்களுக்கு?''

''ஆம்; பிறந்த நாட்டுப் பணி முதல் கடமை. இரண்டாவது கடமை ஈன்றெடுத்த தந்தை தாய்க்கு. மூன்றாவது கடமை...'' சற்று நிறுத்தினான்.

அவன் சொல்ல முயன்றது அவளுக்குத் தெரிந்தே இருந்தாலும், ''தயங்க வேண்டாம், சொல்லுங்கள்'' என்றாள்.

''கைப்பிடித்த மனைவிக்கு'' என்ற ஸங்கன் மேலும் சொன்னான்: ''சொர்ணா! நாடு என்னை அழைக்கிறது. தந்தை என்னை அழைக்கிறார். இரண்டு கடமைகளை நிறைவேற்ற நான் மேவார் செல்லவேண்டும். அந்தக் கடமைகளை முடித்தபின்பு உன்னைப் பற்றிய கடமையைக் கவனிக்கிறேன்.''



சொர்ணாதேவியின் கூர்விழிகள் வெகு கம்பீரமாக ஸங்கனின் ஒற்றை விழியைச் சந்தித்தன. ''என்னை மூன்றாம் பட்சமாகத்தான் வைத்திருக்கிறீர்கள்!'' என்றாள், சற்றுக் கோபத்தைக் குரலில் காட்டி.

ஸங்கன் அவள் கைகளிரண்டையும் ஆசையுடன் பற்றிக் கொண்டான். அவள் முகத்தைப் பயமோ தயக்கமோ இன்றி ஏறிட்டு நோக்கினான். தந்தை மரணப் படுக்கையிலிருக்கும் செய்தி ஒருபுறம், சகோதரர்கள் மாண்ட செய்தி ஒரு புறம், எதிரே நின்ற காதலியின் பிணக்கு ஒரு புறம்-இப்படி முப்புறமும் வாட்டப்பட்ட சமயத்திலும் நிதானத்தையோ நியாயத்தையோ இழக்காமல் பேசினான் ஸங்கன். ''ஆம் சொர்ணா! நீ மூன்றாம் பட்சந்தான். நாட்டைவிட, நாட்டு மக்களை விட, நான் எதையும் முதன்மையாக மதிக்கவில்லை. என் தந்தை, தாய் இருவரையுங்கூட அதிகமாக மதிக்கவில்லை. அவர்கள் நாட்டுக்கு அடுத்தபடிதான். ஆகவே, உன்னை மூன்றாம் பட்சமாகத்தான் மதிக்க முடியும். இந்த விஷயத்தில் நான் பொய் சொல்ல இஷ்டப்படவில்லை. காதல் விஷயத்தில் பொய் சொல்ல சாஸ்திரம் அனுமதிக்கிறது. அந்த அனுமதியைக்கூட நான் பயன் படுத்திக் கொள்ள இஷ்டப் படவில்லை. ஆனால், ஒன்று கூறுவேன்...''

''என்ன அது?''

''நாலாம் பட்சமாக நான் கருதுவது ஒன்றிருக்கிறது.''

''எது?''

''என் உயிர்'' என்று ஸங்கன் மிக மெதுவாகவும் அலட்சியமாகவும் அறிவித்தான்.

அவன் சொல்லியதன் பொருளைப் புரிந்துகொண்ட சொர்ணாதேவியின் உடல் பூரித்தது. உள்ளம் உவகை

கொண்டது. உயிருக்கும் மேலாகத் தன்னை நேசிப்பதையே மேவார் அரசகுமாரன் குறிப்பிடுகிறானென்பதை அறிந்து கொண்ட சொர்ணாதேவி, சங்கடத்தால் நின்ற இடத்திலேயே சிறிது அசைந்தாள். அதுவரைக்கும் பற்றி நின்ற அவள் கைகளைவிட்டுச் சற்று விலகிய ஸங்கன், துயரம் தோய்ந்த குரலில் தனக்குக் கிடைத்த செய்தியை விவரிக்கத் தொடங்கி, "சொர்ணா! மேவாரிலிருந்து சிலாதித்தன் வந்திருக்கிறான். துயரம் தரும் செய்தியையும் கொண்டு வந்திருக்கிறான்" என்று கூறினான்.

சிலாதித்தன் பெயரைக் கேட்டதுமே ஒருமுறை நடுங்கினாள் சொர்ணாதேவி. பிருத்விராஜன் படத்தை வரைந்து அனுப்பித் தன்னைப் பெண் கேட்டது அவன் தானென்பதை அறிந்திருந்ததால் மட்டுமல்ல, ஏதோ விவரிக்க இயலாத பல காரணங்களால் சிலாதித்தன் பெயரை வெறுத்தே வந்தாள். ஆகவே, அவன் வந்திருப்பதைக் கேட்டதும், "என்ன! சிலாதித்தனா வந்திருக்கிறான்? மேவார் தளபதி வந்திருப்பதாகவல்லவா சொன்னார்கள்?" என்று கூறினாள், குரலும் லேசாக நடுங்க.

"அவன்தான் இப்பொழுது மேவார் நாட்டின் தளபதி."

"தங்கள் தந்தை இவரையா தளபதியாக நியமித்தார்?"

"தந்தை நியமிக்கவில்லையாம். என் சகோதரன் பிருத்வி இளவரசனாயிருந்தபோது நியமித்தானாம்."

"ஓகோ!"

"ஆமாம் சொர்ணா. இவனைத் தளபதியாக நியமித்த பிருத்வியும் இறந்துவிட்டான். என் தம்பி ஜெய்மல்லும் இறந்துவிட்டான்."



"யார்? உங்கள் கண்ணில் அம்பெய்ததவரா?"

"ஆம், சொர்ணா! அம்பெய்ததால் என்னா? என் தம்பி தானே அவன்?"

"தம்பியா...?" சொர்ணாவின் கேள்வியில் ஏளன மிருந்தது.

அந்த ஏளனத்தைக் கவனித்த ஸங்கன், "சொர்ணா! இத்தகைய விருப்பு வெறுப்புகளை நீ விட்டுவிட வேண்டும். என் விரல் என் கண்ணைக் குத்திவிட்டால் அதை நான் வெட்டிவிடுவேனா?" என்றான்.

"தங்கள் கண்ணை அழித்தவரை நான் பாராட்ட வேண்டுமா?"

"பாராட்டவும் வேண்டாம். பழிக்கவும் வேண்டாம். நாளை நீ மேவார் ராணியாக என் பக்கத்தில் அமரப் போகிறவள். யாரையும் எதையும் மன்னிக்கும் மனப் பக்குவம் வேண்டும் உனக்கு."

இதைக் கேட்டதும் உண்மையை ஓரளவு ஊகித்துக் கொண்ட சொர்ணாதேவி, "அப்படியானால் உங்கள் தந்தை?" என்று கேட்டு மென்று விழுங்கினாள்.

"மரணப் படுக்கையிலிருக்கிறார். ஆகவே, என்னை அழைத்துவரச் சிலாதித்தனை அனுப்பியிருக்கிறார்" என்று விளக்கிய ஸங்கனை நோக்கிய சொர்ணாதேவி, "சரி, கிளம்புவோம்" என்றாள்.

"கிளம்புவோமா?" ஸங்கன் ஆச்சரியத்துடன் கேட்டான்.

"ஆம், நீங்கள் சென்றபின் எனக்கு இங்கென்ன வேலை?" என்று சொர்ணாதேவி பதிலுக்கு வினவினாள்.

''இப்பொழுது வருவதற்கில்லை.''

''ஏன்?''

''நமக்குத் திருமணமாகவில்லை.''

''கந்தர்வமணம் க்ஷத்திரியர்களுக்கு அனுமதிக்கப் படுகிறது.''

''உண்மைதான், சொர்ணா! ஆனால், அதற்கு வேண்டிய மனப்பக்குவம் தற்சமயம் எனக்கில்லை. தந்தையின் தேகநிலை மனத்தில் கவலையை நிரப்பி யிருக்கிறது. சில நாட்கள் நீ இங்கிரு, சொர்ணா. திருமணத்தை முடித்துக்கொள். பிறகு என் மகிஷியாக மேவார் தலைநகரத்தில் நுழையலாம்'' என்றான் ஸங்கன்.

ஏதும் புரியாமல் விழித்தாள் சொர்ணாதேவி. ''நீங்களில்லாமல் எனக்குத் திருமணமேது?'' என்று கேட்டாள்.

''என் பிரதிநிதியை விட்டுப்போகிறேன்'' என்றான் ஸங்கன்.

''என்னை மணம் புரிய உங்கள் பிரதிநிதியை விட்டுப் போகிறீர்களா?'' வியப்பும் கோபமும் கலந்த குரலில் சீறினாள் சொர்ணாதேவி.

''ஆம், சொர்ணாதேவி! ராஜபுத்ரர்கள் கடமையை நாடிச் செல்லும்போது ராஜபுத்ரர்கள் மணக்கும் முறைப்படி நீயும் மணந்துகொள். இந்த என் வாளுக்கு மாலையிடு'' என்று, தன் வாளை உறையிலிருந்து சர் என்று இழுத்துச் சொர்ணாதேவியிடம் கொடுத்த ஸங்கன், ''இதற்கு மாலையிட்டு இத்துடன் மேவாருக்கு வந்துசேர், சொர்ணாதேவி'' என்று கூறிவிட்டு விடுவிடு என்று அந்த அறையிலிருந்து வெளியேறினான்.



அத்தியாயம்-11

## ரேமல்லர் ஊகம்

ராஜபுத்ரர் குல வழக்கப்படி வாளுக்கு மாலையிடும்படி சொர்ணாதேவிக்குக் கட்டளையிட்டதன்றி வாளையும் உருவிக் கொடுத்துவிட்டுப் பிரமரர்கள் ராஜதானியிலிருந்து சிலாதித்தனுடன் கிளம்பிய ஸங்கன் வழியில் எந்த இடத்திலும் தாமதியாமல் மேவாரின் தலைநகரமான சித்தூரை மூன்று நாட்களுக்குள் அடைந்தான். ஸங்கன் இளைப்பாறக்கூட வழியில் எந்த ஊரிலும் தங்காமல் புரவியில் விரைந்ததையும், பயண மார்க்கத்தில் எந்த வார்த்தையையும் பேசாததையுங்கண்ட சிலாதித்தன் கூட, பிருத்விராஜனை விட ஸங்கன் கடமையில் உறுதியும் நிதானமும் கொண்டவனென்பதை உணர்ந்தாலும், பிருத்விராஜனிடமிருந்த நட்பினாலும், ஸங்கனுக்குக் கிடைக்கப்போகும் மகுடம் தன் நண்பனான பிருத்விக்குக் கிடைத்திருந்தால் தன் நலன் எத்தனை தூரம் மேம் பாடடைந்திருக்கும் என்ற எண்ணத்தினாலும் ஸங்கனின் நிதானத்தையும் உறுதியையுங்கூட ஓரளவு வெறுக்கவே செய்தான். அப்படிப் பல நாளாக வேரூன்றிக் கிடந்த அந்த வெறுப்பை உணராததினாலும், அது பிற்காலத்தில் விளை விக்க இருந்த பெருங்கேட்டை அறியாத காரணத்தாலும், உள்ளத்தில் சிறிதும் கள்ளமின்றிக் கடமையையும், மரணப் படுக்கையிலிருந்த தந்தையையும் மட்டுமே எண்ணிப் பிரமரர் ராஜதானிக்கும் சித்தூருக்கும் இடையேயிருந்த பிரதேசத்தைக் கனவேகத்தில் கடந்து, மூன்றாவது நாள் சித்தூரை ஸங்கன் அடைந்தான்.

சித்தூர் துக்க சாகரத்தில் மூழ்கிக் கிடந்தது. சாதாரண நாட்களில் வாட்களைச் சுழற்றியும் ஈட்டிகளையும் கேடயங்களையும் தாங்கிப் போரிட்டும் ஊரில் அமளி துமளி கிளப்பும் வீரர்களாலும், சதா வீதிகளில் ஏற்படும் புரவிகளின் நடமாட்டங்களாலும் கிளம்பும் வீர ஒலிகளால் சூழப்பட்டிருக்கும் சித்தூர், ராணாவின் தேக நிலை காரணமாக அன்று மௌனமே சாதித்தது. எப்பொழுதும் முக்காடிட்ட அரசர்குல மங்கையர்களாலும் மற்ற அக்கம் பக்க ராஜபுத்ர நாடுகளிலிருந்து வரும் சாதாரண மக்களாலும் நிறைந்திருக்கும் தன்மை வாயந்த சித்தூரின் கடைவீதி கூட ஜனநடமாட்டம் ஏதுமின்றி வெறிச்சென்று களையிழந்து கிடந்தது. வீதிகளில் நடந்த ஜனங்கள் மௌனமாக நடந்தார்கள். காவல் புரியும் வீரர்கள்கூட, தங்கள் புரவிகளை மிக மெதுவாக நடத்தினார்கள். முடிசூட வேண்டிய இளவல் நகருக்குள் நுழையும்போது முழங்க வேண்டிய பெரிய பேரிகைகூட சம்பிரதாயத்தையொட்டி லேசாகச் சப்தித்ததேயொழிய குதூகலத்துடன் பெரிதாகச் சப்திக்கவில்லை. இளவலைக் கண்டதும் 'பராக்' சொல்லவேண்டிய பாராக்காரர்கள் பராக்கை மிக அமைதியுடன் சொன்னார்கள். சம்பிரதாயமாகத் தலையைத் தாழ்த்தினார்கள்.

எல்லோர் முகத்திலும் துக்கம் நிரம்பிக் கிடந்தது. சித்தூர் சோபை இழந்து கிடந்தது. உள்ள நிலையைக் கவனிக்க ஒரு நிமிடம் தன் புரவியை நிறுத்திய ஸங்கன் சிறிது நேரம் சித்தூர் ராஜவீதியை ஒரு முறை ஏறிட்டு நோக்கினான். தூரத்தே தெரிந்த அரண்மனையின் மீதிருந்த சிசோதயர்களின் கொடி, அரண்மனையில் படுத்திருந்த ராணாரேமல்லரின் இதயம் அதிகமாகப் படபடத்துக் கொண்டிருப்பதை வலியுறுத்த இஷ்டப்பட்டதுபோல்,



காற்றில் படபடவென்று அடித்துக் கொண்டது. அதையும் பார்த்துச் சிலாதித்தனையும் பார்த்த ஸங்கன் துக்கத்தால் பெருமூச்சு விட்டான்.

அந்தப் பெருமூச்சைக் கவனித்த சிலாதித்தன் வேண்டுமென்றே குத்தலாகச் சொன்னான், ''துக்கம் சித்தூரை வளைத்துக் கிடக்கிறது. ஆகையால்தான் முடிசூட வரும் இளவலுக்கு வரவேற்பு சரியில்லை'' என்று.

''துக்கம் எதைக் குறிக்கிறது, சிலாதித்தா?'' என்று வினவினான் ஸங்கன்.

''மன்னர் இருக்கும் நிலையைக் குறிக்கிறது'' என்று பதில் சொன்னான் சிலாதித்தன்.

''இல்லை, இல்லை; மன்னர் இருக்கும் நிலையை அல்ல, மன்னர் இருந்த நிலையைக் குறிக்கிறது'' என்று திருத்திச் சொன்னான் ஸங்கன்.

சிலாதித்தன் கண்கள் வியப்புடன் ஸங்கனை நோக்கின. ''நீங்கள் சொல்வது விளங்கவில்லை'' என்றான்.

''எது விளங்கவில்லை?'' என்று கேட்டான் ஸங்கன்.

''மன்னர் மரணப்படுக்கையிலிருக்கிறார்...''

''ஆம்.''

''அதனால் மக்கள் துக்கத்துடன் இருக்கிறார்கள்.''

''அதுதான் தவறு, சிலாதித்தா! ஒருவர் மரணப் படுக்கையிலிருப்பதாலோ, மரணத்தையே அடைந்து விடுவதாலோ மக்கள் துக்கப்படுவதில்லை. அப்படித் துக்கப்படுவதானால், எத்தனையோ மன்னர்கள் இறந்திருக்கிறார்கள்; அவர்கள் இறந்தபோதோ நோய்வாய்ப்பட்ட போதோ மக்கள் துக்கப்பட்டதாக வரலாறு கூறவில்லை. சிலருக்குத்தான் அந்தப் பாக்கியம் கிடைக்கிறது.''

"அப்படியானால்..."

"இன்று மேவார் துக்கத்தில் ஆழ்ந்திருப்பதற்கு மன்னர் ஏற்கெனவே இருந்த நிலைதான் காரணம். நீதியுடன் அரசாண்டார். மக்களைத் தம் குழந்தைகள் போல நினைத்தார். தம் குடும்ப சுகதுக்கங்களையும் மக்கள் நலனுக்கு அடுத்தபடியாகவே நினைத்தார். அப்படியிருந்த மன்னர் போய்விடப் போகிறாரே என்று தான் மக்கள் வருந்துகிறார்கள். ஆகவே மன்னர்கள் மரிக்குந்தறுவாயில் மக்கள் துக்கப்படுகிறார்களென்றால், மன்னர்களின் அன்றைய நிலையல்ல காரணம்; மன்னர்கள் வாழ்க்கை வளமாக இருந்த காலத்தில் எந்த நிலையில் இருந்தார்கள் என்பதுதான் காரணம்" என்று விளக்கிய லங்கன், மேற்கொண்டு சிலாதித்தன் பதிலுக்கோ கருத்துக்கோ காத்திராமல், நேராக அரண்மனையை நோக்கிப் புரவியை நடத்தினான். அரண்மனையை அடைந்ததும் புரவியிலிருந்து குதித்த லங்கன், சேணத்தைப் புரவிமீதே எறிந்துவிட்டு, அக்கம் பக்கத்திலிருந்த வீரர்கள் ஈட்டிகளைத் தாழ்த்தி மரியாதை செய்ததைக்கூட கவனியாமல், நேராகத் தந்தையிருக்கும் அறைக்குள் சென்றான்.

சித்தூரைச் சூழ்ந்து கிடந்த துக்கத்துக்குப் பன்மடங்கு அதிகமான துக்க நிலையை அந்த அறையிலே கண்ட லங்கன், அரசன் பஞ்சணையை உடனே அணுகாமல் திறந்த பெருங்கதவுக்கருகில் சற்று நேரம் நின்று, அறையிலிருந்த நிலையைக் கவனித்தான். அரசன் பஞ்சணையின் இருபுறத்திலும் அரசனுடைய மனைவிகள் இருவரும் உட்கார்ந்திருந்தார்கள். அரசன் விட்டுக்கொண்டிருந்த இறுதி மூச்சுக்கு இடைஞ்சல் என்ற காரணத்தால் அந்த அறையில் சாதாரணமாகக் கமழும் சாம்பிராணிப் புகையின்



அடையாளங்கூட எங்கும் காணோம். அரசன் மஞ்சத்தை விட்டு எட்ட இருந்த இரண்டு மூன்று பெரும் விளக்குகளின் சுடர்கள் கூட அரசனின் நிலையைக் கண்டு செயலிழந்தவைபோல் செங்குத்தாக நின்றன. பஞ்சணைக்குப் பக்கத்தில் சிறிது தள்ளி உட்கார்ந்திருந்த அரண்மனைப் பண்டிதர் அரசனுடைய தலைக்கு ஏதோ ஒத்தடம் கொடுத்துக்கொண்டிருந்தார். அறையின் ஒரு மூலையில் தோழியர் சிலர், ராணிகள் இடக்கூடிய ஆணையைச் சிரமேற்கொள்ளத் தயாராயிருந்தனர்.

இவற்றையெல்லாம் ஒரு முறை ஆராய்ந்துவிட்ட லங்கன் சிங்க நடை நடந்து, அரசனின் பஞ்சணையை அடைந்து, தன் தாய் உட்கார்ந்திருந்த இடத்துக்கு அருகில் உட்கார்ந்து கொண்டான். தாய்க்கு ஆறுதலாக அவள் கையையும் சிறிது தடவிக்கொடுத்தான். தாயின் கண்களில் நீர் ஆறாகச் சுரந்தது. ஆனால் தந்தையின் கண்களில் ஓர் ஆறுதலும் இதழ்களில் புன்முறுவலும் படர்ந்தன. மரணசமயத்திலும் தந்தை காட்டிய உறுதியால் லங்கன் எந்த வியப்பையும் அடையவில்லை. மேவார் ராஜ குடும்பத்தின் ரத்தத்தில் அந்தத் துணிவும் உறுதியும் ஊறியிருப்பதை லங்கன் அறிந்தேயிருந்தான். ஆகவே தாயின் கரத்தை விட்டுத் தந்தையின் கரத்தை எடுத்துத் தன் இருகைகளிலும் சிறைப்படுத்திக் கொண்டான்.

சிறைப்பட்ட அந்தக் கரம் பெரும் வீரன் ஒருவனின் கதையைச் சொல்லியது. ஆயுள் பூராவும் வாளைப் பிடித்ததால் தழும்பேறியிருந்த அந்தக்கரத்தின் முரட்டுத் தனத்தை அனுபவித்த லங்கன் முகத்தில் பெருமைக்குறி தாண்டவமாடியது. தந்தை மரணப்படுக்கையிலிருக்கிறார் என்பதை அந்தச் சில விநாடிகள் லங்கன் மறந்தான். தன்

தந்தை மகாவீரர் என்பதில் அவன் உள்ளமெங்கும் பெருமை குடிகொண்டது. ஸங்கன் முகத்தில் எழுந்த பெருமைக் குறியை ராணாரேமல்லரும் கவனிக்கத் தவறவில்லை. மகன் தன்னை முழுவதும் உணர்ந்து கொண்டிருக்கிறானென்பதால் ஏற்பட்ட உவகை உள்ளத்தை ஆக்கிரமித்துக் கொள்ளவே, ராணாவின் மூச்சுக்கூட சற்று நிதானப்பட்டு வரத்தொடங்கியது. இருப்பினும், மிகுந்த சிரமப்பட்டு வைத்தியரை அப்புறம் செல்ல உத்தரவிட்டு, "சமயத்தில் வந்தாய், ஸங்கா" என்று வார்த்தைகளை மெல்ல உதிரவிட்டு, சாந்தி நிலவிய மூச்சொன்றையும் வெளியிட்டார்.

"தெரிந்திருந்தால் முன்பே வந்திருப்பேன்" என்றான் ஸங்கன்.

"அவசியமில்லை. வந்த சமயம் சரி. சாருணி தேவியின் ஆணை இப்படித்தான்" என்றார் ரேமல்லர், அத்தனை சிரமத்திலும் புன்முறுவல் செய்து.

"என்ன ஆணை, தந்தையே?"

"நீ மேவார் மன்னனாக முடி சூட வேண்டுமென்பது தேவியின் ஆணை. அது நடக்கவேண்டிய சமயத்தில் வந்தாய். அதுவும் தேவியின் கடாட்சம். நீ இருந்த இடத்தை அவள்தான் சுட்டிக்காட்டினாள்."

"அப்படியா!"

"ஆமாம், ஸங்கா! தபஸ்வினியை விசாரிக்கச் சொன்னேன். மஞ்சளாற்றங்கரைக்கு அருகில் எங்காவது இருப்பாய் என்று அவள் சொன்னாள். மஞ்சளாற்றங் கரைக்கு இப்பாலிருப்பது பிரமரர் குறுநிலம். அங்கு சமீப காலத்தில் கொள்ளைக்காரர்கள் வெற்றிகொள்ளப் பட்டார்கள் என்பதைக் கேள்விப்பட்டேன். புரிந்து



கொண்டேன். பிரமரர் நாட்டுக்கருகிலுள்ள கொள்ளையர்கள் யாரென்று எனக்குத் தெரியும். அவர்களை வெற்றி கொள்ளத் திறனுள்ளவர்கள் ராஜபுதனத்தில் இருவர். ஒருவன் பிருத்வி, இன்னொருவன் நீ. பிருத்வி என்னுடனிருந்தான்..." மன்னன் சிரமத்தால் வார்த்தையை முடிக்காமல் விட்டான்.

தந்தையின் கூரிய அறிவை வியந்துகொண்ட ஸங்கன் மௌனம் சாதித்தான். ராணாவின் அடுத்த கேள்வி அவனைத் தூக்கிவாரிப் போட்டது. "அது இருக்கட்டும், ஸங்கா! நாஹ்ராமக்ரோவிலிருந்து நீ ஏன் நேராக இங்கு வரவில்லை?" என்று கேட்டார் ராணா.

"நான் வந்தால் மீண்டும் சச்சரவு ஏற்பட்டிருக்கும்" என்றான் ஸங்கன்.

"பிருத்விக்கும் உனக்குமா?"

"ஆமாம்."

"நடுக்க நானில்லையா?"

"இல்லையென்று சொல்லவில்லை, தந்தையே. ஆனால், பிள்ளைகள் சச்சரவுகளைச் சமாளிக்கும் துர்பாக்கியத்தை உங்களுக்கு அளிக்க நான் இஷ்டப்பட வில்லை. அரசுக்காகச் சகோதரனுடன் சண்டையிட்டுச் சரித்திரத்தில் சாசுவதமான அவப்பெயரைப் பெறவும் நானிஷ்டப்படவில்லை."

ரேமல்லர் முகத்தில் பெருமை பெரிதாகப் படர்ந்தது. ஆனால், அதைத்தொடர்ந்து வாயிலிருந்து உதிர்ந்த சொற்களில் கடுமையே இருந்தது.

"உன் இஷ்டத்தைப் பிரதானமாக வைத்தது தவறு, ஸங்கா" என்றார் ராணா.

''தந்தையே...''

''மறுத்துப் பேசாதே. நீ இளவரசனாக முடிசூட்டப் பட்டவன். உன் முதல் கடமை ராஜ்யத்துக்கு, மக்களுக்கு. உன் சகோதரனோ, நானோ, மற்ற எவரும் அப்புறந்தான். நீ இளவரசனாக உன் கடமையை நினைத்துப் பார்த்திருந்தால் நாட்டைவிட்டு ஓடியிருக்கமாட்டாய்.''

''ஆனால்...''

''ஆனால் என்பது எதுவுமில்லை. கடமைக்குப்பின், 'ஆனால்' கிடையாது. ஆரம்பமும் கடமைதான், இறுதியும் கடமைதான். போனது போகட்டும், ஸங்கா. இனியாவது உன் விருப்பு வெறுப்புகளை உதறிவிடு. ஏனென்றால், நான் போனதும் நீ முடிசூடுவாய்; முடிசூடியபின் நீ மேவாரின் மன்னன் என்பதை மட்டும் நினைப்பில் வைத்துக்கொள். நானிருக்கும்போது முடிசூடுவது சம்பிரதாயமல்ல, ஆனால் இதை அணியலாம். இந்தா'' என்று தம் கையிலிருந்த முத்திரை மோதிரத்தைக் கழற்றி ஸங்கன் விரலில் போட்ட ராணா, ''இன்று முதல் அதிகாரம் முழுவதும் உன்னுடையது, ஸங்கா. உன் முன்னோர்கள் பரிபாலித்தது போல் இந்த நாட்டைப் பரிபாலனம் செய். இன்று இரண்டு பிரமாணங்களைச் செய்ய வேண்டும். எடு உன் வாளை'' என்றார்.

ஸங்கன் மறதியாக உறைப்பக்கம் கையைக்கொண்டு போனான். பிறகு, சட்டென்று கையை இழுத்துக் கொண்டான். இரண்டையும் கவனிக்கத் தவறாத ராணா புன்முறுவல் செய்தார். பிறகு, தம்மை நோக்கிக் குனியும்படி ஸங்கனுக்குச் சைகை செய்தார். ஸங்கன் தலையை மெள்ளக் குனிந்தான். ராணா ரேமல்லர் சிறிது



சிரமப்பட்டுத் தலையைத் திருப்பித் தமது உதடுகளை ஸங்கன் காதுக்காகக் கொண்டு சென்றார். பிறகு, உதடுகள் உதிர்த்தன சொற்களை. ''யார் அவள் ஸங்கா?'' என்ற சொற்கள், மகிழ்ச்சியில் துளைந்து விளையாடி வந்தன.

''யாரைப் பற்றிக் கேட்கிறீர்கள்?'' என்று ஸங்கனும் மெதுவாகக் கேட்டான்.

''உன் வாளுக்கு மாலையிடப் போகிறவள்'' என்றார் ராணா.

ஸங்கன் திடுக்கிட்டான். தந்தைக்கு இந்த விஷயம் எப்படித் தெரிந்தது என்று சொல்லவொண்ணா வியப்பையும் அடைந்தான். ரேமல்லர் விளக்கினார். அவர் விளக்க விளக்க ஸங்கன் வியப்பு மேலும் விரிந்தது.

## அத்தியாயம்-12

# ஆணைகள் இரண்டு

**வா**ளைஉறையிலிருந்து எடுக்கப்போய் திடீரெனக் கையை இழுத்துக்கொண்டதைத் தந்தை கண்ணிமைக்கும் நேரத்தில் கண்டுகொண்டதன்றி, வாள் உறையில் இல்லாத காரணத்தையும் நொடிப்பொழுதில் புரிந்து கொண்டு, ''யார் அவள் ஸங்கா? வாளுக்கு மாலை சூடப் போகும் அந்தப் பெண் யார்?'' என்று கேட்டதைக் கண்ட ஸங்கன், மரணப்படுக்கையிலிருந்த அந்த நேரத்திலும் ராணா ரேமல்லரின் மதி எத்தனை தெளிவுடனிருக்கிறதென்பதை எண்ணிப் பார்த்துப் பெரும் வியப்பை மட்டுமின்றி, ஓரளவு

சங்கடமும் எய்திச் சில விநாடிகள் தன் கண்ணை மன்னரின் கூரிய விழிகளின் தொடர்பிலிருந்து அகற்றிப் படுக்கையில் தாழ்த்தினான். அவன் சங்கடத்தை உணர்ந்துகொண்ட மன்னர் இதழ்களில் புன்னகை அரும்பியதல்லாமல் சிரமப்பட்டு வெளிவந்த அவருடைய சொற்களிலும் ஆனந்தம் நிரம்பிக் கிடந்தது. அத்தகைய உவகை நிரம்பிய குரலில் ரேமல்லர் மீண்டும் கேட்டார், "யாரவன் லங்கா? யார் மேவாரின் அரியணையில் அமரப்போகிறவன்?" என்று.

லங்கன் படுக்கையிலிருந்து தன் கண்ணை உயர்த்தவோ, மன்னர் கேட்ட கேள்விக்கு நேரிடையாகப் பதில் சொல்லவோ திறனில்லாத நிலையில் இருந்த படியால், அவன் சுற்றி வளைத்துப் பேச முற்பட்டு, "தாங்களும் என் தாயும் இருக்கிற வரையில் மேவார் அரியணையில் யாரும் உட்காரப் போவதில்லை, தந்தையே" என்றான்.

அதுவரை மகனுடன் பேசியதால் சிரமப்பட்ட ரேமல்லர், உடனே லங்கனுக்குப் பதில் சொல்ல முடியாமல் சிறிது இளைப்பாறினார். அவர் மூச்சு மிகவும் கஷ்டப்பட்டு வெளிவந்தது. அதைக் கண்ட லங்கன், "தந்தையே, நீங்கள் சற்று நிம்மதியுடன் கண்ணை மூடிப் படுங்கள். பேசுவதை நாளை பேசிக் கொள்ளலாம்" என்று கூறி விட்டு எழுந்திருக்க முயன்றான். அவனை மீண்டும் உட்காரச் சொல்லிக் கையால் சைகை செய்த ரேமல்லர், சிறிது நேரம் மௌனமாகவே இருந்தார். பிறகு, தலையை லேசாகத் திருப்பித் தம்முடைய தேவிகளில் ஒருத்தியைப் பார்த்தார். அந்தப் பார்வையின் பொருளைப் புரிந்து கொண்ட லங்கனின் தாயார் எழுந்திருந்து, சற்று தூரத்தில்



மஞ்சத்திலிருந்த கிண்ணத்திலிருந்து பாலை எடுத்து வந்து, மன்னரின் வாயில் சிறிது ஊற்றினாள். அதற்குப் பின்னர் சில விநாடிகள் கண்களை மூடிப் பிறகு திறந்தார் ரேமல்லர். அப்படித் திறந்தபோது அவர் சிரமம் சிறிது தணிந்ததையும், மீண்டும் அவர் கண்களில் ஒளி துலங்குவதையும் லங்கன் கண்டான்.

ராணா, லங்கனின் கையை மீண்டும் தன் கையால் பற்றிக்கொண்டு வாய்திறந்து மெள்ளச் சொன்னார், "பால் சிறிது சக்தியைக் கொடுத்திருக்கிறது, லங்கா! இனி நாம் பேசவேண்டியதையும் பேசி முடிக்கலாம்" என்று.

"நாளை பேசிக்கொள்ளலாமே!" என்று லங்கன் கெஞ்சினான்.

மன்னர் பதில் உறுதியுடன் வந்தது. "லங்கா! நாளைக்கு நானிருப்பேனோ மாட்டேனோ, சொல்ல முடியாது. இன்று நான் சொல்லும் படிப்பினையைக் கேட்டுக்கொள். எந்தக் காரியத்தையும் நாளைக்கென்று ஒத்திப் போடாதே."

"சரி தந்தையே" என்றான் லங்கன், வேதனை நிறைந்த உள்ளத்துடன். இரும்பு நெஞ்சத்தின் விளைவாகத் தம் உணர்ச்சிகளையும் சிரமத்தையும் உள்அடக்கிக் கொண்டு பேச முற்பட்ட தந்தையின் உறுதியைக் கண்டதால் ஏற்பட்ட பெருமிதம் அந்த வேதனையுடன் கலந்து கொண்டது.

ராணா ரேமல்லர் மீண்டும் சொன்னார்: "லங்கா! நானும் உன் தாயும் இருக்கும்வரை மேவார் அரியணையில் யாரும் உட்காரப் போவதில்லை என்று சொன்னாய். உண்மை. ஆனால், நான் இன்றோ நாளையோ மறைந்து

விடுவேன். நான் போன பிறகு உன் தாயும் அரியணையில் உட்கார முடியாது. உன் பேச்சு பாசத்தின் விளைவு. பாசத்தை அறுத்துவிடு, ஸங்கா. எதிலும் அதிக பாசம் அரியணையில் உட்காருபவனுக்குக் கூடாது.''

''சரி தந்தையே!'' ஏதோ கிளிப்பிள்ளை பதில் சொல்வது போலச் சொன்னான் ஸங்கன், உணர்ச்சிகள் உள்ளத்தைப் பெரும் அலைகளாக வளைத்துக்கொண்ட காரணத்தால்.

''கவனமாகக் கேள், ஸங்கா! ராஜபுதனம் இன்று சின்னாபின்னப்பட்டுக் கிடக்கிறது. சிசோதயர்கள், ராதோர்கள், பட்டிகள், ஜாதர்கள், துவார்கள், பிரமரர்கள் எல்லோரும் கிளை கிளையாகப் பிரிந்து நிற்கிறார்கள். இந்தப் பல கிளைகளுக்கிடையே சதா சண்டையும் சச்சரவும் மலிந்து கிடக்கின்றன. இந்தச் சண்டைகள் நீடித்தால் ராஜபுதனம் அழிந்துவிடும். எங்கும் இஸ்லாம் கொடி பறக்கிறது; அது ராஜபுதனத்தை அழித்து விட்டால் ஸனாதன தர்மம் அழிந்துவிடும். ஸனாதன தர்மம் அழிந்துவிட்டால் ஹிந்து வர்க்கம் என்ற பெயர் அடியோடு அழிந்துவிடும்...'' என்று பேசிக்கொண்டு போன ரேமல்லர் சற்று பேச்சை நிறுத்தினார்.

மன்னருக்கு அந்த மரணப்படுக்கையிலும் ஏற்பட்ட ஆவேசத்தைக் கவனித்த ஸங்கன் பேராச்சரியமும் பெருமையும் அடைந்தான். அந்தப் பேராச்சரியத்தாலும் பெருமையாலும் ஏதும் பேச முடியாமல் மௌனமே சாதித்தான்.

ராணா ரேமல்லரே தன்னை நிதானப்படுத்திக் கொண்டு மேலும் பேசத் தொடங்கி, ''ஹிந்து வர்க்கமும்



தர்மமும் அழியாமல் காக்கப்பட வேண்டமானால் ராஜ புதனம் ஒன்றுபடவேண்டும். ராஜபுதனம் ஒன்றுபட வேண்டுமானால், பிரதான அரசான மேவார்தான் அதை ஒரு குடைக்கீழ் கொண்டுவர முடியும். அப்படி மேவாரின் குடைக்கீழ் அரசைக் கொண்டுவர வேண்டுமானால், அந்த மேவார் அரியணையில் உட்காருபவன் வீரனாயிருந்தால் மட்டும் போதாது. நிதானஸ்தனாகவும் சகிப்புத்தன்மை உள்ளவனாகவும் இருக்கவேண்டும். அந்த இரண்டும் பிருத்வியிடம் இல்லை. ஆகையால்தான் அவன் மூத்தவனாயிருந்தும் அவனை விட்டுவிட்டு உன்னை இளவரசனாக்கினேன்'' என்றார்.

இதற்குப் பதில் சொல்லாமல் வாளாவிருந்த ஸங்கனை நோக்கிய ரேமல்லர் மெள்ளப் புன்முறுவல் செய்தார். ''ஸங்கா! பிருத்வியிடம் உனக்குள்ள அன்பு எனக்குத் தெரியும். உனக்கு மண்ணாசை கிடையாது. பெண்ணாசை இல்லாது போயிருந்தால் மேவாரியின் கதி எப்படிப் போயிருக்குமோ?'' என்று முணுமுணுத்தார்.

அப்பொழுதுதான் குனிந்த தலையை ஸங்கன் நிமிர்த்தி, ''நான் பெண்ணாசை பிடித்தவனென்று நினைக்கிறீர்களா?'' என்று வினவினான்.

தலையணையில் ஒரு முறை தலையைத் திருப்பி மெள்ள நகைத்தார் மேவாரின் மன்னர், ''உன் வாளைக் கேள்'' என்று நகைச்சுவையும் சற்றுக் காட்டினார்.

ஸங்கன் மீண்டும் தலையைக் குனிந்துகொண்டான். ரேமல்லர் அன்பு வ்ழியும் விழிகளை அவன் மீது நாட்டி, ''ஸங்கா! பிரமாணம் செய்ய நான் எடுக்கச் சொன்னவுடன்

நீ வாளை எடுக்கக் கையைக் கொண்டுபோய், அது இல்லாததால் திகைத்தபோதே புரிந்துகொண்டேன்'' என்று குரலிலும் அன்பு அமுதமாகப் பிரவாகிக்கச் சொன்னார்.

குனிந்த தலை நிமிராமலே கேட்டான் ஸங்கன், ''என்ன புரிந்துகொண்டீர்கள், தந்தையே?'' என்று.

''அது ஒரு பெண்ணிடம் போய்விட்டதென்று.''

''பெண்ணிடம் ஏன் போக வேண்டும்?''

''ராஜபுத்ரர் வழக்கம் உனக்குத் தெரியாது, ஸங்கா. மூன்று விஷயங்கள் பிறர் கைகளுக்கு மாற ராஜபுத்ரர்கள் சம்மதிக்க மாட்டார்கள். தன் குதிரை, மனைவி, வாள் இம்மூன்றையும் அவர்கள் உயிர் உடலிலிருக்கும்போது யாரும் பறிக்க முடியாது. நீ உயிருடன் வந்திருக்கிறாய். உன் வாள் உன்னிடமில்லை...''

''ஆகவே?''

''அதை யாரிடமோ கொடுத்திருக்கிறாய். வாளுக்கு மாலை சூடும் அவசியமிருந்தாலொழிய அது உறையிலிருந்து மறையாது. இதில் பெரும் ஊகம் ஏதுமில்லையே.''

மரணப் படுக்கையிலும் மன்னர் காரணங்களை எத்தனை கோவையாகச் சொல்கிறார் என்பதை எண்ணிப் பார்த்து வியந்த ஸங்கன், ''ஆம், தந்தையே! ஒரு பெண்ணிடந்தான் அதைக் கொடுத்து வந்திருக்கிறேன்'' என்றான், நிலத்தில் தன் ஒற்றைக் கண்ணை நாட்டி.

''யாரவன், ஸங்கா?'' என்று கேட்டார் மன்னர் ஆசையுடன்.

''பிரமரர் குல ராஜகுமாரி'' என்றான் ஸங்கன்.



''யார், கரம்சந்த்தின் மகளா?'' என்று கேட்டார் ரேமல்லர்.

''ஆம்.''

''பெயர்?''

''சொர்ணாதேவி!''

''அழகாயிருப்பாளா?''

''பெயருக்குத் தக்கபடி இருக்கிறாள்'' என்று இழுத்தான் ஸங்கன், சற்று வெட்கத்தினால்.

அவன் வெட்கத்தை உடைக்க உறுதியுடன் பேசினார் ரேமல்லர். ''வெட்கப்படாமல் சொல், ஸங்கா! தந்தையும் மகனும் பேசும் பேச்சல்ல இது. நீயும் நானும் சாதாரணப் பிரஜைகளாயிருந்தால் இந்தக் கேள்விகளை உன் தாயையோ அல்லது உன் நண்பர்களையோ விட்டுத்தான் விசாரித்திருப்பேன், ஆனால் நான் மன்னன்; நீ அரியணையில் உட்காரப் போகிறவன். ராஜபுதனத்தின் நலத்தைப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்கப் போகிறவன். ஆகவே, வெட்கத்தை துறந்துவிடு. அதற்குப் பதில் கடமை உன் உணர்ச்சிகளை ஆட்கொள்ளட்டும்'' என்றார் கண்டிப்புடன்.

''சரி, தந்தையே'' என்று கூறிய ஸங்கன், ராணாவின் முகத்தை ஏறெடுத்து நோக்கினான்.

''சொர்ணாதேவி அழகாயிருக்கிறாளா?'' என்று கேட்டார் ராணா.

''இருக்கிறாள்.''

''அதைப்பற்றி அத்தனை கவலையில்லை எனக்கு. கம்பீரமாயிருப்பாளா, சொல்.''

''பிள்ளையாகப் பிறந்திருந்தால் இந்த மேவாரை ஆளக் கூடியவள்.''

''வாள் வித்தை?''

''வாள் சுழற்றுதலில் மட்டுமல்ல, வேலெறிவதிலும் நிகரற்றவள். வீரமகள்.''

''ரேமல்லரின் கூரிய கண்கள் ஸங்கன் கண்ணைச் சிறிது நேரம் சந்தித்தன. ''ஆம், ஸங்கா. அவள் மேவார் அரியணையில் உட்காரத் தகுந்தவள்தான்'' என்றார் கடைசியில்.

ஸங்கனின் ஒற்றைக்கண் ஆச்சரியத்தால் மலர்ந்தது. ''எப்படித் தெரிந்துகொண்டீர்கள், தந்தையே?'' என்று கேட்ட அவன் குரலில் அந்த வியப்பு விரிந்து கிடந்தது.

''உனக்கு ஒரு கண்ணில்லை, ஸங்கா'' என்று, ஏதோ புதிதாக விஷயத்தைச் சொல்லுவதுபோல் ஆரம்பித்தார் ராணா.

''ஆம், தந்தையே'' என்று ஒப்புக்கொண்டான் ஸங்கன்.

''ஆகவே, உன் அழகுக்காக அவள் உன்னை விரும்பியிருக்க முடியாது.''

ஸங்கன் வாய் திறந்து பதில் சொல்லவில்லை. 'சரி' என்பதற்கு அறிகுறியாகத் தலையை மட்டும் ஆட்டினான்.

மன்னர் விளக்கினார்; ''ஸங்கா! நீ அழகில்லை என்று நான் சொல்லவில்லை. உன் முகத்திலிருக்கும் கம்பீரக்களை ஒன்றே எனக்குப் போதும். ஆனால், சாதாரணப் பெண்கள்



கம்பீரத்தை மட்டும் விரும்பமாட்டார்கள். 'ஸர்வேந்த்ரியாணாம் நயனம் பிரதானம்' என்பது பழமொழி. இந்திரியங்களுக்குள் கண் முக்கியம். அவற்றுள் ஒன்றை இழந்து கிடக்கும் உன்னை வேண்டுபவன் அழகுக்காக வேண்டியிருக்க முடியாது. உன் அரசுக்காகவும் விரும்பியிருக்க முடியாது. பிரமரர் நாட்டில் அரசுரிமையற்ற அநாதையாக இருந்திருக்கிறாய்! உன் குணங்களைக் கண்டுதான் உன்னை அவள் தேர்ந்தெடுத்திருக்க வேண்டும்'' என்ற ரேமல்லர், ''ஸங்கா! நீ புத்திசாலியென்று எனக்குத் தெரியும். ஆனால், பெண்ணைத் தேர்ந்தெடுப்பதிலும் நீ கெட்டிக்காரன் என்பதை அறிந்து கொண்டேன்!'' என்றும் ஆசை நிறைந்த கேலிப் பேச்சை உதிரவிட்டார். பிறகு, எதையோ நினைத்துக் கொண்டு, ''ஆம் ஸங்கா! இவள் தாராபாய் மாதிரி இருக்கமாட்டாளே'' என்று திடீரென்று கேட்டார், முகத்தில் கவலை படர.

''யாரது தாராபாய்?'' என்று வினவினான் ஸங்கன்.

''அவள்தான் பிருத்வியின் மனைவி.''

''ஏன், அவளுக்கென்ன?''

''தாராபாய் வீர ஸ்திரீ! சதா சண்டையில் பிரியமுள்ளவள். எப்பொழுதும் வில்லையும் அம்பையும் வாளையுந் தாங்கி, பிருத்வி போகுமிடங்களுக்கெல்லாம் அவளும் சென்று சண்டையிட்டு வந்தாள். அரண்மனையில் அவள் இருந்ததே கிடையாது. இவள்...''

''இவள் அரண்மனையை விட்டுக் கிளம்புவது கிடையாது. ஜலக்கிரீடை....'' என்று ஆரம்பித்த ஸங்கன், மஞ்சளாற்றை நினைத்துக்கொண்டு சட்டென்று பேச்சை நிறுத்தினான்.

ராணா ரேமல்லரின் யோசனைகள் வேறுதிசையில் ஓடிக் கொண்டிருந்தமையால், அவர் ஸங்கனின் சங்கடத்தைக் கவனிக்காமலேயே, ''ஜலக்கிரீடை, எப்பொழுதாவது கணவனுடன் வேட்டைக்குப் போவது இவை ராஜபுத்ர ஸ்திரீகளுக்கு இயற்கை. ஆனால் ஸங்கா, புருஷன் போல் சதா வெளியில் திரியும் ராணி மேவாருக்கு உதவாது. அந்தப்புரத்திலிருந்து கணவனை ஊக்குவிக்கும் ராணிதான் தேவை'' என்றார்.

''அத்தகைய வீட்டுப்பறவைதான் இவள்'' என்றான் ஸங்கன்.

''தாராபாயைப் போன்ற காட்டுப்பறவையைவிட இத்தகைய வீட்டுப்பறவைதான் தேவை'' என்ற ரேமல்லர், ''மிகவும் மகிழ்ச்சி, ஸங்கா! எனக்குப் பெரும் நிம்மதியை அளித்துவிட்டாய். இனி நீ இரண்டு பிரமாணங்களைச் செய்ய வேண்டும், இந்தா. என்வாளை எடுத்துக் கொள்'' என்று, பக்கத்திலிருந்த தமது பட்டாக்கத்தியைச் சுட்டிக் காட்டினார்.

அந்தப் பட்டாக்கத்தியை உருவிப் பிடித்துக்கொண்டு ஸங்கன், தந்தைக்கு எதிரில் எழுந்து நின்றான்.

''ஸங்கா, முதல் ஆணை இது! உன் உயிருள்ளவரை நீ இஸ்லாமியரை ராஜபுதனத்துக்குள் நுழையவிடக் கூடாது'' என்றார் ஆவேசத்துடன்.

ஸங்கன் வாளை உயர்த்தி ஆணையிட்டான்.

''இரண்டாவது ஆணை. ஸங்கா, எக்காரணத்தை முன்னிட்டும் நீ இப்பொழுதுள்ள தளபதியை அவன் ஸ்தானத்திலிருந்து மாற்றக்கூடாது'' என்றார் ராணா.



ஸங்கனுக்குத் தூக்கி வாரிப்போட்டது. ''யாரை, சிலாதித்தனையா?'' என்று கேட்டான் ஸங்கன்.

''ஆம், ஸங்கா! இறக்குந்தறுவாயில் பிருத்வியின் கோரிக்கை அது. நானும் அதற்குச் சம்மதித்தேன். ஆகையால் நீயும் சம்மதிக்க வேண்டும்'' என்றார் ராணா.

ஸங்கனுக்குச் சம்மதமில்லை, சிலாதித்தனை அவன் என்றுமே நம்பியதில்லை. இருப்பினும் மரணப் படுக்கை யிலிருந்து தன் தந்தை கேட்டபடி பிரமாணம் செய்தான்.

ராணா ரேமல்லர் நிம்மதியுடன் பஞ்சணையில் புரண்டார். நீண்ட நேரம் பேசியதன் விளைவாக அவர் மூச்சு மிகவும் சிரமப்பட்டு வரத்தொடங்கியது. பக்கத்திலிருந்த ராணிகள் அவர் பணிவிடைக்கு விரைந்தனர். ''ஸங்கா, நீ சென்று உடைகளை மாற்றிக்கொள்'' என்று அவன் தாய் உத்தரவிட்டாள்.

பலதரப்பட்ட உணர்ச்சிகளுடன் அந்த அறையை விட்டகன்ற ஸங்கன், தனக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அறைக்குள் சென்று, உடைகளைக் களைந்து, வேறு உடைகளை மாற்றிக்கொண்டு, அங்கிருந்த பஞ்சணையில் அமர்ந்து, தந்தையிட்ட ஆணைகளை எண்ணி எண்ணிப் பார்த்தான். முதல் ஆணை அவன் மனத்துக்குப் பிடித்தது தான். இரண்டாவது ஆணை அவன் விரும்பாதது. இருப்பினும், அரசர்கள் இனிப்புடன் கசப்பையும் அனுபவிக்க வேண்டியதுதான் என்று தீர்மானித்தான்.

அவன் வாழ்வு பூராவையும் அந்த இரண்டு ஆணைகளும் பாதித்தன. இனிப்புடன் கசப்பும் கலந்தே

புரண்டன அவன் வாழ்வில். அந்தக் கசப்பின் முதல் கருவியாக உருவெடுத்தான் சிலாதித்தன். அரசர் முன்பு இளவரசன் இட்ட ஆணையைக் கேட்ட அவன், உள்ளூறக் குதூகலித்தான். ஆனால், அந்தக் குதூகலத்தை வெளிக்கு மட்டும் காட்டவில்லை. காலம் வரட்டும் எனக் காத்திருந்தான்.

## அத்தியாயம்-13

# பரிகாரம்

சாலிவாஹன சகாப்தம் 1565-ஆம் வருஷத்தில், அதாவது கி.பி.1509-வது வருஷத்தில் ராணா ஸங்கன் அரியணையில் ஏறினான். மேவார் முழுவதுமே மணக்கோலம் பூண்டது. மகாவீரனும் நிதானஸ்தனுமான ஸங்கன், மேவாரின் சிம்மாசனத்தில் அமர்ந்து விட்டதால், ராஜபுதனத்துக்கு விடி மோட்சம் இருக்குமென்று கருதியதன் விளைவாக ராஜபுதனம் முழுவதிலும் குதூகலம் நிரம்பி நின்றது. ஆனால், ராணா ஸங்கன் மட்டும் மனத்தில் எந்தவித சந்துஷ்டியுமில்லாமலே இருந்தான். மகிழ்ச்சிக்கு வேண்டிய நிலை பலமாக அவனைச் சூழ்ந்துதான் கிடந்தது. ஆனால் அது சூழ்நிலையாகவே நின்று விட்டதேயொழிய அவன் இதயத்துக்குள் புகும் சக்தியை அறவே இழந்து கிடந்தது.

ராணா ரேமல்லர், ஸங்கன் தலைநகர் திரும்பிய மூன்றாவது நாள் மண்ணுலகை நீத்ததால் பதின்மூன்று நாள்கள் துக்கத்தில் ஆழ்ந்து கிடந்த சித்தூர், பதினான்காவது



நாள் கூம்பிக்கிடந்த மலர் திடீரென விகசித்து விட்டது போல், முகமலர்ந்து இன்பக் கோலம் பூண்டது. எங்கும் கோலாகலத்தின் அரவமும் கேளிக்கைக் கூச்சல்களும் வானைப் பிளந்து கொண்டிருந்தன. அன்று மறுநாள் நடந்த மகுடாபிஷேகத்தின் போது ராஜபுதனத்தின் சுமார் எட்டுக் கிளை மன்னர்களின் வாட்கள் ஸங்கன் கால்களை நோக்கித் தாழ்ந்தன. அன்றே பிரமரர் நாட்டிலிருந்து, மங்கல நாண் கழுத்தில் துலங்க வந்த சொர்ணாதேவியின் விசால விழிகளும் நாணத்தாலும் இன்பத்தாலும் நிலத்தை நோக்கித் தாழ்ந்தன.

காதலி பட்டமகிஷியாகப் பக்கத்தில் வீற்றிருக்க, ராஜபுதனத்தின் பெருங்குடி வீரர்கள் வாட்களைக் காலில் தாழ்த்தி எங்கும் ஜெயவிஜயீபவ சப்தங்கள் வானைப் பிளக்க எழுப்பிய குரல்கள் சாதாரணமாக ஸங்கனுக்கு மகிழ்ச்சியைத்தான் அளித்திருக்க வேண்டும். ஆனால், அவை அவன் மனத்தில் மகிழ்ச்சியை விளைவிக்காதது மட்டுமல்ல; இத்தனை மகிழ்ச்சி ஒலியுடனும் ஏதோ அபஸ்வரம் ஊடுருவுவது போன்ற பிரமை அவன் மனத்தில் எழுந்து கொண்டிருந்தது. ஆகவே, மகுடம் சூடி சுமார் இருபது நாட்களுக்குப் பிறகு, உப்பரிகையில் ஏறி நின்று சித்தூரை நோக்கித் தனது ஒற்றைக்கண்ணை உலாவவிட்ட ஸங்கன் மனத்தில் விவரிக்க இயலாத வேதனையே நிறைந்து கிடந்தது.

அப்பொழுது இராக்காலம். வெண்ணிலவு எங்கும் பரந்து கிடந்தது. அந்த வெண்ணிலவு தொட்டதால் தூரத்தே தெரிந்த பவானி மாதாவின் கோயிலின் தங்கக் கலசமும் தங்கமும் வைரமும் கலந்தது போல் பக்கொளியொன்றைப்

பரப்பி நின்றது- எங்கும் கண்ணுக்கு விருந்தாக இருந்தது நகரத்தின் தோற்றம். நகரத்தின் நந்தவனங்களிலிருந்த நறுமலர்களின் இன்ப மணமும் காற்றில் மிதந்து வந்தது. அவற்றைத் தொடர்ந்து வருபவள் போல் ராணி சொர்ணாதேவியும் உப்பரிகை மீது ஏறிவந்து, லங்கனுக்கு வெகு அருகில் நின்றாள். அப்படி வந்தவளை லங்கன் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை, அவள் ஆச்சரியப்பட்டாள். 'என் பாத அணிகளின் சப்தங்கள் கூட கலைக்க முடியாத அத்தனை ஆழ்ந்த சிந்தனை எதற்கு?' என்று தனக்குள் எண்ணிய சொர்ணா தேவி அவன் தோள் மீது மெள்ள ஒரு கையை வைத்தாள். அப்பொழுதுதான் ராணாவுக்குச் சுரணை வந்திருக்க வேண்டும். ஏதோ தூக்கிவாரிப் போட்டது போல திரும்பி, ''யார் சொர்ணாவா?'' என்று கேட்டான் லங்கன்.

''ஏன், இப்படி கையை வைக்கக் கூடிய உரிமையுள்ளவர்கள் வேறு யாராவது ராணாவுக்கு ஏற்பட்டு விட்டார்களா அதற்குள்?'' என்று கேட்ட சொர்ணாதேவி கலகலவென நகைத்தாள்.

அந்த நகைப்பு சற்றே பழைய நினைவுகளைக் கலைத்து விட்டதால் அவளை நோக்கித் திரும்பித் தன் இரு கைகளாலும் அணைத்துக்கொண்ட லங்கன், ''சொர்ணா!'' என்று குரலில் இன்பம் சொட்ட அழைத்தான்.

''ஏன்?'' ஒற்றைச் சொல்லைத்தான் அவள் பதில் கேள்வியாக வீசினாள். ஆனால், அதை எழுப்பிய குரலில் இன்பக் கதைகள் பல புதைந்து கிடந்தன.



''நீ இன்னும் தூங்கவில்லையா?'' என்று கேட்ட லங்கன், அவள் தலையை உயர்த்தி, விழிகளைத் தன் ஒற்றைக் கண்ணால் ஆராய்ந்தான்.

அவள் கண்கள் அந்த வீரன் முகத்தில் தைரியத்துடன் புதைந்தன. ஏதோ பலப்பல அழைப்புகளையும் விடுத்தன. வாய் மட்டும் சொல்லியது, ''இல்லை'' என்ற ஒரு வார்த்தையை.

''ஏன்?''

''தூங்கக் கூடாது என்று சாஸ்திரம்.''

''அதற்கும் சாஸ்திரம் இருக்கிறதா?''

''ஆகா! இருக்கிறது.''

''இரவில் தூங்கக் கூடாதென்றா?''

''ஆமாம்.''

''எல்லோருமா?''

''இல்லை; பெண்களுக்கு மட்டும்.''

''அதென்ன சாஸ்திரமாம்?''

''கற்புடைய பெண்கள் கணவன் உறங்கிய பின்பு, உறங்கி, அவன் எழுந்திருக்கும் முன்பு எழுந்திருக்க வேண்டும்.''

''அப்படியானால்...?''

''நீங்கள் உறங்கவில்லை, ஆகவே நானும் உறங்கவில்லை.''

''நான் இரவு பூராவும் உறங்காமலே இருப்பேன்.''

''அது என்னாலும் முடியும்.''

சொர்ணாவின் பதில் திட்டவட்டமாக வந்தது. சுற்றிலுமிருந்த நிலவும், அணைப்பில் நின்ற சொர்ணாவின் அழகிய உடலும், மெள்ள மெள்ள ராணாவின் இதயத்திலிருந்த வேதனையை இறக்க முற்பட்டன. இருப்பினும் லங்கன் சொன்னான், "சொர்ணா, நீ பள்ளியறைக்குப்போ. என் மனம் துன்பக் கடலில் மூழ்கியிருக்கிறது" என்று.

சொர்ணா அவன் மார்பில் நன்றாகச் சாய்ந்து கொண்டாள். "அந்தப் பழைய விஷயந்தானே?" என்று கேட்டாள்.

"ஆம், அதேதான், சொர்ணா" என்று பதில் சொன்னான்.

"அது நடந்து மாதம் ஒன்றுக்குமேல் ஆகிவிட்டதே" என்றாள்.

"மாதமென்ன, வருஷம் ஒன்றானாலும் இதயம் அதை மறக்காது, சொர்ணா. தந்தைக்கு நான் செய்து கொடுத்த இரண்டாவது சத்தியம் ராஜபுதனத்துக்குப் பெரும் கேட்டை விளைவிக்குமென்று என் உள்ளத்திலே ஏதோ சொல்கிறது. வாளின்மேல் இட்ட ஆணைப்படி சிலாதித்தனை எனது தளபதியாக்கிவிட்டேன். ஆனால் அவன் அந்தரங்க சுத்தியில் எனக்கு நம்பிக்கையில்லை. அவனை நம்பாதே என்று ஏதோ ஒன்று உள்ளே கூறிக் கொண்டிருக்கிறது" என்று சொன்ன லங்கன், துன்பத்தால் பெருமூச்சு விட்டான்.

சொர்ணாவின் கரங்கள் லங்கனை நன்றாக இறுகத் தழுவின. "மகாவீரரான தாங்கள், பலரை ஒரே சமயத்தில் எதிர்த்துப் போரிட்டு மடியச் செய்யும் ஆற்றல் வாய்ந்த தாங்கள், கேவலம், ஒரு மனிதனை எண்ணி இதயத்தைப் பாழாக்கிக் கொள்ளலாமா?" என்று கேட்டாள்.



லங்கன் அவள் பிணைப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு உப்பரிகையில் சற்று உலாவினான். பிறகு, அவளுக்கு முன் வந்து நின்று, "இதயத்தை நானாகக் கசக்கவில்லை. திரும்பத் திரும்ப அதுவே அந்த இரண்டாவது ஆணையை நினைவூட்டுகிறது. 'ஏனப்படி ஆணையிட்டாய்?' என்று இதயத்தின் ஒரு பாகம் விசாரிக்கிறது. இன்னொரு பாகம் 'மெள்ள அவனை உதறிவிடு' என்று யோசனை கூறுகிறது. என் இதயம் இரண்டாகப் பிரிந்து கிடக்கிறது" என்றான்.

சொர்ணாதேவி அவனை நன்றாக ஏறெடுத்து நோக்கினாள். "மகாராணா! இதயராணி ஒருத்தி இருந்தால், அவள் இதய வேதனைக்கு மருந்தாவது உண்டு. ஆனால், உங்கள் வேதனைக்கு மருந்து நானும் அல்ல. இதைத் தீர்மானிக்க வழி ஒன்றுதானிருக்கிறது" என்று மெள்ளச் சொன்னாள்.

"என்ன வழி?" என்று ஆவலுடன் கேட்டான் லங்கன்.

"உபாயம் இருக்குமிடத்திற்குப் போகவேண்டும்."

"அந்த இடம் எது?"

"மனிதன் மனம் அல்லற்படும்போது அதற்குச் சாந்தியளிப்பது தேவாலயம் ஒன்றுதான்."

"பவானி ஆலயத்திற்குத்தானே, அங்கு தினமும் நான் போய் வருகிறேன்."

''அங்கல்ல.''

''வேறெங்கு''

''சாருணீதேவியின் ஆலயத்திற்கு.''

மிகவும் நிதானத்துடனும் உறுதியுடனும் அந்த யோசனையைச் சொன்னாள் சொர்ணாதேவி. ஸங்கனுடைய ஒற்றைக்கண்ணில் ஆச்சரியம் தோன்றியது. ''ஆமாம், சொர்ணா! எனக்கு ஏனோ இந்த யோசனை தோன்ற வில்லை. எனது இரண்டாவது ஆணைக்கு தபஸ் வினியையே விளக்கம் கேட்கலாம்'' என்றான் ஸங்கன், துடிப்புடன்.

''அங்குதான் தங்களுக்குச் சரியான விடை கிடைக்கும். தங்களுக்குத்தான் அரியணை கிடைக்குமென்று தபஸ்வினிதானே சொன்னாள்'' என்றாள் சொர்ணா...!

''ஆமாம், சொர்ணா!''

''அதைக் குறிப்பிட்டுச் சொன்னவள், அரியணை ஏறியதும் ஏற்படும் சிக்கல்களுக்கும் பரிகாரம் சொல்லலா மல்லவா?''

''சொல்லலாம், சொல்லலாம்'' என்று குதூகலப் பட்டான் ஸங்கன். அந்த குதூகலத்தால் அப்படியே சொர்ணாதேவியைக் கட்டிப்பிடித்து, ஒரு குழந்தையைத் தூக்குவதுபோல் தூக்கி, ''சொர்ணா! நீ ஏன் எனக்கு மந்திரியாக வரக்கூடாது?'' என்று கேட்டான்.

''அந்த உத்தியோகமும் மனைவிக்கு உண்டென்று சாஸ்திரம் சொல்லுகிறது'' என்று சிரித்தாள் சொர்ணா தேவி.



அவள் சிரிப்பு, இதயத்தின் வேதனையை அடியோடு துடைக்கவே, அவளைக் கைகளில் தாங்கிய வண்ணம் உப்பரிகையிலிருந்து இறங்கினான் ஸங்கன்.

''ஐயோ! விடுங்கள், மகாராஜா! சேடிகள் பார்த்தால் பரிகாசம் செய்வார்கள்'' என்று அவன் கரங்களில் தத்தளித்தாள் சொர்ணாதேவி. அதைச் சிறிதும் காதில் வாங்கிக் கொள்ளாமல், அவளைத் தூக்கியவண்ணமே பள்ளியறைக்குள் நுழைந்த ஸங்கன், அவளை முரட்டுத் தனமாக பஞ்சணையில் எறிந்து தானும் மலரணையில் புரண்டான். நாழிகைகள் ஓடின.

மறுநாட்காலையே ஸங்கன் தன் ராணியுடன் நாஹ்ரா மக்ரோவுக்குப் புறப்பட்டு, முதன்முறை போலவே மாலை வேளையில் நாஹ்ராமக்ரோவை அடைந்து, சாருணீ தேவியின் ஆலயத்தில் பிரவேசித்தான். அன்று தபஸ்வினி முதல் தினம்போல் கோவில் வாயிலில் நின்றிருக்கவில்லை. உள்ளே தேவியின் திருவுருவத்தினடியில் கண்களை மூடிய வண்ணம் தியானத்தில் உட்கார்ந்திருந்தாள். சொர்ணாதேவி சாருணீதேவியின் உருவத்தையும் பார்த்து தபஸ்வினியின் தெய்வக்களை சொட்டும் முகத்தையும் பார்த்தாள். அந்தத் தேவாலயத்தின் சூழ்நிலை பயத்தையும் பக்தியையும் ஒருங்கே விளைவித்தன, அந்தப் பயத்திலும் பக்தியிலும் ஓர் இன்ப நினைப்பும் ஊடுருவி நின்றது.

'தேவிதானே மஞ்சளாற்றங்கரைக்கு வரும்படி இவரைப் பணித்தாள்? இல்லாவிட்டால் இவர் எனக்குக் கிடைப்பாரா?' என்று, நன்றியும் இன்பமும் கலந்த பார்வையை தபஸ்வினி மீதும், தேவியின் திருவுருவத்தின்

மீதும் வீசி, கீழே மண்டியிட்டு இருவரையும் வணங்கவும் செய்தாள்.

ஸங்கனும் வணங்கினான். வணங்கிய நிலையிலேயே இருக்கும்படி சொர்ணாதேவிக்கும் கட்டளையிட்டான். நீண்ட நேரம் தலைதாழ்த்திய நிலையில் கீழேயிருந்த அவ்விருவரையும் கண்விழித்துப் பார்த்த தபஸ்வினியின் இதழ்களில் இளநகை அரும்பியது. அவள் மெள்ளச் சொற்களை உதிரவிட்டு, ''மஞ்சளாற்றங்கரை பலனளித்திருக்கிறது, ஸங்கா! ராஜ்யமும் கிடைத்தது, ராணியும் கிடைத்தாள்'' என்றாள்.

''எல்லாம் தங்கள் அருள் தாயே'' என்றான் ஸங்கன்.

''என் அருளல்ல, ஸங்கா! தேவியின் அருள்'' என்று அழுத்திச் சொன்னாள் தபஸ்வினி.

''இருப்பினும் தங்கள் மூலந்தானே தேவி பேசுகிறாள்'' என்றான் ஸங்கன்.

''தவம் செய்தால் உன் வாயினாலும் பேசுவாள், ஸங்கா. மனத்தில் சாந்தியும் சந்துஷ்டியுமிருந்தால் உன் நாவிலும் தேவி தோன்றுவாள்'' என்றாள் தபஸ்வினி.

''அந்த இரண்டுமில்லையே தாயே'' என்றான் ஸங்கன்.

''விதி உனக்கு அரசு, பதவி, புகழ் அனைத்தையும் அளிக்கும், ஸங்கா. ஆனால், சாந்தியை அளிக்காது'' என்று திட்டமாக அறிவித்தாள் தபஸ்வினி.

''ஏன் தாயே?''



''நீ முதன் முதலாக இங்கு வந்த அன்று, நீதான் மேவாரின் ராணா என்பதை நிர்ணயித்தாள். அது மட்டுமல்ல, உன் அரசபீடம் உனக்குப் பெருந்தொல்லை என்றும் அன்று இங்கு நடந்த நிகழ்ச்சிகளால் நிரூபிக்கப்பட்டது. உன் சகோதரர்கள் உன்னைக் கொல்லப் பார்த்தார்கள். ஆகவே, நீ மகா பலமுள்ள அரசனாயிருக்கும் போது உனக்குப் பக்கத்தில் சத்துரு ஒருவன் இருப்பான் என்பது மட்டும் தீர்மானமாயிற்று.''

''இருக்கிறான், தாயே. ஆனால்...''

''அவனை நீக்க உன்னால் முடியாது. ஒரு சத்தியம் உன்னைக் கட்டுப்படுத்துகிறது. ஆனால், அதற்கும் ஒரு பரிகாரம் இருக்கிறது.''

''என்ன பரிகாரம், தாயே?'' ஸங்கன் ஆவலுடன் கேட்டான்.

''தேவி உனக்கு மஞ்சள் பாதுகாப்பு அளித்திருக்கிறாள். ஆகவே, தேவியின் மஞ்சள் உன் நெற்றியிலிருக்கும் வரை, நீ மஞ்சளாற்றைக் கடந்து அப்புறம் செல்லாதவரை உன்னை யாரும் அடக்க முடியாது'' என்றாள் தபஸ்வினி.

ஸங்கன் இதயத்தில் மீண்டும் நம்பிக்கை புகுந்தது. தபஸ்வினி கொடுத்த தேவியின் மஞ்சள் காப்பை நிரம்ப வாங்கிக்கொண்டு சொர்ணாதேவியுடன் தலைநகர் திரும்பிய ஸங்கன், அன்று முதல் கவலையை விட்டான். அடுத்த ஐந்து வருஷங்களில் ராஜபுதனத்தில் பெரும் சாகசச் செயல்களை ஸங்கன் புரிந்தான். பல்வேறு ராஜபுத்ர குறுநில மன்னர்கள் மேவாரின் குடைக்கீழ் வந்தனர். அந்த ஐந்து

வருஷமும் சிலாதித்தன் ராணாவின் நடவடிக்கைகளைக் கவனித்துக் கொண்டிருந்தான். அதில் முக்கியமாக ஒரு விஷயத்தைக் கவனிக்க அவன் தவறவில்லை. மேவார் வம்ச மன்னர்கள் பவானி கோவிலின் குங்குமத்தை இட்டுத்தான் அரியணையில் அமர்ந்து ஆட்சி புரிவார்கள். ஆனால், ஸங்கன் அரியணையில் அமர்ந்தபோதும், மற்ற நேரங்களிலும் நெற்றியில் மட்டும் மஞ்சள் திலகமொன்று பளிச்சிட்டதைக் கண்ட சிலாதித்தன், அதன் காரணத்தை அறிய முயன்றான். அரண்மனைச் சேடிகளுடன் பேசி, மெள்ள அந்த உள்ளரங்கத்தையும் அறிந்துகொண்டான். ராணாவை அழிக்க வேண்டுமானால் மஞ்சளாற்றங் கரையைக் கடக்கச் செய்ய வேண்டும் என்ற உண்மை சிலாதித்தனுக்கு மிகத் தெளிவாகத் தெரிந்தது. சாருணீதேவியளித்த அந்த மஞ்சள் பாதுகாப்பைத் துறக்கும் மார்க்கம் எது என்று எண்ணிப் பார்த்தான். பல வருஷங்கள் விடை கிடைக்கவில்லை. விடை கிடைத்த பின்பு அதை உபயோகிக்கவும், நாட்டை நாசமாக்கவும் அந்தப் பாதகன் தவறவில்லை.



## அத்தியாயம்-14

# பியானா

“ராஜ்ய விஸ்தரிப்பும் புகழும் உனக்குக் கிட்டும். ஆனால், மனச்சாந்தி மட்டும் கிட்டாது” என்று சாருணீதேவி ஆலயத்தின் தபஸ்வினி சொன்னது, ராணா ஸங்கன் வாழ்வில் திட்டவட்டமாகப் பலித்துக்கொண்டிருந்தது. வருஷங்கள் பல ஓடின. அவை ஓடின வேகத்தில் மேவாரின் பலமும் செல்வாக்கும் நாற்றிசையிலும் விரிவடைந்தன. சதா எதற்கெடுத்தாலும் பொறாமையையும் பூசல்களையும் விளைவித்து ஒன்றையொன்று அழித்துக் கொண்டிருந்த ராஜபுதனத்தின் கிளைகள் எல்லாமே ஸங்கன் ஆணைக்குக் காலக்கிரமத்தில் கீழ்ப்படிந்தன. என்றுமில்லாத ஒற்றுமை ராஜபுதனத்தில் ஸங்கன் ஆட்சியில் ஏற்பட்டதைக் கண்டு டில்லியிலிருந்த லோடி வம்சத்து நவாப் இப்ராஹீம் பெரிதும் பயம் கொண்டான். ராஜபுத்ரர்களை நினைத்தபோதெல்லாம் தாக்கிப் பெரும் சேதம் விளைவித்து வந்த டில்லிப் பேரரசு மெள்ள மெள்ளக் கலைந்து, சிறுசிறு குட்டி அரசுகளாகப் பிரிந்து கொண்டிருந்தது. லோடி வம்சத்தின் தனி ஆட்சி வெகு துரிதத்தில் பலஹீனப்பட்டுக் கொண்டிருந்ததைக் கவனிக்கத் தவறாத டில்லி நவாப் இப்ராஹீம், ஸங்கனுடைய ஆதிக்கத்தை ராஜபுதனத்தில் வெகு சீக்கிரத்தில் உடைக்காவிட்டால் ஏற்கெனவே எங்கும் துழாவிவரும் அவன் வலுவான கரம், டில்லியையும் தொடத் தயங்காது எனப் புரிந்துகொண்டான். ஆகவே, அதற்கான

இப்ராஹீம் லோடியின் முயற்சி அத்தனை எளிதில் பலன் தருவதற்கான மார்க்கம் துலங்கவில்லை. ஸங்கனின் ராஜ தந்திரத்தாலும், சிசோதயர்களின் கிளைக்குடி வீரர்களிடம் அவன் காட்டிய தயையாலும் யுத்தங்களில் சென்றபோதெல்லாம் போரில் முன்னணியில் நின்று பெருங்காயங்களைப் பெற்று உடல் பூராவும் தழும்புகளுடன் விளங்கிய காரணத்தாலும் ராஜபுதனம் பூராவும் அந்த மகா வீரனுக்குத் தலை தாழ்த்தியது. ''ராணா யுத்தத்திற்குப் புறப்பட்டால் அவனைச் சூழ்ந்து 80,000 குதிரை வீரர்களும் முடிசூடிய ஏழு மன்னர்களும் ஒன்பது 'ரால்'களும் ராவுல், ராவுத் முதலிய வர்க்கங்களின் 104 தலைவர்களும், 5,000 போர் யானைகளும் சென்றன'' என்று சரித்திரம் கூறுகிறது.

இத்தகைய பெரும்படையை, ராணா ஸங்கனே நேரில் அணிவகுத்து இஸ்லாமியப் படைகளை வேரறுக்கத் திட்டமிட்டான். இப்ராஹீம் லோடியும் மால்வா நவாபும் தங்கள் படைகளை அலை அலையாக ராஜபுதனத்தின் மேல் ஏவினார்கள். பதினேழு யுத்தங்கள் நடந்தன. பதினேழு யுத்தங்களிலும் ஸங்கன் இஸ்லாமியப் படைகளை ராஜபுதனத்துக்குள் நுழைய முடியாதபடி முறியடித்து விரட்டினான். பதினேழாவது யுத்தத்தோடு மால்வா நவாப் மாண்டார். ஆனால், இப்ராஹீம் லோடி மாளவில்லை. மனம் மட்டும் தளர்ந்திருந்தான். எப்படியும் கடைசியாக ஒரு கை பார்த்துவிடுவதென்ற தீர்மானத்தில் மஞ்சாளற்றங் கரையிலிருந்த பியானா என்ற நகரத்தை நோக்கிப் பெரும்படையுடன் வந்தான் இப்ராஹீம் லோடி. இதைக் கேட்டதும் ராணா ஸங்கனுக்குத் தூக்கிவாரிப் போட்டது.



'இப்ராஹீம் லோடி எதற்காகப் பியானாவைத் தாக்க உத்தேசிக்கிறான்? இது யார் யோசனையாயிருக்கும்?' என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டான். பிறகு, அந்தப்புரத்தில் சொர்ணாதேவியிடமும் கேட்டான். அவளுக்குச் சிறிதும் சந்தேகமில்லாததால் சட்டென்று பதில் சொன்னாள், ''கண்டிப்பாகச் சிலாதித்தன் யோசனையாகத் தானிருக்கும்'' என்று.

அந்தப்புரத்தின் கட்டிலுக்கெதிரே உலாவிய ஸங்கன், அவளை உற்றுநோக்கி, ''சொர்ணா, சிலாதித்தன் என் மனச்சாந்தியைக் குலைக்கும் எமன் என்பதும் உண்மை. வஞ்சகன் என்பதும் உண்மை. என்னிடம் பகைமையுள்ளவன் என்பதும் உண்மை. ஆனால், அவனும் ராஜபுத்ரன் என்பதை மறந்துவிடாதே'' என்று கூறினான்.

''அதை நான் மறக்கவில்லை, பிரபு'' என்றாள் சொர்ணாதேவி.

''எதிரிக்கு யோசனை சொல்லும் அளவுக்கு, நாட்டைக் காட்டிக் கொடுக்கும் அளவுக்கு எந்த ராஜபுத்ரனும் இழிவடையமாட்டான், சொர்ணா!'' என்று ஸங்கன் மீண்டும் அழுத்திச் சொன்னான்.

''அத்தனை நிச்சயமா உங்களுக்கு?'' சொர்ணாவின் கேள்வியில் கேலி இருந்தது.

''அந்த நிச்சயம் உனக்கில்லையா, சொர்ணா?'' என்று வினவினான் ஸங்கன்.

''இல்லை.''

''காரணம்?''

''மனிதனுடைய புத்தி விகாரத்தில் எனக்குள்ள நிச்சயம்.''

''விளங்கச் சொல்.''

''எப்பேர்ப்பட்ட உயர்குடியிலும் ஓர் இழிமகன் பிறப்பதுண்டு. இதற்கு அத்தாட்சிகள் மனித சரித்திரத்தில் அனந்தம்.''

''இருக்கலாம், சொர்ணா. ஆனால், ராஜபுதனத்தில் பிறந்தவன் சிலாதித்தன். அதுவும் சாதாரண வம்சத்திலல்ல, பரம்பரை பரம்பரையாக மேவார் அரியணையைக் காத்து நின்றுள்ள துவார் வம்சத்தில், ராய்சீன் தலைவன். இப்பொழுது என் படைத்தலைவன். அவன் என்னை அழித்து வாழலாம். ஆனால் ராஜபுதனத்தை அழித்து வாழ முடியாது'' என்று உறுதி நிரம்பிய குரலில் கூறினான் ஸங்கன்.

சொர்ணாதேவி இதற்கு உடனே பதில் சொல்ல வில்லை. பஞ்சணையின் ஓரத்தில் நன்றாகத் தள்ளி உட்கார்ந்து, ஸங்கனையும் பக்கத்தில் உட்காரும்படி கண்ணால் சைகை செய்தாள். அவள் கண்ணாணையை என்றும் மறுக்காத ஸங்கன், அவள் பக்கத்தில் உட்கார்ந்து கொள்ள, இடக்கையைத் தனக்குள் சிறைப்படுத்திக் கொண்ட சொர்ணா, ''மஹாராஜா! தங்கள் படைத் தலைவரிடம் தங்களுக்கு நம்பிக்கை பலமாயிருக்கலாம். ஆனால், மஞ்சளாற்றங் கரையை உங்கள் நாட்டு எல்லையாக, அதாவது நீங்கள் தாண்டக்கூடாத எல்லையாக சாருணீதேவி வகுத்திருக்கிறாளல்லவா?'' என்று மெள்ளக் கேட்டாள்.



''ஆம், சொர்ணா.''

''இந்த மர்மம் யாருக்குத் தெரியும்?''

''தபஸ்வினிக்குத் தெரியும், உனக்குத் தெரியும், எனக்குத் தெரியும்.''

''அவ்வளவுதானா?''

''ஆம்.''

''இல்லை, மகாராஜா! நமது சேடிகளுக்கும் தெரியும்.''

''எப்படித் தெரியும்?''

''எப்படித் தெரியுமோ, எனக்குத் தெரியாது, மகாராஜா! ஆனால் ஒரு நாள் நீங்கள் கொலு மண்டபத்துக்குச் செல்லும்போது திலகமிட திலகம் கொண்டுவரச் சேடியை அனுப்பினேன்...''

''உம்.''

''அவள் என் தந்தப் பேழையிலிருந்து சாருணீ தேவியின் மஞ்சள் காப்பைக் கொண்டு வந்தாள்.''

''உம்.''

''அதே சேடியுடன் சிலாதித்தன் பல முறைகள் நந்தவனத்தில் சிரித்து விளையாடிப் பேசுவதை நான் உப்பரிகையிலிருந்து பார்த்திருக்கிறேன்.''

இதைக்கேட்ட ராணா ஸங்கன் நீண்ட நேரம் சிந்தனையில் ஆழ்ந்தான். ராணியின் யோசனை எந்தத் திக்கில் ஓடுகிறது என்பதை அவன் நன்றாகப் புரிந்து கொண்டான். இருந்தாலும், அவள் வாயின் மூலமே அதை வரவழைக்கத் தீர்மானித்து, ''அப்படியானால் உன் ஊகந்தானென்ன, சொர்ணா?'' என்று வினவினான்.

சொர்ணாதேவி தன் அழகிய விழிகளை உயர்த்தி ஸங்கனை நன்றாகப் பார்த்தாள். பிறகு, மீண்டும் விழிகளை நிலத்தில் ஓட்டி, ''மகாராஜா! மஞ்சளாற்றைத் தாண்டினால் உங்களுக்குத் தீங்கு நேரிடும் என்பது தபஸ்வினியின் வாக்கு. பியானா மஞ்சளாற்றங்கரைக்கு அக்கரையிலிருக்கிறது. அங்கு உங்களைச் சந்திக்க இப்ராஹீம் லோடி தீர்மானித்திருக்கிறான். இந்த யோசனையை அவனுக்குக் கூறக்கூடியவன் சிலாதித்தன் ஒருவன்தான்'' என்றாள்.

ஸங்கன் மறுபடியும் மௌனம் சாதித்தான். கடைசியாகச் சரேலெனப் பஞ்சணையிலிருந்து எழுந்து, ''எப்படியும் வரும் போரைத் தவிர்க்க முடியாது, சொர்ணா! எதற்கும் தேவியின் மஞ்சள் காப்பை அணிந்து போருக்குச் செல்கிறேன். அது நெற்றிலிருக்கும் வரை யாரும் என்னை எதுவும் செய்ய முடியாது'' என்று கூறிவிட்டு, ராணியின் அந்தப்புரத்திலிருந்து வெளியே சென்றான்.

சொர்ணாதேவி அடுத்த சில நாட்கள் துக்கத்தின் வடிவமாக விளங்கினாள். ராணா இணையற்ற உறுதியுடன் இப்ராஹீம் லோடியைச் சந்திக்க பியானா சென்ற போது, மஞ்சள் திலகத்தைத் தன் கையாலேயே வைத்துத்தான் அனுப்பினாள். இருப்பினும், அவள் இதயத்தைப் பெரும் சோகம் சூழ்ந்து நின்றது. பிரயாண சமயத்தில் வேதியர் ஓதிய மங்கள ஸ்தோத்திரங்களும் 'ஜெயவிஜயீபவ' வாழ்த்தொலிகளும் ஓரளவு சாந்தி அளித்த போதிலும், பொதுவில் அவள் இதயத்தைத் துக்கமே சூழ்ந்து நின்றது.

சரித்திரப் பிரசித்திபெற்ற பியானா யுத்தத்தைப் பற்றிய தகவல்கள் அடுத்த பத்தாவது நாள் முதல் வரத்



தொடங்கின. எல்லாம் மங்களமான செய்திகள். மனத்தில் மகிழ்ச்சியை அள்ளித் தெளிக்கும் வீரச் செய்திகள். வீர ஸ்திரீயான சொர்ணாதேவி அவற்றைக் கேட்கக் கேட்க, இதயத்தைச் சூழ்ந்திருந்த சோகத்தை ஓரளவு துறந்தாள். பிரதி தினம் விடியற்காலையில் ராணாவின் கைப்பட ஓலையொன்று சொர்ணாதேவிக்கு வந்து கொண்டிருந்தது. ''சொர்ணா! இன்று என் படைகளுடன் மஞ்சளாற்றங் கரையின் இந்தப் பக்கத்தை அடைந்துவிட்டேன். அதில் ஓரிடத்தில் நான் மட்டும் தனித்து உட்கார்ந்தேன். எந்த இடம், சொல்?- ஸங்கன்'' என்றது முதல் ஓலை.

சொர்ணாவுக்கு அந்த இடம் கண்முன் எழுந்தது. தான் நீராடிய அந்த இடம்! ஸங்கன் புரவியுடன் வந்து அரைகுறை உடையுடனிருந்த தன்னைச் சந்தித்த அதே ஆற்றங்கரைத் துறை. பக்கத்தில்தான் அந்தத் தோப்பு. அங்கேதான் அவர் என்னை... மேற்கொண்டு நினைக்கக் கூச்சமாயிருந்தது அவளுக்கு. போர்ப்பாசறையிலும் கணவன் தன் காதலை மறக்கவில்லையென்பதை உணர்ந்து பெருமிதங் கொண்டாள்.

அடுத்தநாள் ஓலை அவளுக்குச் சற்றே வேதனையைத் தந்தது. ''மஞ்சளாற்றைத் தாண்டிவிட்டேன். இன்று மாலை பியானாவில் இப்ராஹீம் லோடியுடன் மோதுவேன். வெற்றி நிச்சயம். நெற்றியில் தேவியின் காப்பு இருக்கிறது. கவலைப்படாதே-ஸங்கன்.''

தேவியின் காப்பை ஸங்கன் மறக்கவில்லையென்பதை நினைக்க ஓரளவுக்கு சொர்ணாவுக்கு ஆறுதலாயிருந்தாலும், மஞ்சளாற்றை அவன் கடந்துவிட்டதில் அவள் பெரும் கவலையே கொண்டாள். அடுத்த நாள்

மற்றொரு ஓலை வந்தது. அது தந்தது கவலையா? மகிழ்ச்சியா? சொர்ணாவுக்கே புரியவில்லை.

"போர் முடிந்தது. இப்ராஹீம் லோடியை முறியடித்தாகிவிட்டது. இஸ்லாமியப் படைகள் இனித் தலையெடுக்க முடியாது. இப்ராஹீம் லோடியின் புதல்வனை ராணாவே தனிமையில் போராடிச் சிறைபிடித்திருக்கிறார். சீக்கிரம் மேவார் திரும்புகிறோம்-ராணா உத்தரவுப்படி சேனாதிபதி சிலாதித்தன்."

டில்லி அரசு முடிந்துவிட்டதை நினைத்து ஒரு கணம் பெருமகிழ்ச்சி கொண்டாள் சொர்ணாதேவி. அடுத்த கணம் 'இந்த ஓலையை அவர் ஏன் எழுதவில்லை? சிலாதித்தன் ஏன் எழுதவேண்டும்?' என்று எண்ணியதால், அவள் இதயத்தில் கவலையும் சூழ்ந்தது.

அந்தக் கவலையுடன் அடுத்த நான்கு தினங்களைக் கழித்தாள் சொர்ணாதேவி. ஐந்தாவது தினத்தில் நகராக்கள் பிரமாதமாக சப்திக்க, மக்கள் வெற்றி ஒலி வானைப் பிளக்கச் சித்தூருக்குள் நுழைந்த ராணா ஸங்கன், நேராகச் சொர்ணாதேவியின் அந்தப்புரத்துக்குச் சென்றான். அவன் வரவை எதிர்நோக்கி சர்வாபரண பூஷிதையாய் சொர்ண பிம்பம்போல் நின்றிருந்த சொர்ணாதேவி ஸங்கன் அறைக்குள் காலடி எடுத்துவைத்ததும் அவனை நோக்கி ஓடினாள். ராணாவின் வலக்கரம் அவளைச் சுற்றி வளைத்தது. இன்னொரு கரம் அவன் முதுகுப் பக்கத்திலேயே கிடந்தது. சொர்ணாதேவி ஆரம்பத்தில் அதைக் கவனிக்கவில்லை. ஸங்கன் வலக்கரத்தின் அழுத்திய பிடியில் துவண்டு இன்பமடைந்தாள். பிறகு



அந்த இன்னொரு கரத்தையும் தன்னைச் சுற்றி வளைக்கத் தன் வலக்கையால் இழுத்தாள். அவ்வளவு தான், அவள் உணர்ச்சிகள் திடீரென்று ஸ்தம்பித்தன. அவள் இழுத்தது முக்கால் கைதான். "மகாராஜா?" என்று வெளியே அலறினாள் சொர்ணாதேவி.

## அத்தியாயம்-15

# ஒற்றன் சொன்ன யோசனை

பியானா போரில் கால்பாகம் வெட்டுண்டுபோன தனது இடக்கையைக் கண்டு, "மஹாராஜா!" என்று சொர்ணா அலறியதும் பதிலுக்குச் சிரிக்கவே செய்தான் ஸங்கன். சாதாரண சமயத்தில் அமுதமயமாயிருக்கும் கணவன் சிரிப்பு, வேதனை நிறைந்த உள்ளத்தில் விளைவாக அன்று வேப்பங்காயாக இருந்ததால், சொர்ணாதேவி வெகுண்டு, "ஏன் சிரிக்கிறீர்கள், மஹாராஜா?" என்று சினத்துடன் துக்கமும் கொந்தளித்த குரலில் வினவினாள்.

ஸங்கனின் வலக்கரம் சொர்ணாதேவியை முன்னைவிடச் சற்று பலமாகவே அணைத்தது. "இந்தக் கை போனதற்கு எதற்காக அலறுகிறாய், சொர்ணா?" என்று மீண்டும் சிரித்துக் கொண்டே வினவினான்.

நீர் ததும்பிய அழகிய விழிகள் அவன் முகத்தை ஏறெடுத்துப் பார்த்தன. "ஒரு கையை இழந்தது பெரும் நஷ்டமாகப் படவில்லையா உங்களுக்கு?" என்று இதழ்கள் துடிப்புடன் சொற்களை உதிர்த்தன.

''ஆமாம்.''

''இப்பொழுது ஒரு கை போய்விட்டது. ஆனால், இன்னொரு கையாக நீ இருப்பாய். என்னுடைய முரட்டு விழிக்குப் பதில் உன் பங்கய விழி கிடைத்தது. என் முரட்டுக் கரத்துக்குப் பதில் இந்தத் தளிர்க்கரந்தான் இருக்கிறதே. இது லாபமில்லையா எனக்கு?'' என்ற ஸங்கன், அவளை ஆசையுடன் அணைத்தான்.

அவன் மொழிகளில் துலங்கிய அன்பும், குரலில் தொனித்த ஆசையும் சொர்ணாவை இந்திரலோகத்துக்குக் கொண்டு போயின. அத்துடன், கையிழந்து தன்னெதிரே சிரித்துக்கொண்டு நின்ற அந்த மண்டலாதிபதியைப் பரிதாபத்துடனேயே அவள் நோக்கினாள். ''நீங்கள் என்ன சமாதானம் சொன்னாலும் என் மனம் மாறாது. மஞ்சளாற்றங்கரையைத் தாண்டியதால்தான் உங்களுக்கு இக் கை போயிற்று. அதைத் தாண்டியதற்கும் பியானாவைப் போர் அரங்கமாக அமைத்ததற்கும் அந்தப் பாதகன் சிலாதித்தன்தான் காரணம்'' என்றாள் சொர்ணாதேவி.

ராணா ஸங்கன் அவளை அணைத்திருந்த வலக்கரத்தை நீக்கி, வழவழத்த கபோலங்களைத் தடவிக் கொடுத்துக் கொண்டே சொன்னான்: ''ராணி! சிலாதித்தன் இந்தப் போருக்குக் காரணமல்ல. இப்ராஹீம் லோடி என்னைச் சந்திக்கப் பியானாவில் காத்திருந்தான். ஆகவே நான் அவனை அங்கு சென்று சந்திக்க வேண்டியதாயிற்று. தபஸ்வினி சொன்னபடி மஞ்சள் காப்பை நெற்றியில் இட்டுக் கொண்டுதான் போருக்குச் சென்றேன். அதனால் பியானாவில் சரித்திரம் புகழும் வெற்றியே கிடைத்தது. இப்ராஹீம் லோடியின் மகனைச் சிறை செய்து கொண்டு



வந்திருக்கிறேன். இனி இப்ராஹீம் லோடியோ அவன் வம்சமோ தலையெடுக்க முடியாது. அந்தகைய போரில் கையை இழந்தேன். அதுவும் தேவியினருளால் இடக்கை போயிற்று. வாளும் வேலும் ஏந்தும் வலக்கை அப்படியே தானிருக்கிறது. போர் என்றால் லாபம், நஷ்டம், ஜெயாபஜயம் சகலத்தையுந்தானே எதிர்பார்க்க வேண்டும்? மகத்தான வெற்றி மேவாருக்குக் கிடைத்திருக்கிறது. அந்த வெற்றியைச் சம்பாதிக்கப் போர் அரங்கின் முகப்பில் போரிட்டவன் கைகளில் ஒன்று போவது சாதாரண நஷ்டம். இதற்காக மனம் நோவது அவசியமில்லை. அதுவும் வீர ஸ்திரீயான நீ, இந்த அற்ப நஷ்டத்திற்கு ஏங்குவதும் அழகல்ல.''

ராணா ஸங்கன் இந்த வார்த்தைகளை அமுதத்தில் குழைத்துத்தான் கொட்டினான். ஆனால் சொர்ணாதேவிக்கு மட்டும் அவற்றால் சாந்தி ஏற்படவில்லை. பியானாவில் இப்ராஹீம் லோடி வந்ததற்கும், ஸங்கன் மஞ்சளாற்றங் கரையைத் தாண்ட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதற்கும் சிலாதித்தனே காரணமென்று அவள் மனத்தில் ஏதோ சொல்லிக்கொண்டேயிருந்தது.

'ராணா கண்ணை இழந்தது சகோதரர் சண்டையால். திட்டமான ஏற்பாடு ஏதுமில்லாமல், சகோதரன் ஆத்திரத்தில் எய்த அம்பால். ஆனால் ராணாவின் கை போனது அத்தகைய எதிர்பாராத சம்பவத்தாலல்ல. ராணாவின் உயிரைக் கவரச் செய்யப்பட்ட ஏற்பாடு. தேவியின் மஞ்சள் திருக்காப்பினால் கையுடன் நின்று விட்டது. இதில் ஏதோ ஆழ்ந்த சூழ்ச்சியும் திட்டமும்

இருக்கின்றன' என்று சொர்ணாதேவி அடிக்கடி தனக்குள் சொல்லிக் கொண்டிருந்தாள்.

வருஷங்கள் ஓடின. ராணா ஸங்கனுக்கு ஏழு குழந்தைகள் பிறந்து இரண்டு தவறியும் விட்டன. மற்ற குழந்தைகளின் மலர் முகத்திலும் கணவனின் பரந்த புகழிலும் அன்பிலும் சொர்ணாதேவி தன் துயரங்களையும் உள்ளூற உறுத்திக் கொண்டிருந்த கவலையையும் ஓரளவு மறந்தே இருந்தாள். அப்படி அவள் இதயத்துக்குச் சாந்தியைக் கொடுக்கும் சூசகங்களும் நிரம்ப இருக்கவே செய்தன. இரண்டு குழந்தைகளை அவள் இழந்தாலும் மூன்றாவது மகனான ரத்னசிம்மனும் நான்காவது மகனான விக்ரமஜித்தும் இரு பெரும் சிம்மங்களாக வளர்ந்து, போரிலும் வல்லவர்களாகித் தந்தையுடன் பல போர்களில் பங்கும் எடுத்துக்கொண்டார்கள்.

கணவன் புகழிலும் மக்கள் வீரத்திலும் விரிந்து கிடந்த மேவார் சாம்ராஜ்யத்திலும், என்றுமில்லாதபடி ராஜபுத்ர ஐக்கியத்திலும் சாந்தியடைந்த அவள் உள்ளத்தைக் கலக்க, மீண்டுமொரு பெரும் பகைவன் ராஜபுதனத்துக்கு எழுந்தான்.

மொகலாய சாம்ராஜ்யத்தை இந்தியாவில் ஸ்தாபித்த பாபர், பர்கானா சிற்றரசிலிருந்து இந்தியாவை நோக்கிக் கிளம்பினான். இந்தியாவுக்கு வந்த பாபர், அவனுக்குமுன் வந்த தைமூர் போலும் செங்கிஸ்கான் போலும் பெரும் படைகளுடன் வரவில்லை. சொந்த நாட்டில் அவர்களைப் போல செல்வத்தில் பிறந்து செல்வத்தில் வளர்ந்தவனுமல்ல. வறுமையின் வயிற்றில் பிறந்தவன். அதன்



சோதனைகளில் உழன்றவன். கேவலம், இரண்டாயிரம் வீரர்களைத் திரட்டிக்கொண்டுதான் ஹிந்துஸ்தானத்தின்மீது இறங்கினான். ஆனால், தைமூரும் செங்கிஸ்கானும் சாதிக்க முடியாததை பாபர் சாதித்தான். அவர்கள் நிறுவ முடியாத பேரரசை பாபர் ஹிந்துஸ்தானத்தில் நிறுவினான். அந்தப் பேரரசுக்கு விதை விதைத்தது, மஞ்சளாற்றங்கரைக்குப் பெரிதும் அப்பாலுள்ள கனுவா என்ற இடத்தில் நடந்த போர். விதை விதைத்தது பாபரின் வீரம் மட்டுமல்ல. மற்றொரு சதியும் அதில் கலந்து கொண்டது.

இரண்டாயிரம் வீரர்களுடன் ஹிந்துஸ்தானத்தின் மீது இறங்கிய பாபர், வெகு சீக்கிரம் இப்ராஹீம் லோடியை முறியடித்து, டில்லியையும் ஆக்ராவையும் கைப்பற்றி, ஆக்ராவிலிருந்து ராஜபுதனத்தை நோக்கிக் கிளம்பினான். ராணா ஸங்கன் ஆதிக்கம் ராஜபுதனத்தில் நிலைத்திருக்கும் வரையில் தான் லோடிகளிடமிருந்து கைப்பற்றிய அரசு தனது அல்ல என்பதை நன்றாகப் புரிந்து கொண்ட பாபர், பெரும்படை திரட்டி ராணா ஸங்கனைச் சந்திக்க மஞ்சளாற்றை நோக்கிக் கிளம்பினான். பாபரின் ஏற்பாடுகளை அவ்வப்பொழுது ஒற்றர்களால் கவனித்து வந்த ராணா ஸங்கனும், ராஜ புதனத்தின் படைகளைத் திரட்டிக்கொண்டு பியானாவுக்குக் கிளம்பத் தயாரானான். அரண்மனைக்கு வெளியேயிருந்த துந்துபிகள் ராணா புறப்படும் நேரம் நெருங்கிவிட்டதை அறிவித்தன. சங்கங்கள் சப்தித்தன.

அந்தப்புரத்தில் பூரண கவசத்துடன் விடைபெற நின்ற ராணா ஸங்கனை மிகுந்த சஞ்சலத்துடன் நோக்கிய சொர்ணாதேவி, தன் வலக்கை பெருவிரலால் அவன் நெற்றியில் சாருணிதேவியின் மஞ்சள் காப்பைப் பதித்தாள்.

''ஸங்கன் படைகளை நடத்துவதில் இணையற்றவன்.''

''அதுவும் ஒரு காரணம். அடுத்தபடி?''

பதில் சொல்லத் தெரியாமல் விழித்த படைத் தலைவனை நோக்கி, ஆசனத்தை விட்டெழுந்த பாபர் சொன்னான், ''நமது பாபங்கள் காரணம்'' என்று.

''பாபமா, நவாப்!'' ஆச்சரியத்துடன் கேட்டான் மொகலாயர் படைத்தலைவன்.

''அம். நான் குடிக்கிறேன். நீ குடிக்கிறாய், வீரர்கள் குடிக்கிறார்கள்'' என்றான் பாபர்.

''ஆமாம், நவாப்! நீண்ட நாட்களாகக் குடிக்கிறார்கள்'' என்றான் படைத்தலைவன்.

''இஸ்லாம் குடியை அனுமதிக்கிறதா?'' என்று சீறினான் பாபர்.

''இல்லை.''

''குர்ஆணை சமீபத்தில் ஓதினோமா?''

''இல்லை.''

''அவை இரண்டுந்தான் தோல்விக்குக் காரணம். இன்று முதல்நான் தாடி வளர்க்கிறேன். குடியை நிறுத்துகிறேன். ஆண்டவனை நினைக்கிறேன். அவர்வழி காட்டுவார்'' என்றான் பாபர்.

அன்றிரவே பாபரின் பாசறையில் குடிக் கலயங்கள் உடைக்கப்பட்டன. பாபர் குர்ஆனிலும் ஆண்டவனைப் பிரார்த்திப்பதிலும் இறங்கினான். அன்றிலிருந்து ஒரே வாரத்தில் ஒளியும் கிடைத்தது. ஒளிவந்தது ஓர் ஒற்றன்



மூலமாக. வந்த ஒற்றன் இரவில் வந்தான். இருளைவிட கரியைப் பூசக்கூடிய போர் முறையைச் சொன்னான்.

பாபர் ஒரு விநாடிதான் சிந்தித்தான். பிறகு. அவன் கண்கள் புத்தொளி பெற்றன. ''சரி சரி! ராணாவைக் கனுவாவில் சந்திக்கிறேன்'' என்றான் திடமானகுரலில். வந்த ஒற்றன் சிரித்தான். பாபரும் பெரிதாக நகைத்தான், நகைத்தது மட்டுமல்ல, ஒற்றன் முதுகிலும் பெரிதாகத் தட்டிக்கொடுத்தான்.

### அத்தியாயம்-16

## விதி கொண்ட வெற்றி!

**பி**யானா நகரத்துக்கு வெளியேயிருந்த கூடாரத்தின் முகப்பில் நின்று, சற்றே கவலையோடிய முகத்துடன் வடகிழக்குப் பகுதியில் தனது ஒற்றைக்கண்ணை ஓட்டிய ஸங்கன், நீண்டநேரச் சிந்தனைக்குப் பிறகு, பக்கத்திலிருந்த படைத் தலைவனை நோக்கி திடீரெனத் திரும்பி, ''மொகலாயன் கனுவாவை நோக்கி வருகிறானென்பது நிச்சயந்தானா?'' என்று வினவினான்.

மற்ற படைத்தலைவர்கள் பதில் சொல்லுமுன்பு துவார் குலத் தலைவனும், மேவார் தளபதியுமான சிலாதித்தன் ராணாவை நோக்கி, ''மகாராஜாவுக்கு எனது வார்த்தையில் நம்பிக்கையில்லையா?'' என்று வினவினான்.

ராணாவின் ஒற்றைக் கண் அவசியத்துக்கு அதிகமாகவே சிலாதித்தன் முகத்தை ஊடுருவி நோக்கியது.

பிறகு, உதடுகளிலிருந்து உதிர்ந்த சொற்களில் சந்தேகம் பெரிதும் தொனித்தது. ''நம்பிக்கை இல்லாமல் இல்லை சிலாதித்தா, ஆனால், பாபரின் போக்கு விசித்திரமாய் இல்லையா உனக்கு?'' என்று கேட்டான் லங்கன்.

''என்ன விசித்திரம்... மகாராஜாவுக்குத் தோன்றுகிறதோ?'' என்று சிலாதித்தன் வினவினான், ராணாவின் மனத்தில் ஓடும் எண்ணங்களைப் புரிந்துகொள்ள முடியாமல்.

''பாபர் தற்சமயம் இருக்குமிடத்திலிருந்து பியானாவுக்கு வர கனுவாவுக்குச் செல்ல வேண்டிய அவசியமில்லை.''

''ஏன்?''

''பாபர் தளத்திலிருந்து நேர் தெற்கில் நாமிருக்கிறோம். கனுவா சற்றுத் தள்ளி இருக்கிறது, பியானாவுக்கு நேராக வரச் சௌகரியம் இருக்கும்போது, பாதையிலிருந்து விலகி இருக்கும் கனுவாவை நோக்கி ஏன் பாபர் திரும்புகிறான்?'' இப்படிக் கேட்ட ராணா லங்கன் மீண்டும் சிலாதித்தனைக் கூர்ந்து நோக்கினான்.

சிலாதித்தன் முகத்தில் எந்தவித உணர்ச்சியும் தெரியவில்லை. ஏதோ சிறிது குழப்பம் உள்ளூற ஓடுவதைக் கண்கள் மட்டும் சுட்டிக்காட்டின. அதைக் கவனித்த லங்கன் மீண்டும் கேட்டான், ''என்ன குழப்பம் சிலாதித்தா? காரணம் புரியவில்லையா உனக்கு?'' என்று.

சிலாதித்தன் நன்றாக ராணாவை ஏறெடுத்துப் பார்த்தே பதில் சொன்னான், ''புரிகிறது, மகாராஜா'' என்று.

''என்ன புரிகிறது?''



''பாபர் நம்மைப் பியானாவில் சந்திக்க இஷ்டப்படவில்லை என்பது புரிகிறது.''

''அது மட்டுமா?''

''வேறென்ன காரணம் இருக்க முடியும்?''

''மஞ்சளாற்றங்கரையை விட்டு நீண்டதூரம் நம்மை இழுக்கவும் முயலுகிறான்.''

''மஞ்சளாற்றங்கரையைப் பற்றி அவனுக்கு என்ன தெரியும்?''

''அவனுக்குத் தெரியாவிட்டாலென்ன. யாராவது சொல்லிக் கொடுத்திருக்கலாம்.''

''யார் சொல்லிக் கொடுத்திருப்பார்கள்?'' என்று முகத்தில் குழப்பம் துளிர்விடக் கேட்டான் சிலாதித்தன்.

''அது கனுவாவில் தெரியும்'' என்று கூறிய லங்கன், மற்ற படைத்தலைவர்களை நோக்கி, ''படைத்தலைவர்களே, நமக்குள்ளேயே ஒரு விஷப்பாம்பு இருக்கிறது. ஆகவே எச்சரிக்கையாயிருங்கள், எதிரிக்கு இங்கிருந்து உளவு சொல்கிறவர்கள் இருக்கிறார்கள். ஆகவே, படைகள் கனுவாவை நோக்கி ஜாக்கிரதையாக நகரட்டும்'' என்று உத்தரவிட்டான்.

இதைக் கேட்ட சிலாதித்தன் மெள்ள இடையே புகுந்து ''மகாராஜா! எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது...!'' என்று ஆரம்பித்தான்.

''என்ன சிலாதித்தா?'' என்று வினவினான் லங்கன்.

''நாம் பியானாவை விட்டுப் புறப்படாமலே இருந்தால் என்ன? நாம் இங்கு தாமதித்தால் பாபர்

கனுவாயை விட்டு இங்கு வந்துதானே ஆகவேண்டும்?'' என்றான்.

''ஆம். சிலாதித்தா, வந்துதான் ஆகவேண்டும். ஆனால், நாம் இங்கு தாமதிக்க முடியாது.''

''ஏன்?''

''மேவார் மரபில் பிறந்த தோஷம். எதிரி அறைகூவும் இடத்திற்குச் செல்வது சிசோதயர் பரம்பரை வழக்கம். கனுவாவிலேயே பாபரைச் சந்திப்போம். படைகள் புறப்படட்டும்'' என்று ஆணையிட்ட ராணா, மேற்கொண்டு சிலாதித்தனை திரும்பியும் பாராமல் கூடாரத்துக்குள் சென்று, கவசத்தை அணிந்து தன் பெரும் பட்டாக் கத்தியையும் இடுப்பில் வரிந்து கட்டிக் கொண்டு, இடுப்பிலிருந்த கச்சையிலிருந்து தந்தப் பேழையை எடுத்துத் தேவியின் மஞ்சள் காப்பையும் நெற்றியிலணிந்து வெளியே வந்தான்.

அடுத்த சில நிமிஷங்களில் போர்த்தாரைகள் ஊதின. ராஜபுதனத்தின் பெரும்படைகள் சுடும் பாலைவனத்தின் மணலில் பரந்து ஊர்ந்தன. யானைகளின் பெரும்படை நடுவில் செல்ல, காலாட்கள் பின் தொடர, இரண்டு பக்கங்களிலும் அண்ட பேரண்ட பட்சியின் பெரும் இறகுகளைப் போல் குதிரைப்படைகள் விரைய, நடுவில் தன் பெரும்புரவியில் அமர்ந்து சென்ற ஸங்கன் சுற்றும் முற்றும் தன் படையமைப்பையும் அதன் சக்தியையும் கண்டு கொண்ட ஆனந்தத்தோடு, ராஜபுதனத்தின் அந்த மாபெரும் படை அழியாமல் பாதுகாக்க சாருணீதேவியை மனத்துக்குள் தியானிக்கவும் செய்தான். அந்தத் தியான



சமயத்திலும் அவன் மனத்தில் சிறிது சஞ்சலமிருந்தது. அந்தச் சஞ்சலத்துக்குக் காரணம் புரியாமலே கனுவாவை அடைந்த ராணா, அங்கு கூடாரமடித்துத் தங்கினான். அன்றிரவு முழுவதும் உள்ளத்தில் சஞ்சலம் மேலிட்டதால் கூடாரத்தை விட்டுக் கிளம்பி, படை அமைப்பைப் பார்த்துச் சுற்றி வந்த ராணா, மறுநாள் போருக்குத் தயாராகிக் கிளம்பிய பொழுதுதான் சஞ்சலத்துக்குக் காரணத்தைப் புரிந்து கொண்டான். படைத்தலைவர்களிடம் எதிரியைத் தாக்க வேண்டிய முறையைக் கூறி அனுப்பி விட்டுக் கவசமணிந்து கச்சையை எடுத்த ஸங்கன், அதில் சொர்ணாதேவி கொடுத்த தந்தப்பேழை இல்லாததை அறிந்தான். கூடாரமெங்கும் பேழையைத் தேடிய ராணா, அது கிடைக்காததால், வெளியிலிருந்த வீரனொருவனை அழைத்து நானில்லாதபோது கூடாரத்துக்குள் யார் வந்தது?'' என்று கடுங்கோபத்துடன் வினவினான்.

''படைத்தலைவர் வந்து போனார், மகாராஜா'' என்று நடுக்கத்துடன் கூறினான் வீரன்.

''எந்தப் படைத் தலைவர்?''

''சிலாதித்தர்.''

ஸங்கன் புரிந்துகொண்டான். ''சரி, வெளியே போ!'' என்று சொல்லி வீரனை வெளியே அனுப்பியதும் தலையைக் கீழே தாழ்த்திப் பெருமூச்சு விட்டான். ''மஞ்சளாற்றைத் தாண்டி நீண்ட தூரம் வந்துவிட்டேன் தாயே, உன் மஞ்சள் காப்பையும் இழந்தேன், முடிவு புரிகிறது. போரில் வெற்றி கொண்டால் இந்தச் சடலம் உன் சந்நிதிக்கு வரும். இறந்தால் என் ஆத்மா உன் சந்நிதியை

அடையும். எப்படியும் உன் சந்நிதிக்கு வருகிறேன்'' என்று சாருணீதேவியை நினைத்துச் சில விநாடிகள் ஸ்மரித்த ஸங்கன், போருக்குக் கிளம்பினான்.

கனுவாவின் போர் விவரங்களை கர்னல் டாட் வெகு அழகாகச் சொல்லியிருக்கிறார். இருமுறை முறியடிக்கப் பட்ட பாபர், மூன்றாம் முறை எப்படி வெற்றியடைந்தான் என்பதை ஒளிவு மறைவில்லாமல் சொல்கிறார். ''போர் எப்படி முடியுமோ என்பதைப்பற்றி பாபர் சந்தேகப் பட்டுக்கொண்டிருந்த சமயத்தில், ராணாவின் சைன்னியங் களின் இடப்பகுதியை நடத்திக் கொண்டிருந்த துவார் வம்சத் தலைவனான சிலாதித்தன், திடீரெனத் தனது குதிரைப்படைகளுடன் சென்று, எதிரிப்படைகளுடன் சேர்ந்துகொண்டு, ராணாவின் படைகளை எதிர்த்தான். பாபரின் வீரம் சம்பாதிக்க முடியாத வெற்றியை ராஜபுத்ரனின் சதி சம்பாதித்தது'' என்கிறார் கர்னல் டாட். மகா வீரனொருவனின் கடைக்காலத்தைப் பற்றி எழுதிய அந்த ஆசிரியர், ராணா வாழ்க்கையில் கண்ட அந்த ஒரு தோல்வியிலும் அவன் புகழே ஓங்கி நின்றது என்பதையும் விவரிக்கத் தவறவில்லை.

ராணாவின் தோல்விக்குக் காரணம் சதி என்று சரித்திர ஆசிரியர்கள் சொன்னார்கள். ஆனால், தபஸ்வினி, விதியென்று அதைச் சொன்னாள். கனுவாவிலிருந்து பின்வாங்கிய ஸங்கன், ''பாபரை முறியடிக்காமல் சித்தூருக்குள் புகமாட்டேன்'' என்று பிரதிக்ஞை செய்து, மேவாரின் எல்லையிலிருந்த பஸ்வாவில் தங்கினான். பஸ்வாவில் கூடாரத்தில் தேகத்தில் எண்பது காயங்களுடன்



படுத்துக் கிடந்த-அம்மகாவீரனைப் பார்த்து தபஸ்வினியின் கண்களில்கூட இரு நீர்த்துளிகள் எழுந்து கன்னங்களில் உருண்டோடின. அவன் பஞ்சணை ஓரமாக உட்கார்ந்திருந்த சொர்ணாதேவியின் முகத்தில் துக்கக் குறியுடன் பெருமையும் துளிர் விட்டுக் கொண்டிருந்தது. அவள் கரங்களில் ஒன்று ராணாவின் வலக்கையில் சிறைப்பட்டுக் கிடந்தது. அவர்கள் தனிமையில் இல்லை. அந்த இரு பெண்களையும் ராணாவையும் சுற்றி, கவசமணிந்த ராஜபுதனப் பெருந்தலைவர்கள் நின்றிருந்தார்கள்.

ராணாவின் கண்கள் கூடாரத்தைச் சுற்றி வளைத்தன. பிறகு உதடுகள் அசைந்து சொர்ணாதேவியின் காதில் ஏதோ முணுமுணுத்தன. அதைக் கேட்டதும் பஞ்சணைக்கு அருகில் வரும்படி சொர்ணாதேவி தபஸ்வினியை அழைத்தாள். நீர்த்துளிகள் உருண்டோடிய கபோலங் களுடன் அருகில் வந்த தபஸ்வினியை பார்த்த ஸங்கன், சற்று சக்தியை வரவழைத்துக்கொண்டு ''தாயே, தபஸ்வினி யான தங்கள் கண்களில் நீர் வரக் கூடாதே!'' என்றான்.

''ஆம் ஸங்கா! வரக்கூடாது. ஆனால், நம் கட்டுப்பாட்டுக்குள் அடங்காத நேரங்களும் வாழ்க்கையில் உண்டு'' என்றாள் தபஸ்வினி, தழுதழுத்த குரலில்.

''உண்டு, தாயே. அதை நான் பியானாவிலும் கனுவாவிலும் அறிந்தேன்'' என்று சொன்ன ஸங்கன் இதழ்களில் புன்முறுவல் அரும்பியது.

''பியானாவை விட்டு நீ வெளியேற வேண்டியதா யிற்று. ஆகவே மஞ்சளாற்றைச் சுட்டி, தேவி உனக்களித்த எல்லைப் பாதுகாப்பு அகன்றது. கனுவாவில் உன்

தந்தப்பேழை களவு போயிற்று. அங்கு தேவியளித்த மற்றொரு கவசமும் பிரிந்தது.''

''ஆம், தாயே, சதியால்...''

''இல்லை, ஸங்கா! விதியால் என்று சொல், சதியை விளைவித்ததும் விதிதான். விதி உந்தும்போது நம்மைப் பாதுகாக்கும் சக்திகள் நம்மைவிட்டு விலகுகின்றன. விதிக்கு நீ ஆட்பட்டாய். தேவியின் திருவுள்ளம் இப்படி. இந்த நாடகத்தில் சிலாதித்தன் ஒரு கருவி. அவன் சிந்தையில் சதி உதித்ததும், ராஜபுதனத்தின் பெருந் தோல்விக்கு அவன் காரணமாயிருந்ததும் விதியின் செயல்கள்.''

சொர்ணாதேவி தபஸ்வினியை ஆச்சரியத்துடன் ஏறெடுத்துப் பார்த்தாள். தபஸ்வினி தன் கண்ணீரைத் துடைத்துக்கெண்டு சொன்னாள்: ''மகாராணி! உன் உள்ளத் தில் ஓடும் எண்ணம் எனக்குப் புரிகிறது. சிலாதித்தன் செய்கையை நான் ஆதரிப்பதாக நினைக்கிறாய். ஒரு காலுமில்லை. ஹிந்து தர்மத்தின் ஹிந்துஸ்தானத்தின் விரோதிகளைசாருணீதேவியின் அடிமையான நான் எப்படி ஆதரிக்க முடியும்? ஆதரிக்கவில்லை, ராணி. ஆனால் கேவலம், கொசுவுக்குச் சமானமான சிலாதித்தன் மேவாருக்குத் தீங்கிழைத்து விட்டான் என்பதை நான் ஒப்புக் கொள்ளவில்லை. அவ்வளவுதான். இந்தத் தோல்வியிலும் ராணாவின் புகழ் மங்காது. சரித்திரம் இதையும் ராணாவின் வெற்றியாகவே சொல்லும். ராணாவின் வீரத்துக்குச் சாட்சிகள் என்பது. இதோபார்!''



இதைச் சொல்லி, ராணாவின் உடல் பூராவும் இருந்த என்பது காயங்களைச் சுட்டிக்காட்டிய தபஸ்வினி, ''சொர்ணாதேவி, இத்தகைய ஒரு மகாவீரன் சிசோதயர்கள் வம்சத்தில் பிறந்தது கிடையாது. இத்தகைய வீர புருஷனை, கேவலம், சிலாதித்தனா வீழ்த்த முடியும்? முடியாது ராணி, முடியாது. தேவி விதித்தவிதி இதைச் சாதித்திருக்கிறது. அவள் சங்கல்பத்தினாலேயே சரியான சந்தர்ப்பத்தில் அவள் அளித்த பாதுகாப்பும் ராணாவை விட்டு நீங்கியது'' என்று சொல்லித் தனது மடியிலிருந்து தேவியின் மஞ்சள் காப்பை எடுத்து, ராணாவின் நெற்றியில் இட்டாள். பிறகு, தலை தாழ்த்திக் கண்மூடி மந்திரங்களை ஜபித்தாள். சொர்ணா தேவியின் கண்கள் நீர்த்திரையில் மூடிக்கிடந்ததால், ராணாவின் உதடுகள் தேவி மந்திரத்தை இருமுறை உச்சரித்து நின்று விட்டதைக் கூடக் கவனிக்க முடியவில்லை அவளால். அடுத்த இரண்டு விநாடிகளுக்கு தபஸ்வினியின் உதடுகளிலிருந்து உதிர்ந்த தேவியின் தியான சுலோகங்கள் மட்டும் அந்தக் கூடாரத்தின் மௌனத்தைப் பிளந்தன. தியானத்தை முடித்து ராணாவின் முகத்தைக் கவனித்த தபஸ்வினி, ''முடிந்துவிட்டது. விதியின் சாதனை முடிந்துவிட்டது. மஞ்சள் காப்பு சாந்தியை அளித்து விட்டது'' என்று சொல்லிக் கொண்டு மெள்ள கூடாரத்தை விட்டு வெளியேறினாள்.

நிறைந்தது